ஜூலை 2005

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

62



30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானம்**

**ஒளி – 06 சுடர் – 02**

**பகிர்தலின்
மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்.**

ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

ஓவியர்கள் :
**புஷ்பா
ஜெயகாந்தன்
நா. ஆனந்தன்**

தலைமை அலுவலகம் :
**19/7, பேராதனை வீதி, கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்
ஞானம் கிளை அலுவலகம்
3—B, 46வது ஒழுங்கை,
கொழும்பு — 06.
தொலைபேசி : 011-2586013
0777-306506
தொலைநகல் : 011-2586013
E-mail : editor@gnanam.info
Web : www.gnanam.info**



# இதழினுள்ளே ........


| | |
|---|---|
| • இ. இராஜேஸ்கண்ணன் | 6 |
| • முருகபூபதி | 13 |
| • கவிஞர் ஏ. இக்பால் | 16 |
| • நல்லைக்குமரன் | 18 |
| • விமல் குழந்தைவேல் | 19 |
| • புதினப்பித்தன் | 24 |
| • த. சிவசுப்பிரமணியம் | 25 |
| • மும்தாஸ் ஹபீள் | 29 |
| • திருமலை வீ. என். சந்திரகாந்தி | 30 |
| • தே. சங்கீதா | 37 |
| • மாவை வரோதயன் | 38 |
| • ஆறுமுகம் தங்கவேலாயுதம் | 39 |
| • இரா. நெல்சன் மோகன்ராஜ் | 41 |
| • தேவானந்த் | 42 |
| • ச. முருகானந்தன் | 47 |
| • செங்கைஆழியான் க. குணராசா | 48 |
| • வே. தினகரன் | 51 |
| • கே. எஸ். சிவகுமாரன் | 53 |
| • வதிரி சி. ரவீந்திரன் | 55 |
| • த. சிவசுப்பிரமணிம் | 57 |
| • கலாநிதி துரை. மனோகரன் | 60 |
| • நூல்மதிப்புரை | 63 |
| • வாசகர் பேசுகிறார் | 69 |


முகப்போவியம் : **புஷ்பா**

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். **– ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை


வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

## மாணவப் பருவத்தில் வாசிப்புப் பழக்கத்திற்கான தூண்டல்

சக்தி தொலைக்காட்சியில் பாடசாலை மாணவர்களின் பேச்சுத் திறனை வெளிக் கொணரும் 'களம்' என்ற விவாத அரங்கு நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.

சமீபத்தில் பதினாறு பாடசாலைகள் பங்குபற்றிய இறுதிக்கட்ட நிகழ்ச்சியில் நடுவராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. என்னுடன் வேறு இரு கல்விமான்களும் நடுவர்குழுவில் இருந்தனர். அந்த விவாத அரங்கில் கொழும்புப் பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் மலையகப் பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவிகளும் பங்கேற்றனர்.

'புகலிட இலக்கியம் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது' என்பது விவாதத்தின் தலைப்பு. இதனை ஒட்டியும் வெட்டியும் மாணவர்கள் விவாதித்தனர்.

இருபகுதியினரும் பெரும் ஆவேசமாகப் பேசினர். ஆணித்தரமாகத் தமது கருத்துக்களை முன்வைத்தனர். உணர்ச்சி பொங்க மேசையில் குத்தினர். நெற்றி வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றியபடி "நடுவர்களே" என அடிக்கடி விளித்துத் தமது நியாயங்களை முன்வைத்தனர்.

நானும் என்னுடன் சக நடுவர்களாகக் கடமையாற்றியவர்களும் அசடுவழிய ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தோம். காரணம், கொடுக்கப்பட்டிருந்த தலைப்பைப் பற்றிய விளக்கம் அந்த ஆறு மாணவர்களுக்கும் இருக்கவில்லை.

விவாதத்தின்போது புகலிட இலக்கியம் என்றால் என்ன? நவீன இலக்கியம் என்றால் என்ன? எனக் கேள்விகளை எழுப்பி அவர்களுக்குத் தெரிந்த புதுப்புது வியாக்கியானங்களைக் கொடுத்துத் தமது வாதங்களை முன்வைத்தனர்.

புகலிட இலக்கியம் என்பது தமிழ் நாட்டிலிருந்து நமது நாட்டுக்குள் புகுந்து கொண்ட இலக்கியம் என்ற கருத்தை ஒரு மாணவி கூறினார். எதிரணியில் பேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் நவீன இலக்கியம் பற்றிக் குறிப்பிடும்போது கடந்த பத்து வருடங்களில் நமது நாட்டில் தோன்றிய இலக்கியங்களே நவீன இலக்கியங்கள் என்றான்.

பதினாறு பாடசாலைகள் கலந்துகொண்ட விவாத அரங்கில் இறுதிச் சுற்றுவரை தேர்வான மாணவர்களின் சமகால இலக்கியம் பற்றிய அறிவு இத்தகையதாக இருந்தது. குறிப்பிட்ட இந்தக் 'களம்' நிகழ்ச்சியைப் பலரும் பார்த்திருக்கக்கூடும்.

இது ஒரு சாதாரண விடயம் அல்ல ; அதிர்ச்சி தரும் விடயம். ஈழத்து இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய எதிர்காலச் சந்ததியினர், சமகால இலக்கியம் பற்றி எதுவுமே தெரியாதவர்களாகத் திகழ்கின்றனர்.

இதற்குக் காரணம் என்ன?

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் முற்றுமுழுதாக அருகிவிட்டது. பாடத்திட்டத்தில் உள்ள நூல்களைவிட வேறு நூல்களை மாணவர்கள் வாசிப்பதாகத் தெரியவில்லை. வாசிக்கவேண்டிய ஒரு 'தேவை' ஏற்பட்டால் மட்டுமே ஒன்றை வாசிப்பது என்ற நிலைமை இன்று தோன்றியுள்ளது. இது ஓர் ஆரோக்கியமான சூழல் அல்ல.

வாசிப்பு என்பது அறிவை வளர்ப்பதற்கு; ஆளுமையை வளர்ப்பதற்கு என்ற உண்மை மாணவ மட்டத்திலேயே உணர்த்தப்படவேண்டும். 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்ற முதுமொழி மாணவர் மனங்களில் ஆழமாக ஊன்றப்படவேண்டும்.

இதில் ஆசிரியர்களின் பங்கு மிகமுக்கியமானது. ஆசிரியர்கள் கூறுவதை மாணவர்கள் ஓரளவாவது கேட்டு நடப்பர். வாசிக்கத் தகுந்த சிறந்த நல்ல நூல்களை எடுத்துக் கூறி அவற்றை வாசிக்கும்படி மாணவர்களைத் தூண்ட வேண்டும். மறுமுறை அவர்களைச் சந்திக்கும்போது அந்த நூல்களை வாசித்தீர்களா எனக் கேட்கவேண்டும். அந்த நூல்களில் அவர்கள் கண்ட சிறப்புக்கள் ரசித்த பகுதிகள் பற்றிக் கேட்கவேண்டும். இப்படிச் செய்வது மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு தூண்டலாக அமையும். இத்தகைய தூண்டல்கள் வாசிப்பதற்கான 'தேவை'யை ஏற்படுத்தும். இதே வேளை சிறந்த நல்ல நூல்களைப் பாடசாலை நூல் நிலையங்களில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்குபவர்கள். தமது பொறுப்பை அவர்கள் நன்கு உணரவேண்டும். பாடசாலை வகுப்பறைகளில் தினமும் ஐந்து நிமிடமாவது இத்தகைய தூண்டல்களை ஏற்படுத்த அவர்கள் முயற்சி செய்யவேண்டும். மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்திய ஆசான்கள் என்றும் மாணவர்களால் நினைவு கூரப்படுவர்

பாடசாலை மட்டத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான தூண்டல்கள் இன்று ஒரு கட்டாய சமூகத்தேவையாகியுள்ளது என்பதை ஆசிரிய சமூகத்திற்கு ஞானம் வலியுறுத்திக்கூற விரும்புகிறது.

❏


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாபூஷணம் அமரர் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி – 2005 முடிவுகள்

நடுவர்குழு : திரு. தெளிவத்தை ஜோசப்
திருமதி பத்மா சோமகாந்தன்
திரு.புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

முதற் பரிசு :– ரூபா 5000/= பெறும் சிறுகதை
தலைப்பு :– கொக்கிளாய் மாமி
எழுதியவர் :– **முல்லைமணி வே. சுப்பிரமணியம்**
4, காளிகோயில் வீதி, கூமாங்குளம், வவுனியா.

இரண்டாவது பரிசு :– ரூபா 3000/= பெறும் சிறுகதை
தலைப்பு :– காதலாகி கசிந்து......
எழுதியவர் :– **மாதுமை சிவசுப்பிரமணியம்**
15, வித்தியாலயம் ஒழுங்கை, திருகோணமலை.

மூன்றாவது பரிசு :– ரூபா 2000/= பெறும் சிறுகதை
தலைப்பு :– ஒரு விடியலை நோக்கி
எழுதியவர் :– **டாக்டர் ச. முருகானந்தன்**
அரசினர் வைத்தியசாலை, முழங்காவில், கிளிநொச்சி.

## ஞானம் பரிசுச் சான்றிதழ்கள் பெறும் சிறுகதைகள்

| தலைப்பு | எழுதியவர் பெயர் |
|---|---|
| 1. சுரங்களும் சுருதிகளும் | **தம்பு சிவா**<br>65/2, மூர் வீதி, கொழும்பு–06. |
| 2. வியூகம் | **செல்வி. புனிதகலா**<br>11, ஞானானந்த கம, வட்டவளை. |
| 3. தளிருக்குள் துளிர் | **நவஜோதி ஜோகரட்னம்,** லண்டன் |
| 4. தீண்டாத சர்ப்பங்கள் | **மு. சந்திரகாந்தா**<br>இல. 12, 32வது ஒழுங்கை, கொழும்பு–06. |
| 5. அப்பாவின் துயரங்கள் | **த. அஜந்தகுமார்**<br>யார்வத்தை, வதிரி, கரவெட்டி. |
| 6. திருப்தி | **தாட்சாயணி**<br>பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. |
| 7. உசத்தியான புட்டுவம் | **டி. ஜனார்த்தனன்**<br>இல. 07, பெயர் லைன் வீதி, தெகிவளை. |
| 8. கருமாதி | **சிவனு மனோகரன்**<br>இல. 06, டன்பார் வீதி , ஹட்டன். |
| 9. அலைகள் தந்த பாடம் | **எஸ். உதயச்செல்வன்**<br>285/5, லூயிஸ் பிளேஸ், குடப்பாடு, நீர்கொழும்பு. |

வெகுவிரைவில் நடக்கவிருக்கும் பரிசளிப்பு விழாவில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசுக்கதைகள் முதலில் ஞானம் சஞ்சிகையில் வெளியிடப்பட்டு பின்னர் தொகுப்பு நூலாக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.**

**Head Office :**
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel. : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.




# பூபாலசிங்கம் புத்தகசாலை

**புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்**

*தலைமை :*
இல. 340,202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. 2422321
தொ. நகல் 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

*கிளை :*
இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை
தொ. பே. 4–515775

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கிராமிய கூட்டுவாழ்வும் மாறுதல்களும்

## ஒரு சமூகவியல் பார்வை

- இ. இராஜேஸ்கண்ணன்

### *அறிமுகம்*

எந்தவொரு தனி மனிதனும் ஏதாவது ஒருவகை சமூகத்திற்கு உட்பட்டு வாழ்பவனாகவே உள்ளான். ஒரு தனிமனிதனுக்கும் சமூகத்திற்குமிடையே நெருக்கமான தொடர்புகள் உள்ளன. இதனாலேயே "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்று குறிப்பிடுகின்றனர். சமூக வாழ்க்கைக்கான தேவை ஒவ்வொரு தனிமனிதனுள்ளும் உள்ளது. "மன எழுச்சிகளின் வளர்ச்சி, நுண்ணறிவாளர் எழுச்சி, தனது சுதந்திரத்திற்கும், நிறைவான ஆளுமையின் வளர்ச்சிக்கும் தேவையான ஒரு சில பொருள்கள், பண்டங்கள், ஆடம்பரப் பொருள்கள் போன்றவற்றைச் சமூகத்தின் உதவியின்றி அடைய முடியும் என்று எண்ணிப் பார்ப்பது கூட முடியாது. சமூகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட எந்தவொரு மனிதனும் இயல்பான வளர்ச்சி அடைந்ததில்லை" (Pascual Gisberls. S. J. 1964) என்ற கருத்தானது அடிப்படையில் மனிதனுக்கு சமூக கூட்டு வாழ்க்கையின் அவசியத்தினை வலியுறுத்துவதாக உள்ளது.

மனித நாகரிகத்தின் வளர்ச்சியானது கூட்டு வாழ்வின் வழியேதான் சாத்தியமாகி வந்துள்ளது. தவிர மனிதப் பண்பாட்டின் பல்வேறு குழுமங்கள் (Groups), குலங்கள் (Clans) போன்றவற்றுக்கு உட்பட்டு மனிதன் வாழ்ந்து வந்துள்ளான். இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியின் தொன்மை நிலையில் அலின, புரு, துர்வாச, பலான போன்ற குழுமங்கள் இருந்ததைப் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. சமூக வாழ்க்கை என்பது இத்தகைய கூட்டு வாழ்வின் வழியேதான் உருவாகின்றது. இதனால் சமூக வாழ்க்கைக்கு உட்பட்டிருக்கும் மனிதனுக்குக் கூட்டுவாழ்வு தவிர்க்கமுடியாதது என்பதை உணரலாம்.

### கோட்பாடுகள்

ஆரம்பகாலத்து சமூகவியல் கோட்பாட்டாளர்களிடையே தனிமனிதக் கோட்பாடு (Individual Theories) முதன்மை பெற்றிருந்தது. இதன்படி தனிமனித நிலையிலேதான் ஒருவன் உன்னதம் பெறுகின்றான் எனக் கருதப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியான இயல்பு உள்ளது. அந்த இயல்புகளால் ஒத்துவாழும் தன்மையை இழந்து முரண் நிலைகளை தவிர்த்துக் கூட்டுணர்வோடு தன்னை ஒரு சமூக மனிதனாக சமூக வாழ்வில் ஈடுபடுத்தவே சமூக ஒப்பந்தம் நடைபெற்றது. Thomas Hobbes, J. Locke, J.J. Rousseau போன்றவர்கள் இதனையே வலியுறுத்தியுள்ளனர். இவர்களது கருத்தினை ஏற்றுப் பின்னாளில் Hegel "முழுமையான சமுதாயத்திற்கு (அரசு) இணங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதே தனிமனிதனுக்கு மகத்து வத்தைக் கொடுக்கும்" என்று கூறுகிறார்.

Emile Durkheim என்ற சமூக வியலாளரும் Mc Dougall என்ற உளவியலாளரும் கூட்டு வாழ்வின் பொருளை பேசியவர்கள். இவர்கள் மனத்தினை (Mind) தனிமனித மனம், சமூகமனம் என இருவகைப்படுத்தினர். இவற்றில் சமூகமனமே ஒரு கூட்டுமனம் (Collective Mind) எனவும் அதுவே உயர்ந்தது எனவும் இவர்கள் கூறுகின்றனர். Durkheim விளக்கு கின்ற கூட்டு பிரதிநிதித்துவம் (Collective Representation), கூட்டு உணர்வு நிலை (Collective Consciousness) போன்றனவும் இத்தகைய கூட்டுவாழ்வின் உட்பொருளைச் சாரமாகக் கொண்ட மைந்ததே.

Durkheim சமூக உண்மைகள் (Social Facts) பற்றி விளக்கும் போது சமூக உண்மைகள் தனிமனித விருப்பங்களின் வழி தோன்றியவை அல்ல. எனவே அவற்றினைத் தனியன்களின் கூட்டு வாழ்வுக்கான உண்மைகளிலிருந்தே உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். கூட்டுணர்வு நிலையினை, தனிமனிதனுக்கு உரியது, கூட்டு நிலையில் பகிரப்படுவது என இரு வகையிலே விளங்கியிருந்தபோதிலும் "கூட்டுப் பொருண்மையே" தனிமனிதன் மீது செல்வாக்கினை செலுத்தும் மேலாண்மை நிலை என்று விளக்கி யிருந்தார்.

இவ்வாறு சமூகவியலின் கோட்பாடு மரபிலே "கூட்டு வாழ்வு" தொடர்பான சிந்தனைகள் அலசப்பட்டுள்ளன. எனினும், இன்றைய உலகில் பல்வேறு விசைகளினால் இத்தகைய கூட்டுவாழ்வு அர்த்தமிழந்து தடம்மாறிச் செல்லுதல் உணரப்படுகின்றது. என்னதான் உலக மயமாதல் போன்ற கருத்தாக்கங்கள் வலுப்பெற்ற போதிலும் வேறுபடுத்தல்கள் (Seperations), பாகுபடுத்தல்கள் (Classifications), தனியாள் வாதம் (Individualization) மையவாதம் (Centerism) என்பன முதன்மை பெற்றுள்ளன.

பண்பாட்டின் அனைத்துக் கூறு களின் வழியும் கூட்டுவாழ்வை வலியுறுத்தி நிமிர்ந்து நிற்கும் கீழைப்புலப் பண்பாடுகளில் கூட கூட்டுவாழ்வுக்கான சவால்களும், அச்சுறுத்தல்களும் ஏற் பட்டுள்ளன. சமய, சமூக வழக்காறுகள், விழுமியங்கள், கலைகள், தொழில்கள், உணவுப் பழக்கங்கள், சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்ற மரபுகளின் வழி புகுந்த வாழ்வியல் அம்சங்களின் அடிக்கட்டுமானத்தில் முகிழ்த்து எழுந்த எமது புலங்களின் கூட்டு வாழ்வு நிலை இன்று ஆட்டங்கண்டமைக்கு யாழ்ப்பாண சமூகம் கூட விதிவிலக்காகிவிடவில்லை.

### *யாழ்ப்பாணச் சமூகமும் கூட்டு வாழ்வும்*

புவிசார் இட அமைவு, மரபு வழிப்பண்பாடுகள், சமூகக் கட்டமைப்புப் போன்ற பல்வேறு அம்சங்களினாலும் ஒரு தனித்துவ வகைப்படுத்தலுக்கு உட்படும் யாழ்ப்பாணம் சாதிக் கட்டமைப்புகள், தொழில்சார் வேறு பாடுகள், பிரதேச வேறுபாடுகள், சமயப்பல்வகைமை போன்றன நிலவி வரும் பிரதேசமாக விளங்கியபோதிலும் பொதுவாக அனைத்துத் தரப் பினரிடையிலும் விதந்து சொல்லக்கூடிய கூட்டு வாழ்வின் அடிப்படைகள் நீண்ட காலமாக இருந்தே வந்துள்ளன. குழுசார் உணர்வுகள், தொழில், பிரதேச வளங்கள், சமய நடைமுறைகள் போன்றவை விசைகளாய் நின்று யாழ்ப்பாண மக்களிடையே கூட்டு வாழ்வினை ஏற்படுத்தியிருந்தன.

யாழ்ப்பாண மக்களின் கூட்டு வாழ்வின் தன்மையினை எடுத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுபவையாக பல்வேறு நடைமுறைகள் இருந்து வந்துள்ளன. கிடுகுபின்னுதல், பந்தல்போடுதல், பாத்திகிண்டுதல், அரிசி இடித்தல், தண்ணீர் அள்ளுதல், வீடுவேய்தல், பன்னம் செய்தல், வேள்வி செய்தல், நாற்சார் வீடமைத்தல் என்பன சிந்தித்தவுடன் ஞாபகத்துக்கு வரும் நடைமுறைகளாயிருந்தன. பெரும்பாலும் இந் நடைமுறைகளைக் கிராமம் சார் பண்பாடுகளே தாங்கி நின்றன. ஆனால் இன்றைய நிலையில் நகரம், கிராமம் என்ற வேறுபாடு இன்றி சமூக மாற்றத்துக்கான பல விசைகள் ஊடுருவி உள்ள நிலையில் யாழ்ப்பாணத்தின் கூட்டுவாழ்க்கை முறையிலேற்பட்டுள்ள மாற்றங்கள் அவதானிப்புக்கு உட்படுகின்றன.

இத்தகைய மாற்றங்களை விளங்கிக் கொள்ள முற்படும்போது, மாற்றத்தைத் தூண்டிய விசைகளோடு இணைத்து விளங்கிக்கொள்வதே பொருத்த மானதாகும். இந்தப் பிரதேசத்தில் நிலவிய கூட்டுக் குடும்ப முறையில் ஏற்பட்ட ஈடாட்டங்கள், போர் தந்த விளைவுகளால் உருவான அனர்த்தங்கள் – புலப் பெயர்வுகள் – இடப்பெயர்வுகள், தொலைத் தொடர்பு சாதனங்களின் பரவுகையும் அவற்றுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும், வெளிநாடுகள் நோக்கிய பெயர்வுகள் தந்த பொருளாதார மாற்றங்களும், பண்பாட்டிடை ஊடு பரவுகையும், நுகர்வுக் கலாசாரத்தின் விளைவுகள், மரபுகள் – சமய நடைமுறைகள் வாழ்வியல் விழுமியங்கள் தொடர்பான தவறான மதிப்பீடுகள் போன்ற விசைகளின் பின்னணி யிலேதான் தனிமனிதர்களதோ அல்லது சமூகங்களினதோ கூட்டுவாழ்வின் ஈடாட்டத்தினை விளங்கிக் கொள்வது பொருத்தமாகும்.

### *பெண்களும் கூட்டு வாழ்வும்*

அரிசி இடித்தல், பன்னம் செய்தல், கிடுகு பின்னுதல், தண்ணீர் மொள்ளல் போன்ற நடைமுறைகள் பெரும்பாலும் பெண்கள் கூட்டுச் சேர்ந்து ஈடுபடும் நடைமுறைகளாக இருந்தன. குடும்ப உறவினர்களாகவோ, அயலவர் களாகவோ இருக்கும் பெண்கள் ஒன்றுகூடி இத்தகைய நடைமுறைகளில் தேவைக்கு ஏற்றவகையில் பரஸ்பரம் ஈடுபடுவர். ஊரில் கோயில், வயல் போன்ற இடங்களில் அமைந்த கிணறுகளில் தண்ணீர் எடுப்பதற்காக பெண்கள் கூடிச் செல்வர். பாய், பெட்டி போன்றவற்றை வீடுகளில் அயற்பெண்கள் கூடியிருந்து இழைப்பர். இத்தகைய வேளைகளில் 'பலதும் பத்தும்' கதைத்துக் கொண்டே ஈடுபடுவர். கவலை, சந்தோஷம், மன எண்ணங்கள் பரஸ்பரம் பரிமாறப்படும். உளவியலாளர்கள் கூறும் உள எழுச்சிசார் இதமான நிலையினை (Emotional Comfort) ஏற்படுத்தும் சூழ்நிலைகளாக அத் தருணங்கள் அமைந்தன. தனிமைப்படாத ஒருவித கூட்டுவாழ்வை அந்நடை முறைகள் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தன.

அரிசி இடித்தல் மிக இனிமை தரும் ஒரு நடைமுறையாகவிருந்தது. அயலிலுள்ள நான்கைந்து பெண்கள் ஒன்றாகக் கூடி ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் "வாரவைத்த" அரிசிகளுடன் (கழுவி நீர் வடியவிட்ட) ஒரு வீட்டில் பிற்பகல் வேளையில் கூடுவர். மாறிமாறி ஒருவரது அரிசியை மற்றவர்களும் சேர்ந்து இடிப்பர். ஒரு உரலில் இரண்டு உலக்கை போட்டு இடிக்கும் அழகு அற்புதமானது. இருவர் மாறிமாறி இடிப்பதைப் போல இடித்த மாவினை "கட்டைநீக்க அரிப்பவர்களும் மாறிமாறி அரிப்பர். ஒரு மாலைப் பொழுதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மூன்று வீட்டுக்கான அரிசி ஒரே வீட்டில் இடிக்கப்படுவதுடன் பெண்கள் 'ஊர்க் கதைகள்' கதைப்பர். புதினங்கள் அறிவர். தமது இன்ப துன்பங்களைப் பரிமாறுவர்.

இந் நடைமுறைகள் படிப்படியாக அருகி வந்துள்ளன அல்லது இழக்கப் பட்டுள்ளன. வீடுதோறும் தனிக் கிணறுகள், வீடுதோறும் தொலைக் காட்சிகள், பனம் பொருட் களுக்குப் பதிலாக பிளாஷ்டிக் பொருள்கள், அரிசி இடிக்க கிறைண்டர்கள் – நுகர்வுக் கலாசாரம் (Consumerrism) தந்த விளைவுகள் தனியாள் உணர்வு நிலையினை மிஞ்சவைத்துள்ளன. குடும்பப் பெண்களை தம்மோடு கட்டிவைத்து அவர்களுக்குத் தனிமை மிஞ்ச வைக்கும் சாதனமாக காட்சி ஊடகமான தொலைக் காட்சி மாறியுள்ளது.

### ஆண்களும் கூட்டுவாழ்வும்

ஆண்கள் மத்தியில் ஒரு கூட்டு நிலையினை ஏற்படுத்துபவையாக வீடு வேய்தல், பாத்திகிண்டுதல், பந்தல் போடுதல் போன்ற நடைமுறைகள் நிலவி வந்துள்ளன. யாழ்ப்பாண சமூகத்தின் உணவுமுறைகள், உறைவிடமுறைகள் சார்பாக இத்தகைய நடைமுறைகள் வழக்கத்திலிருந்தன. பெரும்பாலும் கிராமப்புறங்களில் பெரியளவிலான மண் வீடுகளை வருடாவருடம் மழைகாலத்தின் முன்னர் பனையோலையால் வேய்வர். வீடு வேய்ச்சல் அதிகாலையிலேயே தொடக்கப்பட்டு வெயில் தீவிரம்பெற முன்னர் முடிவடையும். முதனாளே அயலில் ஆண்களுக்கு வேய்ச்சலுக்கு வீடுதோறும் சென்று சொல்வர். அவர்களில் எல்லோரும் நிபுணர்களல்ல. எனினும் நிபுணத்துவம் உள்ளவர்களும் சிறப்பாக இடம்பெறுவர். வேய்ச்சலுக்கு உட்படும் வீட்டில் அன்று பெரும்பாலும் சாப்பாட்டுக்காக தோசை சுடப்படும். வீடு வேய்ச்சலின் இடையிலோ, அல்லது முடிவிலோ வேய்ச்சலில் ஈடுபட்ட ஆண்கள் யாவரும் சேர்ந்து தோசை உண்ணும் நடைமுறையும் அவர்களின் இணைவும் நினைந்து இன்புறத்தக்கது.

இந் நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. பலர் கூடி வேய்ச்சல் செய்யும் வீடுகள் இப்போது இல்லை. கல்வீடுகளின் தோற்றமும் இலகுத்

# தமிழுக்கு அவமானம் தரும் தவறு !

இலங்கை டி.வி நிகழ்ச்சிகளின்போது நான் தமிழ் நிகழ்ச்சிகளில் அவதானித்த தவறுகளில், கொடிய, பயங்கர, Silly, foolish, வெட்கப்பட வேண்டிய தமிழுக்கு அவமானம் தரும் ஒரு தவறு அடிக்கடி ஒளிபரப்புக்காரர்களால் இழைக்கப்படுகிறது. உ+ம். இன்று காலை **8.30**க்கு சக்தி ரி.வி Morning Show இல் குழாய் வீடுகள் பற்றிப் பேசும் போது தயக்கம் எதுவும் இல்லாமல் அறிவிப்பாளர் கஜமோகன் அவருடன் இருந்தவர் பிரியா இதே தவறைப் புரிந்தார். சொற்பிரயோகத்தில் பிழை – "ஒவ்வொரு **வீடுகளும்**.... கொள்வனவு செய்யும் போதும் ....... என்று போகிறது. அடிப்படை இலக்கணம் தெரியாதா**?** ஆங்கிலத்தில் கூட, "Each boy **has** a separate bat" என்றுதான் சொல்வார்கள். Each boy **have** என்று சொல்வதில்லை.

Autograph திரைப்படத்தில் "ஒவ்வொரு பூக்களுமே" என்று ஒரு பாடல் வருகிறது. அதை வேண்டுமானால் "Poetic License" என்று மன்னித்துக் கொள்ளலாம். இத்தவறு மீண்டும் மீண்டும் புரியப்பட்டு வருவதாலும் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதாலும் இதைச் சொல்லியிருக்கிறேன். இதை ஞானத்தில் பிரசுரித்தால் தமிழுக்குச் சேவை செய்ததாக அமையும்.

- சி. சரவணபவன்- 30.05.2005


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையும் இந் நடைமுறைகளை மாற்றியமைத்துள்ளன. வேயும் தன்மை யுள்ள பெரிய வீடுகள் அருகிப் போனமை ஒரு புறமிருக்க சிறியளவில் வேயப்படும் வீடுகள்கூட கூலி கொடுத்து வேயப் படுவதால் கூட்டு நிலை நலிவடைந் துள்ளது எனலாம்.

இதனைப் போலவே பந்தல் போடுதலும் ஆண்கள் சேர்ந்து ஈடுபடும் நடைமுறையானது. ஒரு வீட்டில் ஒரு திருமணமோ அன்றி பூப்பு நீராட்டுச் சடங்கோ நடைபெறப்போகின்றதெனின் அந்த ஊரின் ஆண்கள் விசேட நாளுக்கு இரண்டொரு நாட்கள் வரை வரும் இரவு வேளைகளிலே ஒன்றாகச் சேர்ந்து வைபவத்துக்கான பந்தலை கிடுகினாலும், அயலில் சேர்க்கப்பட்ட மரந்தடிகளாலும் அமைப்பர். இந்தப் பந்தல்களைக் கலைத்துவமாக அமைக்கும் வல்லுனர்கள் கிராமப் புறங்களில் அதிகளவில் இருந்துள்ளனர். அத்தகைய வல்லுனர்களின் வழிகாட்டலுடன் பந்தல்போடுதல் இடம்பெறும். வைபவம் நடைபெறவிருக்கும் வீட்டிற்கு அழைக்கா மலேயே ஊரின் ஆண்கள் இரவு வேளைகளில் பந்தல் போடுவதற்காக வருவர்.

இன்றைய நிலையில் எம்மிடையே நிலவும் திருமணங்கள் பெரும்பாலும் மண்டபங்களை வாடகைக்கு பெற்றே செய்யப்படுகின்றன. தட்டுமுட்டுப் பாத்திரம் தொடக்கம் மண்டபம், மணவறை எல்லாமே ஒருவரிடம் வாடகைக்கு அமர்த்தக் கூடிய வகையில் நுகர்வியம் எம்மிடையே வளர்ந்துள்ளது. முன்னைய காலங்களில் ஒரு சடங்காக ஊரிலுள்ள பெண்கள் கூடி எவ்வளவு உணவையும் சமைத்துப் போட்டனர். இன்று உணவு சமைப்பதற்குக் கூட கூலியாட்கள் உள்ளனர். நகரப்புறத்து நடைமுறைகளின் ஊடுபரவுவகை கிராமிய நடைமுறைகளை மாற்றி யமைத்துள்ளன.

பாத்தி கிண்டுதல், வீடு வேய்ச்சலைப் போலவே ஆண்களின் பரஸ்பர கூட்டுச் செயற் பாட்டுக்குரிய தொன்றாக விளங்கியது. பனங் காய்களைப் பிரித்து, அவற்றை மெத்தை போன்ற மண்படுக்கை அமைத்து அதன் மேல் அடுக்கி பனம்பாத்திகள் அமைக்கப்படும். பெரும்பாலும் பங்குனி மாதத்தை அண்டிய காலங்களில் பனம் பாத்திகள் கிழங்கிற்காகக் கிண்டப்படும். பனம் பாத்திகள் போடுவதில் ஒரு சிலர் ஈடுபட்டாலும், பாத்தி கிண்டுதல் பலர் ஈடுபடும் ஒரு சடங்காக விளங்கும். பெரும்பாலும் மாலையில் பாத்திப்படையல் வைத்து ஆண்கள் பலர் சேர்ந்து பாத்திகிண்டி கிழங்கை எடுப்பர். அதிக பனங்காணியுள்ளவர்களின் பாத்திகள் பெரியளவில் அமையும். அதனை ஆண்கள் சேர்ந்து கிண்டுவதும், பெண்கள் சேர்ந்து கிழங்கு தெரிவதும், நெட்டி வெட்டி தோலுரித்து ஒடியல் காயப் போடுவதும், கிழங்கவிப்பதும் பால்நிலை வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பிரிப்பு முறையான (Gender Discrimination on Division of Labour) போதிலும் ஒரு கூட்டுவாழ்க்கை முறையாக விளங்கியதை மறுத்துவிட முடியாது.

எனினும், இன்று இந் நடை முறைகளிலே மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. குறிப்பாக மக்களது உணவுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒடியல், புழுக்கொடியல் போன்றவற்றின் முக்கியத் துவத்தை இழக்க வைத்துள்ளது. அத்துடன் மக்களிடையே நிலவிவரும் சீதன முறையினால் காணிகள் துண்டாடப்பட்டு வருவதால் இந் நடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

### சமூக நிலையில் கூட்டு வாழ்வு

ஒரு சமூகத்தின் அடிப்படைத் தனியலகு ஆணும் பெண்ணும் தான். இதனால் சமூகத்தின் கூட்டு வாழ்வு என்பது அவர்களின் கூட்டு வாழ்வினையே கருதுவதாகும். எனினும், ஆண், பெண் என்ற வேறுபாட்டுக்கு அப்பால் பொதுநிலையில் நின்று பார்க்கக்கூடிய சில கூட்டுவாழ்வின் வெளிப்பாடுகள் யாழ்ப்பாணக் கிராமியத்தின் உட்கிடையாக விளங்கியதையும் நாம் இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும்.

நாற்சார் வீடமைப்பு, வேள்விச் சடங்குகள், கிராமியத் தெய்வ வழிபாடுகள் போன்ற கருமங்கள் கூட்டுவாழ்வினைப் பிரதிபலிக்கும் சமூக நிகழ்வுகளாக இருந்தன.

அன்றைய சமூகங்களில் சிறிய வீடுகளில் பெரிய குடும்பங்கள் வாழ்ந்தன. இன்று பெரிய வீடுகளில் சிறிய குடும்பங்கள் இருக்கின்றன. நாற்சார் வீடுகளை இன்று இடித்து வடிவமாற்றம் செய்யும் நிலை வந்துள்ளது. நாற்சார் வீடுகளில் வாழ்ந்த கூட்டுக் குடும்ப அமைப்புகள் இன்று மாற்றம் கண்டுள்ளன. பொது முற்றங்கள் தனி முற்றங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

கிராமப் புறங்களில் நடைபெற்றுவந்த வேள்விகள் அன்றைய கூட்டு நிலையின் அடிப்படை அம்சமானது. பலியிடலை முதன்மைப்படுத்திய வேள்விகள் பின்னாளில் பண்பாடற்றவை என்று கருதிய போதிலும், அதுவும் ஏதோவொரு அடிப்படையில் மக்களை ஒன்றுகூட்டி இருந்தது. அந்நடைமுறை மாற்றமெய்தி மடைபரவுதல், பொங்கல் வைத்தல், வழிவெட்டுதல், நீர்ப்பாளையம் என்பவற்றுடன் தொடர்புடைய 'பக்குவப்பட்ட' வேள்விகள் கூட சமுதாய கூட்டுவாழ்வின் உந்து சக்தியாக அமைந்திருந்தன. ஒரு காத்தவராயன் கூத்துக்காகக் கிராமிய மட்டத்தில் கூடிய மக்கள் தொகை காலகதியில் கருமாரியில் கூட இல்லை என்றாகிவிட்டது.

### கூட்டுவாழ்வுக் குலைவும்; பிரச்சினைகளும்

இன்றைய உலகளாவிய மாற்றங்களும், தனித்தனியே ஏற்படும் உள்ளக சமூக மாற்றங்களும் இணைந்து தனியாள் வாதத்தினை முனைப்புப் பெற வைக்கின்றது என்று கூறுவதையே அடிப்படைவாத சிந்தனை எனக்காணும் மரபு வலுப்பெற்றுள்ளது. எனினும் கீழைப்புல வாழ்நிலைப் பண்பாட்டு அடிப்படைகளின் உயிர்ப் பொருளான கூட்டுவாழ்வின் குலைவினைத் தூண்டும் விசைகள் யாவும் தனியாள் வாதத்தினை ஒரு பிரச்சினையாகவே எமது சமூகத்தில் விட்டுச் செல்கின்றன என்பது உண்மையே.

இன்று பரம்பரை இடைவெளியால் விளையும் பிணக்குகள், முதிர் கன்னிகள் பிரச்சினை, முதியவர் தனித்துவிடப்படல், பாகப்பிரிவினையால் உண்டாகும் பிணக்குகள், பெண்களின் உள நெருக்கீடுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் விஞ்சி நிற்பதற்கு இந்தக் கூட்டுவாழ்வின் இழப்பு காரணமாகி விடுகின்றது. வெறுமனே பொருளாதார நலன்களை மாத்திரம் மையப்படுத்திய தனியாள் வாத சிந்தனைகள் எமது வாழ்வை ஊடறுப்பது கூட்டு வாழ்வின் அவசியத்தை உணராத அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

> யாழ்ப்பாண சமூகத்தின் கூட்டு வாழ்வினை சமூக, பொருளாதார பண்பாட்டு அடிப்படைகளில் விளங்கிக் கொள்ளக் கூடிய விரிவானதொரு ஆராய்வுக்கான 'அடியிடல்' சிந்தனையாக இக் கட்டுரை அமையலாம்.
>
> **- கட்டுரை ஆசிரியர்-**

❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் விருது பெறும் பத்மநாப ஐயர்



தமிழ் இலக்கியத்திற்குப் பணியாற்றியவர்களுக்குக் கனடாவில் இருக்கும் இலக்கிய அமைப்பினால் வழங்கப்படும் 'இயல்' விருது இவ்வாண்டு பத்மநாப ஐயருக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் இவ்விருதைப் பெற்றவர்கள், எழுத்தாளர்களாகவோ விமர்சகர்களாகவோ விளங்கியவர்கள். ஆனால் ஐயர் ஓர் இலக்கியச் செயற்பாட்டாளர்.

ஈழத்து இலக்கியம் என்று சொல்லப்படுகின்ற யாவற்றிற்கும் ஐயர் ஏதோ ஒருவகையில் உதவி புரிந்துள்ளார். ஐயரின் முயற்சியால் தமிழகத்தில் வெளிவந்த ஈழத்து நூல்கள் அநேகம். 60களில் மலேசிய, இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள் அடங்கிய **அக்கரை இலக்கியம்,** 80களில் **பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்** என்னும் தொகுப்பு, பின்னர் **மரணத்துள் வாழ்வோம்** என்னும் கவிதைத் தொகுப்பு, அதைத்தொடர்ந்து **தேடலும் படைப்புலகமும்** என்னும் ஒவியர் மாற்கு பற்றிய ஓவியம் பற்றிய ஆய்வு நூல் ஆகியவை வெளிவருவதற்கு ஐயர் முன்னின்று உழைத்தவர். தனது சொந்தப் பணத்தைச் செலவுசெய்து புத்தகங்களைக் காவிச்சென்று சென்னையில் ஈழத்துப் புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தியவர். 'அலை' சஞ்சிகை வெளிவருவதற்கும் ஐயரின் பங்களிப்பு கணிசமானதாக இருந்தது.

எந்த ஒரு குழுவாதமுமின்றி பக்கச் சார்புமின்றி பல படைப்பாளிகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்ததில் ஐயரின் பங்கு மகத்தானது.

83ல் புலம் பெயர்ந்து தற்போது இலண்டனில் வாழும் ஐயர் தமிழர் நலன்புரிச் சங்கம் ஊடாக, 1996ல் ஒரு தொகுப்பு நூலையும், 1997ல் **கிழக்கும் மேற்கும்** என்னும் தொகுப்பு நூலையும், 1998ல் **யுகம் மாறும்** என்னும் தொகுப்பையும் 2001ல் **'கண்ணில் தெரியுது வானம்'** என்னும் தொகுப்பு நூலையும் உலகத் தமிழ் இலக்கியப் பரப்பில் முன்வைத்துள்ளார்.

இலக்கியச் செயற்பாடுகள் காரணமாகத் தான் தேடிய பணத்தையெல்லாம் செலவழித்தவர் ஐயர். அவரது வார்த்தைகளில் கூறுவதானால், இலங்கையில் 'ரூபா'க்களில் கடன் வைத்திருந்தவர் இப்போது லண்டனில் பவுண்களில் கடன் வைத்திருக்கிறார்.

ஐயர் ஈழத்து இலக்கியத்திற்கு ஆற்றிய பணிபற்றி பல பக்கங்களில் எழுதிக்கொண்டே செல்லலாம் . பத்மநாப ஐயருக்கு வழங்கப்படுவதினால் 'இயல்' விருது கௌரவம் பெறுகிறது. ஐயரின் பணி மென்மேலும் சிறக்க வேண்டுமென ஞானம் சிரந்தாழ்த்தி வாழ்த்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணியின் பார்வையில்... !



உலகம் தோன்றி மனிதகுலம் உருவான காலம் முதல் தேசங்கள் படைக்கப்பட்டமைக்குப் பயணங்களே காரணமாகின்றன. ஒவ்வொரு தேசமும் உருவானதன் பின்னணியிலேயே நாம் பயணங்களின் பயனை அறியமுடிகிறது. மனித நாகரிக வளர்ச்சிக்கும் அரசியல், பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் நில ஆக்கிரமிப்புக்கும், யுத்தங்களுக்கும் பயணங்கள் ஒவ்வொரு தேசத்திற்கும் பிரதான காரணியாக விளங்கியிருக்கின்றன.

இந்த உண்மையை மனிதகுல வளர்ச்சியிலும் தேசங்களின் முன்னேற்றங்கள் - சிதைவுகளிலும் புரிந்து கொள்ளமுடிகிறது.

எழுத்துலகில் பிரவேசிக்கும் முன்னரே இலங்கையில் பல பாகங்களுக்கும் பயணித்து "எங்கள் தேசம் வளம் கொழிக்கும் சொர்க்க பூமி "என்ற முடிவுக்கு வந்தேன். பின்னாளில் எமது தேசம் மரணங்கள் மலிந்த பாவப்பட்ட மண்ணாக மாறிக் கொண்டிருந்த வேளையில் புலம் பெயர்ந்தேன். ஒரு யாத்திரீகனைப் போன்று ஊரும் உலகமும் சுற்றுவதில் அலாதிப் பிரியம் கொண்ட நான், 'ஞானம்' வாசகர்களுக்காக - இந்த "பயணியின் பார்வையில்" தொடரைச் சமர்ப்பிக்கின்றேன்.

# 'கோட்டை' வாசிகள்

— முருகபூபதி
(அவுஸ்திரேலியா)

தமிழ்நாட்டில் தூத்துக்குடி இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரசித்தி பெற்றது. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. பிறந்த மண்.

அங்குள்ள துறைமுகத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருந்தது. தூத்துக் குடியில் பிரசித்தமான தொழில் நுட்பக்கல்லூரியில்தான் எனது அப்பாவின், அக்கா மகன் சந்திரசேகரன் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

சாத்தூரிலிருந்த அவரது அண்ணன் ஆண்டபெருமாள் மச்சான்தான், என்னை திருநெல்வேலி மாவட்டத்தில் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தவர். இவர் கிறிஸ்தவ மதப்பெண்ணை மணம் முடித்த பின்பு தானும் மதம் மாறிக் கொண்டவர்.

1984 இல் எனது அப்பா வழி உறவினர்களைத்தேடி நான் சென்ற போது, அந்த உறவினர்களையெல்லாம் காண்பிக்க என்னோடு பயணித்தவர், புகழ்பெற்ற ஆலயங்களை எனக்கு காண்பிக்கும்போது என்னை மாத்திரம் உள்ளே அனுப்பிவிட்டு, இவர் வெளியே நிற்பார்.

தாம் பிரார்த்தனை செய்யும் கிறிஸ்தவ தேவாலயத்தைத் தவிர வேறெந்தத் தலங்களுக்குள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசிக்க மாட்டார். எனினும் – எனக்கு மதுரை மீனாட்சி அம்மனை, திருச் செந்தூர் முருகனை, திருநெல்வேலி நெல்லையப்பரையெல்லாம் காண்பித்தார்.

எட்டயபுரம் அழைத்துச் சென்று – பாரதி நடமாடிய பிரதேசத்தையும், பாரதி பிறந்த வீட்டையும், மணிமண்டபத்தையும் எட்டையபுர மன்னரின் அரண் மனையையும், பாரதி அமர்ந்து கவிதை எழுதிய அந்த தெப்பத்தளத்தையும் காண்பித்தார்.

தூத்துக்குடித் துறைமுகம் பார்த்த பின்பு தொழில்நுட்பக்கல்லூரிக்கு – தனது தம்பி சந்திரசேகரனிடம் என்னை அழைத்துச் சென்றார்.

அன்றிரவு தம்மோடு தங்கவேண்டும் என்று சந்திரசேகரன் ஸ்ரீவைகுண்டத் திற்கு அழைத்துச் சென்றார். ஸ்ரீவைகுண்டமும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்தான்.

சந்திரசேகரன் மச்சான் வீட்டுப் பிள்ளைகளுடன் மொட்டைமாடியி லிருந்து பேசிக்கொண்டிருப்பேன். அங்கிருந்து பார்த்தால் ஸ்ரீ வைகுண் டத்துக் கோயில் கோபுரமும் ஊரும் அழகாகக் காட்சிதரும்.

ரஸனையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொழுது ஓரிடத்தில் எனது கண்கள் நிலைகுத்தின.

கோட்டை போன்ற தோற்றமுடைய மதில்சுவர்களுக்குள் சில மக்கள் குடி யிருப்பு மனைகள்.

மச்சானிடம் அந்தத்திசையை சுட்டிக்காட்டி விசாரித்தேன்.

அவர் பல சுவாரஸ்யமான கதைகள் சொன்னார். எப்பொழுதும் 'தேடல்' மனப்பான்மை கொண்ட எனக்கு, அந்தக் கோட்டையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை. அவர் கூறிய தகவல்கள் எனது ஆசைக்குத் தூபம் போட்டன.

"வேண்டாம் மாப்பிள்ளை. (அவர் எப்பொழுதும் என்னை அப்படித்தான் அழைப்பார்) அங்கெல்லாம் நாம் போக முடியாது, போகவும் கூடாது. வந்த இடத்தில் உங்களுக்கேன் இப்படி ஒரு விபரீத ஆசை."

"பத்திரிகையாள னாகவும் படைப் பாளியாகவும் இருப்ப தனால் மாத்திர மல்ல; எதனையாவது துருவிப்பார்த்துத் தகவல் அறிய வேண்டுமென்ற இயல்பான குணத்தினாலும் கேட்கிறேன்" என்றேன்.

அவர் அங்கே என்னை அழைத்துச் செல்ல மறுத்தே விட்டார். அதனால் அந்த கோட்டையையோ அதனுள்ளே வசிக்கும் 'அபூர்வமான மக்களையோ' பார்க்கும் ஆசை நிறைவேறவில்லை.

அந்தக் கோட்டைக்குள் வசிப்ப வர்களை "கோட்டை வீட்டுப் பிள்ளைமார்" என்பார்கள்.

இவர்கள் ஸ்ரீ வைகுண்டத்தில் தனித் துவமான சமூகமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வெளி உலக பரிச்சயம் அற்றவர்கள். வெளியே ஏற்பட்ட மாற்றங்கள் முன்னேற்றங்கள் எதனையும் அறியாதவர்கள்.

உயர்ந்த மதிற்சுவர்கள் கொண்ட அந்த கோட்டையினுள், வெளி உலகத் தொடர்புகளற்று வாழும் அம்மக்கள் குறித்து எனக்கு கவலையும் அனுதாபமும் தோன்றியது.

வெளியார் எவரும் அந்தக் கோட்டைக்குள் செல்வதற்கு அனுமதிக் கப்படமாட்டார்கள்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த பிள்ளைமார் சமூகத்தினரின் மூதாதையர் காஷ்மீரில் வாழ்ந்ததாகவும் அவர்களில் பலர் அமைச்சர்களாகவும் அரண்மனை அதிகாரிகளாகவும் இருந்த தாகவும் தகவல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் எப்படி தமக்கென ஒரு கோட்டையை அமைத்துக்கொண்டார்கள், இவர்களின் வரலாறுப் பின்னணி யாது? என்பதையெல்லாம் ஓரளவு கேட்டு அறிந்து கொண்டேன்.

எனினும், ஒரு கோட்டை பிள்ளைமாரைத்தன்னும் சந்தித்துப் பேசமுடியாதவாறு மச்சான் தடுத்து விட்டார். இது எனக்குக் கவலைதான். இது எனக்கு நீண்ட காலம் நீடித்த கவலை.

உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. சந்திரனிலும் மனிதன் கால் பதித்துவிட்டான். ஆனால் ஸ்ரீவைகுண்டத்தில் அந்த சமூகம் ஒரு கோட்டைக்குள் முடங்கிவிட்டதே.

இந்தக் கவலை என்னை அரித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக 1985 இல் மாஸ்கோவில் நடந்த சர்வதேச மாணவர் இளைஞர் விழாவுக்கு சென்றேன்.

அங்கே 'முன்னேற்ற பதிப்பகத்தில்' நண்பர் கலாநிதி விதாலிஃபூர்னிக்காவை சந்தித்தேன். மகாகவி உருத்திர மூர்த்தியின் புதல்வன் பாண்டியன் என்னை, அவரிடம் அழைத்துச் சென்றார்.

ஃபூர்ணிக்கா தாம் ருஷ்ய மொழியில் எழுதிய ஒரு நூலை தமது ஞாபகார்த்தமாக எனக்கு பரிசளித்தார்.

அந்த நூல் தமிழ்நாட்டைப் பற்றியது. தமிழ் நாட்டில் சிறிது காலம் வாழ்ந்த ஃபூர்ணிக்கா– தமிழ்நாட்டு மக்களைப் பற்றி ருஷ்ய மக்களுக்கு அறிமுகப் படுத்தும் நூல்.

இந்நூலில் – நான் மேலே குறிப்பிட்ட கோட்டைப்பிள்ளைமார் குறித்தும் எழுதியிருப்பதாகச் சொன்னார்.

எனது நீண்ட நாள் கவலைக்கு மருந்துகிடைத்த உற்சாகத்தில் "எனக்கு ருஷ்ய மொழி தெரியாதே"– என்றேன்.

"கவலையை விடுங்கள், விரைவில் இந்தநூல் தமிழில் கிடைக்கும் என்றார்.

ஃபூர்ணிக்காவிடமிருந்து விடைபெற்று வந்து இரண்டு வருட காலத்துள் – 1987 இல் நான் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து விட்டேன்.

ஃபூர்ணிக்காவின் குறிப்பிட்ட நூலை– நா. முகம்மது செரீபு– "பிறப்பு முதல் இறப்புவரை"– என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இவருடன் எனக்கு நேரடி அறிமுகம் இல்லாதுவிடினும், தொலைபேசி ஊடாக உரையாடியிருக்கிறேன். சென்னை– நியு செஞ்சுரி புக்ஸ் நிறுவனம் வெளியிட்ட இந்நூலை– நண்பர் கே. கணேஷ் எனக்கு தபாலில் அனுப்பியிருந்தார்.

இன்று– மாஸ்கோவில் ஃபூர்ணிக்காவும் இல்லை. இலங்கையில்– தலாத்து ஓயாவில் கணேஷும் இல்லை, என்பது மனதை அழுத்துகிறது.

நான் தேடிப்பெறமுடியாத தகவல்களை – ஃபூர்ணிக்கா தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார், படித்துப் பாருங்கள்.

ஆயிரமாண்டுகளுக்கு முன்னால் "பிள்ளைமார்கள்"காஷ்மீரிலேயே வாழ்ந்தார்கள். அமைச்சர்களாகவும், அரண்மனை கருவூலக் காப்பாளர்களாகவும் இப்படிப் பல உயர்ந்த அலுவல்களில் இருந்திருக்கின்றனர். அன்றைய நாட்களில் அவர்களது மொழி, நடை, உடை அத்தனையும் வேறு மாதிரியானதாகவே இருந்தது. மன்னர்களுக்கு முடிசூட்டுகின்ற சிறப்புத் தகுதி பெற்றிருந்தனர். அந்நிலையில்தான் பாண்டிய மன்னன் ஒருவன், பாண்டிய நாட்டிற்கு வந்து அரண்மனையில் பணிபுரிய அவர்களை அழைத்திருக்கிறான். அவர்களும் வந்து சிறப்புச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கின்றார்கள். ஆனால், பாண்டிய மன்னனுக்கும் தென்னவ ராயனுக்கும் உரிமைப் போர் நிகழ்ந்த போது தங்களையும், தங்கள் பெண்டு பிள்ளைகளையும் சாவினின்றும் காப் பாற்றிக் கொள்வதற்காக, அவர்கள் தப்பிச் செல்லுமாறு கட்டாயப்படுத்தப் பட்டார்கள். ஆனால் மோசமான எந்தச் சூழ்நிலையைச் சந்திக்கவும், கூட்டுச் சாவினை ஏற்கவும் தயாராக இருந் தார்கள். எனினும் புதிய பாண்டிய மன்னன் பராக்கிரமன், அவர்களுக்கு அடைக்கலம் தருவதாகவும், மதுரையை அடுத்து ஐந்து ஹெக்டேர் நிலமும், முன்னூறு வீடுகளும் அன்பளிப்பாகத் தருவதாக உறுதி கூறினான். அதுவே இப்போது நாம் காணும் இடம். தங்களுடைய முன்னோர்களின் நினைவாக அதனைப் போற்றிவரு கின்றனர்.

ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த உள்ளூர் மக்கள் எவரும் இவர்களுடைய விவகாரங்களில் தலையிடுவதில்லை. எனினும், பொருளாதாரத் தொடர்புகள் வைத்துக் கொண்டிருக்கின்றனர். கோட் டையைச் சேர்ந்த ஆண்கள் உள்ளூரிலும் பக்கத்து ஊர்களிலும் பணிபுரிகிறார்கள். அப்பெண்கள் முழுமையாக ஆண் களையே சார்ந்திருக் கிறார்கள்.

இப்படித் தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கையால் மோசமான நிகழ்ச்சி ஒன்று நடந்ததாக உள்ளூர் மக்கள் ஒரு கதை சொன்னார்கள். ஸ்ரீவைகுண்டத்துத் திருவிழா ஊர்வலம் ஒன்றைக் கண்டு மகிழ்வதற்காக, ஓர் இளம் பெண் உயிரைப் பணயம் வைத்து அந்த மதில்மீது ஏறியிருக்கிறாள். அதற்காக அவளது சமூகத்தாரால் கடுமையாக தண்டிக்கப்பட்டிருக்கிறாள். மற்ற பெண்களுக்குப் பாடமாக இருக்க

சிறுவர் அறிவியல் பாடல் :

## மின்மினிப் பூச்சே !

மின்மினிப் பூச்சைப் பாருங்கள்
மிகவும் கூர்ந்து பாருங்கள்

உயிர் வெளிச்சம் ஒளியும் கூடும்
இணைந்ததாலே வந்ததாம்
ஒளியே அதிக மானதாகவே
உயர்ந்து வெப்பம் ஏறுமாம்

ஒளியாய் வெளிச்சம் தந்த போதும்
வெப்பம் அதிலே இல்லையாம்
ஒளியே குளிர்மை யாகி வீசும்
உயிரினமாம் மின்மினி!

மின்மினி நம் நாட்டில் வாழும்
நெருப்பு ஈ வெளிநாட்டில் வாழும்
உயிர் ஒளி தற் பாதுகாப்பும்
எச்சரிக்கைக் குதவுமாம்!

மின்மினிப் பூச் சாணினம்
புழுவாய்க் காணல் பெண்ணினம்
பெண்ணும் ஆணும் ஒளிதரும்
பெண்ணின் ஒளியே அதிகமாம்!

- கவிஞர் ஏ. இக்பால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதற்காக அவளைத் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் இந்தக் கதையைப் பிள்ளைமார்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. "அத்தகைய உயரமான சுவரில் ஒரு பெண்ணால் எப்படி ஏற முடியும்? முட்டாள் தனமானது! இத்தகைய முட்டாள் தனமான செயல்களைச் செய்ய நினையாத அளவுக்குக் கற்பிக்கப் பட்டிருக்கிறார்கள். கோட்டையை விட்டு அவர்கள் வெளிச் செல்ல மாட்டார்கள். வீட்டை விட்டுப் போவதில்லை" என்று மறுத்துரைத் தார்கள்.

உண்மையில் அங்கு நடப்பது இப்படித்தான், அலுவல்களின் நிமித்தம் ஆண்கள் வெளியேறிச் சென்ற பிறகு, பெண்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். கோட்டைக்குள்ளேயே ஒரு சிறிய கோயில் இருக்கிறது. அங்கும் சில வேளைகளில் சென்று வருவர். வீட்டுக்காரியங்களைப் பெண்களே செய்கிறார்கள். தமிழ் ஓரளவுக்குக் கற்றிருக்கிறார்கள். அவர்களுக்குக் கற்பிப்பதற்கென்று ஆசிரியைகளை அவர்கள் தங்கள் சொந்தப் பணச் செலவில் ஏற்பாடு செய்து கொள்வ துண்டு. வெளி உலகில் பரபரப்பாக உள்ள தொலைக்காட்சி, சினிமா, நாடகம் என்று எதையும் அவர்கள் அறியமாட்டார்கள்.

அவர்களிடையே நடைபெறக் கூடிய திருமணச் சடங்குகள் ஆர்வ மூட்டக் கூடியன. நடு இரவில் திருமணச் சடங்கு நடைபெறுகிறது. இதற்கான காரணத்தை எவரும் அறியார். திருமணம் முடிந்ததும் மணமகன் மாமனார் வீட்டில் தங்கச் சென்று விடுகிறான். தன் மனைவியின் இளைய சகோதரிக்குத் திருமணம் முடிகின்ற வரை அவன் அவ்வீட்டிலேயே தங்கிவிடுகிறான். பின்னர் தன் மூத்த மகளுக்குச் சொந்தமாக வீடு அமைய தந்தை ஏற்பாடு செய்கிறார். பின்னர் அந்த வீடு இளைய மகளின் சொத்தாகி விடுகிறது.

இக்கிளையினர் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும், திருமண உறவுகள் அவர்களுக்குள்ளாகவே நிகழ்கின்றன. அவர்களது கோட்டை களுக்குள்ளாகச் சில வேளைகளில் சிலருக்கு மணமகள் கிடைக்காமற் போவதுண்டு. அவர்களது பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப அத்தகையவர்கள் மணமுடிக்கப் பெறாமலேயே இருந்து விடுவார்கள்.

பெண்களைப் பொறுத்தமட்டில் பிரச்சினையே கிடையாது. மணமகன் கிடைக்கவில்லை என்றால் மூத்த சகோதரியின் கணவனுக்கே அவள் இரண்டாவது மனைவியாக்கப்படுவாள்.

ஒரு வினா எழலாம். கோட்டை யிலுள்ள பெண்களுக்கு மருத்துவ உதவிகள் தேவைப்படாது போகுமா?

தவிர்க்க முடியாத சூழலில் பெண் மருத்துவர் அழைத்துச் செல்லப்படுவார். ஒரு சமயம் குடல் அழற்சி நோயால் ஒரு பெண் துயருற்றிருக்கிறாள். அப்போது அவ்வூரில் ஆண் மருத்துவரே இருந்தி ருக்கிறார். ஓர் ஆண் அந்தக் கோட்டைக்குள்ளாக வருவதனால் குழப்பம் ஏற்படும் என அஞ்சப்பட்டது.

"ஆனால் அந்த மருத்துவர் வந்து கொண்டிந்த போதே அந்தப் பெண்ணுக்கு நோய் குணமாகி விட்டது. பொதுவாக நாங்கள் நோயினால் அடிக்கடி பாதிக்கப் படுவதில்லை ." என்று பெருமையோடு அவர்கள் கூறிக் கொண்டனர்.

பொருளாதார உறவுகளை குறிப்பிட்ட ஆட்கள் மூலமாகவே செய்து கொள்கின்றனர். தங்களுக்கிடையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் சச்சரவுகள் ஏற்படின் தாங்களாகவே தீர்த்துக் கொள்கின்றனர். 1973இல் அந்தக் கோட்டையில் ஒரு கொலை நடந்து விட்டது. அதற்கான காரணங்கள் தெரிய வில்லை. ஆனால் பொலீசார் உள்ளே அனுமதிக்கப் படவில்லை. அந்தத் துயரமான சம்பவத்தை அடுத்துச் சில குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி விட்டன.

அங்கிருந்து வெளியேறிய பிள்ளைமார்கள் புதிய வாழ்க்கைக்குத் தங்களை உடனடியாக ஆட்படுத்திக் கொண்டனர். அவர்களில் ஒரு மூதாட்டி பஸ்களையும், யானைகளையும், கூட்டத்தையும் முதன் முறையாகப் பார்த்த போது அதிர்ச்சியுற்று நினைவிழந்து போயிருக்கிறாள்.

ஃபூர்ணிக்காவின் நூலைப்படித்து சில மாதங்களின் பின்பு– சுஜாதா கணையாழியின் கடைசிப்பக்கத்தில் பதிவுசெய்திருந்த குறிப்பொன்றிலும் இந்த– ஸ்ரீவைகுண்டத்து கோட்டைப் பிள்ளைமார் பற்றி எழுதியிருந்ததை படித்தேன்.

தமிழக படைப்பாளிகள் இந்த கோட்டையை தரிசித்தால் அற்புதமான நாவல் ஒன்று எதிர்காலத்தில் தமிழுக்கு கிடைக்கலாம் என சாரப்பட சுஜாதா எழுதியிருந்தார்.

இவ்விதம் வெளி உலகம் தெரியாத மக்கள் உலகில் எங்கும் வாழலாம். வெளியே இருக்கும் நாம் உள்ளே இருக்கும் அவர்கள் மீது அனுதாபம் கொள்வதா– அல்லது எம்மைப் போன்று வெளி உலகத் தொல்லைகள் இன்றி அவர்களாவது நிம்மதியாக வாழட்டுமே என ஆறுதல் அடைவதா?

"இணையம்" உலகை சுருங்க வைத்துக்கொண்டு இருக்கும் இந்த யுகத்தில்– ஸ்ரீவைகுண்டத்து கோட்டை இன்றும் எனது மனக்கண்ணில் தரிசனம் தருகின்றது.

❑

---

# சொர்க்கம்

*காதல் ஒத்திகை கவிதையாகியது*
*கருத்துள்ள படிப்பினை கட்டுரையாகியது*
*சிற்பியின் சிந்தனை கற்சிலையானது*
*சிங்காரக் கைவண்ணம் சித்திரமானது !*
*நயன நளினம் நடனமாகியது*
*நயமான சைகைகள் நாட்டியமாகியது !*
*நாடி வந்ததால் நாடாக மாறியது*
*நாட்டு நடப்புகள் நாடகமானது !*
*நினைவின் நிழல்கள் ஓவியமாக மாற*
*நிறைவான கதைகள் காவியமாக வாழ*
*நித்திலம் போற்றும் உத்தமராகி மக்கள்*
*தர்மம் வளர்த்தால் சொர்க்கமாக மாறும் !*

ஆக்கம் : நல்லைக்குமரன்
(மெல்போர்ண்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸிஸ் மார்ட்டீனின் நாய்க்குட்டி

சிறுகதை

—விமல் குழந்தைவேல்— (லண்டன்)

பதின்மூன்று வருடகால வேலையிடத்து அனுபவத்தில் எத்தனையோ வகையான வாடிக்கையாளர்களைத் தினமும் காண நேருகின்றது. வருவதும், வாங்குவதும், போவதையுமே வழக்கமாகக் கொண்ட வாடிக்கையாளர்களுக்குள் மிஸிஸ் மார்ட்டீன் வித்தியாசமானவள்.

நான் வேலை செய்யும் கடைக்குப் பக்கத்து குடியிருப்புக்கு ஆறு மாதத்துக்கு முன்புதான் குடிவந்தாள். கடைக்கு வந்த முதல் நாளிலேயே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவள். அதன் பிற்பாடு என்னோடு சினேகமாகப் பேசிப் பழகத்தொடங்கிவிட்டாள்.

இரவில் நானும் மனைவியும் கட்டிலில் இருந்து பல விசயங்கள் பற்றியும் பேசுகின்ற வேளைகளில் மிஸிஸ் மார்ட்டீனும் எங்கள் சம்பாசனைக்குள் குறுக்கறுக்கின்றளவுக்கு பழக்கமாகி விட்டிருந்தாள்.

கடைக்கு வரும் போதினில் என்னிடம் கேட்கும் கேள்வி யிலிருந்தும், நான் கேட்கின்ற கேள்விக்கான அவளின் பதிலிலிருந்தும் மிஸிஸ் மார்ட்டீன் நல்லா படித்தவளென்பதும், நல்ல குடும்பத்திலிருந்து வந்தவளென்பதும் என்னால் உணர முடிந்த விசயமாயிற்று.

ஒல்லியான உடல், மெல்லிய உதடு. கூரிய மூக்கு, பிடரியில் புரளும் முடி, அறுபதை நெருங்குகின்ற வயதிலும், மிஸிஸ் மார்ட்டீன் சிரித்த முகமாய் அழகாய்த்தானிருப்பாள்.

கணவன் இறந்ததுக்குப் பின்பாய், பிள்ளைகளுக்கு ஏன் பாரமாய் இருப்பானென்று நினைத்து தொலைவாக ஓர் இடம் பார்த்துத்தான் இங்கு வந்ததாகவும், தற்போது அரசாங்க வீட்டில் அரச உதவிப் பணத்திலேயே வாழ்வதாகவும் என்னிடம் சொல்லியிருக்கின்றாள்.

எப்போது கடைக்கு வரும்போதும் அவளின் செல்ல நாய்க்குட்டியையும் மார்போடு அணைத்தபடியேதான் வருவாள். அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஏசு பாலகனை ஏந்தியபடி நிற்கும் மேரிமாதா போலத்தான் தோற்றமளிப்பாள்.

பிறந்த குழந்தையைவிடவும் சிறிதான சடைத்தநாய் உடம்புக்குள் தேடிக் கண்டு பிடிக்குமாப் போன்ற சின்னமுகம். தொங்குகின்ற நீளமான காதுகள், பரபரவென்று பார்க்கின்ற குண்டுமணி கண்களென்று அழகான அந்த நாய் குட்டியை கண்டதுமே நான் தூக்கி அணைத்துவிட்டுத்தான் கொடுப்பேன்.

மூன்று நாள் குட்டியில் எடுத்து வளர்த்தாளாம். தற்போது எத்தனையோ பேர் விலை கொடுத்து வாங்க கேட்கிறார்களாம், எனது செல்ல பிள்ளையை நான் எப்படி விற்பேனென்று மறுத்துவிட்டாளாம் என்பாள்.

“ஏன் மிஸிஸ் மார்ட்டீன்... எந்த நேரமும் இதை ஏந்திக் கொண்டே திரிகிறாய்” என்று கூட நான் ஒருநாள் கேட்டுவிட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன செய்ய.... இவள் மிகவும் நோட்டி கோர்ள். வீட்டுல விட்டிற்று வந்தால் ஜோனைப் படாதபாடு படுத்திவிடுவாளே. பாவம் ஜோன் வயசு போன காலத்துல தானும் தன்ரபாடுமெண்டு வீட்டுலேயே இருக்கிறான். அவனுக்கு ஏன் கரைச்சல் குடுப்பானெண்டு தான் இவள என்னோடவே எடுத்துக் கொண்டு வரவேண்டியதாக இருக்கு” என்றாள்.

“ஏன் ஜோனோடு சண்டை பிடிப்பாளா?”

“பெரிசா சண்டையெல்லாம் கிடையாது. தன்னோடு விளையாட ஜோனைச் சீண்டிக் கொண்டேயிருப்பாள். ஜோனுக்குத்தான் இதெல்லாம் பிடிக்காதே. என்னுடைய மடியில தலை வைத்துக் கொண்டு ரெலிவிசன் பார்ப் பதைத் தவிர ஜோனுக்கு என்ன தான் பிடிக்குமோ தெரியாது. இவள் நோட்டி றோசி எனது செல்லக்குட்டி ஒரே துடிதுடிப்புத்தான்” என்று கொண்டு தனது கன்னத்தை நாய்க்குட்டியின் கன்னத்தோடு அணைத்து உரசிக் கொண்டேயிருந்தாள்.

“மிஸிஸ் மார்ட்டீன் றோசியை நீ விலைக்கு வாங்கினாயா இல்ல யாராவது தந்தாங்களா?”

பல நாட்களாகக் கேட்க வேண்டு மென்று நினைத்திருந்த கேள்வி.

“நோ...நோ... என்னுடைய சினேகிதி எனது ஐம்பத்தைந்தாவது பிறந்த நாள் பரிசாகத் தந்தது. இப்ப எத்தனையோ பேர் றோஸிய விலைக்கு கேக்குறாங்க. றோசி, பெத்த குழந்தை போல எனக்கு. அத என்னெண்டு விற்கமுடியும்..... என்ன றோஸி உன்ன நான் விற்பேனா?” என்று செல்லம் பொழிந்தாள் றோஸியிடம்.

“ஜோனைத்தான் நான் இன்னும் ஒரு தடவை கூட பார்க்க வில்லை”யென்று சொன்னபோது, “அதற்கென்ன ஒரு நாளைக்கு கூட்டிவாறனே” என்று விட்டு போனவள் அடுத்த நாள் வந்தபோது வெளியில் ஜோன் நிற்கிறான் வந்து பாரேன்” என்றாள்.

கடைக்குள் நின்றவர்களெல்லாரும் போன பின்பாக கிடைத்த நிமிடங்க ளுக்குள் நான் வெளியில் போன போது, பிரவுன் கலரில் சடைத்து பருத்த உயர மான உடம்போட நிண்ட ஜோன் என்னைக் கண்டதும் பழக்கப் பட்டவனைக் கண்டது போல தன்னுடைய சுறுண்டு நீண்ட வாலை ஆட்டிற்று.

ஹலோ ஜோன் என்று கொண்டு நான் அதன் முதுகை தடவி விட்டபோது, நன்றி சொல்வதுபோல தொங்கிய நாக்கோடு அது என்னை அண்ணார்ந்து பார்த்தபோது வாயிலிருந்தும், மூக்கிலி ருந்தும் வெளிவந்த சுவாசக் காற்று நீராவியாய்த் தெரிந்தது.

அதற்குப் பிறகான நாட்களில் மிஸிஸ் மார்ட்டீன் ஜோனுக்காக வாங்கும் தகர டப்பாச் சாப்பாடுகளின் எண் ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போயிற்று.

நத்தாருக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஆட்கள் இல்லாத நேரம்பார்த்து றோஸியை அணைத்தபடி வந்த மிஸிஸ் மார்ட்டீன் கையோடு கொண்டு வந்த பையை என்னிடம் தர நான் அதைப் பிரித்துப் பார்த்தபோது ஜோனுக்கான சாப்பாடு தகரடப்பாக்கள் நிறைந்து கிடந்தது கண்டு என்ன மிஸிஸ் மார்ட்டீன் என்றேன்.

“ஒன்றுமில்லை பணம் எதுவும் வேண்டாம். இதை திரும்ப எடுத்துக் கொள் பிளீஸ்” என்று கெஞ்சினாள்.

“ஏன் ஏதும் காலாவதியான சாப்பாட்டை தந்து விட்டேனா அப்படி யென்றால் மன்னித்துக் கொள் இதற்கான வேறு சாப்பாட்டுச் சாமான் களையும் நான் தருகிறேன்” என்று விட்டு டப்பாக்களின் பின்பக்கத்தில் பொறித் திருக்கும் திகதியைப் பார்த்தபோது அவளின் முகத்தில் என்றுமில்லாத சோகம் அப்பிக்கிடந்தது.

தாங்களாக சொல்ல விரும்பாத போதில் நாமாக திரும்பத்திரும்ப கேள்வி கேட்பதை நாகரீகமற்ற செயலென்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரர் நினைப்பார்கள். என்றாலும் மிஸிஸ் மார்ட்டீனின் முகத்தில் தெரியும் சோகம் அவளிடம் என்னை திரும்பவும் கேள்வி கேட்கவே செய்திற்று.

"என்ன மிஸிஸ் மார்ட்டீன் ஏதும் பிரச்சினையா?"

கேள்வி கேட்ட என்னை நிமிர்ந்து பார்த்தவேளையில் மெழுகுசிலை உருகி வழிவதுபோல் அவளின் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டேயிருந்தது.

"நேற்று ராத்திரி ஜோன் செத்திட்டான். மாரடைப்பு என்றுதான் நினைக்கிறன். இரவு படுத்தவன் எழுந் திருக்கயில்ல. நேற்றிரவு எண்ட மடியில் படுத்து ரெலிவிசன் பார்த்துக் கொண்டி ருந்தவன் இண்டைக்கு இல்ல. ரெண்டு பிள்ளைகளாய் வளர்த்தன் ஒண்டு போயிற்று, றோஸிதான் பாவம் காலையில் இருந்து எதுவுமே சாப்பிடுறாளில்ல. ஜோனை அதிகமாக மிஸ் பண்ணுகிறாள் என்று நினைக்கிறன். இனி இவள்தான் எனக்கு ஆறுதல்."

சொல்லும் போதே கட்டுப்படுத்த முடியாமல் வாய் பொத்தி அழுதுவிட்டாள் மார்ட்டீன். றோஸி மார்ட்டீன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. மிஸிஸ் மார்ட்டீனுக்கு ஆறுதல் சொல்ல நான் வார்த்தைகளைத் தயார் செய்யும் வினாடிக்குள் இன்னொரு வாடிக்கை யாளர் வந்துவிட, மிஸிஸ் மார்ட்டீன் பையுக்குள் றோஸிக்கான சாப்பாடுகளை போட்டுக்கொடுத்து உனது நிலைமைக்கு வருத்தங்கள் என்றும், மீண்டும் ஆறுதலாகக் கதைக்கிறேன் என்றும் சொல்ல இரண்டு மூண்டு தடவை நன்றி சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

வேலை முடிந்த பின்னேரப் பொழுதொன்றில் ஒரு பூங்கொத்து வாங்கிக் கொண்டு மிஸிஸ் மார்ட்டீனின் வீட்டுக்குப் போய் வரவேண்டு மென்று தான் நினைத்திருந்தேன். நத்தார் நெருங்குகின்ற வியாபாரக் கெடுபிடியால் போக முடியவில்லை.

அண்ணன் வீட்டுக்கு சாப்பாட்டுக்கு போய் வந்து தூங்கப்போன நத்தார் நாளின் பின்னிரவில் நானும் மனைவியும் பேசிக்கொண்டோம்... பாவம் மிஸிஸ் மார்ட்டீன் இந்த நத்தார் அவளுக்கு சோகமானதொன்று. ஆனால் விடிந்ததும் எங்கள் தேசத்தை சுனாமி வந்து தாக்கிய அனர்த்தச் செய்தியை கேட்கப் போகின் றோமென்று எங்களுக்கு என்னென்று தெரியும்.

சுனாமி வந்து தேசத்தின் கரையோரங்களை சுடுகாடாக்கிவிட்டுப் போன இரண்டாம் நாள் காலை.

மூன்று நாள் தொடர்ந்து தூங்கி எழுந்ததுபோல் ஊதிப்போன விடியா முகங்களோடு வெள்ளைக்காரர் வெளி யில் வரத் தொடங்கியிருந்தார்கள். சுனாமி வேறு மேலும் அவர்களின் முகங்களை சோகமாக காட்டவேண்டி நிர்ப்பந்தித்திருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கு வந்து போகின்றவர்களில் அனேகமானவர்கள் அதிகமாக எதுவும் பேசுகிறார்களில்லை. சாமான்களை வாங்கிக்கொள்பவர்கள் நான் கொடுத்த மிச்சப் பணத்தை என் முன்னால் மேசைமீதிருக்கும் சுனாமி நிவாரணநிதி உண்டியலில் போட்டுவிட்டு போகிறார்கள்.

வரிசையில் ஆறேழு வாடிக்கை யாளர்கள் நிற்பதை நிமிர்ந்து பார்த்த போது கதவைத் திறந்து கொண்டு றோஸியை மார்போடு அணைத்தபடி மார்ட்டீன் வருவது தெரிகிறது.

வந்தவள் கையசைத்து ஹலோ சொல்லிவிட்டு வரிசையில் நிற்காமல் விலத்திநின்று என்னையே உற்றுறங்க பார்த்துநின்றவளிடம் என்ன விசய மென்று முக அபினயத்தில் நான் கேட்க ஆட்களை முதலில் அனுப்பி முடியென்று அவளும் கண்களால் சொல்லுகின்றாள்.

பெரும்பாலும் கடனுக்கு ஏதும் சாமான்கள் கேட்குமென்கிற போதில் தான் இப்படி வரிசை விலத்தி நின்று ஆட்கள் போன பின்பு வெட்கப்பட்டு மரியாதையாகக் கேட்பாள். இன்று தான் முதன்முதலாய் பார்க்கின்றேன்.

வாடிக்கையாளர் அனைவரும் வெளியேபோக சந்தர்ப்பம் பார்த்து நின்றவள் போல், கட்டவிழ்த்த கன்று போல ஓடிவந்து மேசைமுன்னால் நின்று கொண்டு என்னையே பார்க்கின்றாள்.

“என்ன மிஸிஸ் மார்ட்டீன் எப்படி சுகமா?”

ஜோனைப்பற்றியோ, நத்தார்பற்றியோ நினைப்பூட்ட நான் விரும்பவில்லை.

“நான் நல்லம்.... மன்னிக்க வேணும்..... இதுவரைக்கும் நான் உன்னிடம் கேட்கயில்ல இப்ப கேக்குறன்..... நீ எந்த நாட்டவன்?”

வெள்ளைக்காரர் மனத்துக்குப் பிடித்து பழக ஆரம்பித்தால் நாடு, நிறம், இவையெல்லாம் பார்க்க மாட்டார்கள் என்ற நற்பண்பு கொண் டவர்கள். மிஸிஸ் மார்ட்டீனின் பதட்டமான கேள்வியில் அவள் ஏன் கேட்கிறாள் என்பது எனக்கு புரிந்துவிட்டது.

“நான் சிறிலங்கன்.... மிஸிஸ் மார்ட்டீன் உனக்கு தெரியாதா?”

“ஓ.... கடவுளே.... நாட்டுல உன்னுடைய சொந்தபந்தங்களின் நிலை மையை அறிந்தாயா? நீ அதுவிடயமாக திடமாக இருக்கிறாயா? இந்த சோகத்துக்குள் இண்டைக்கு நீ வேலைக்கு வந்திருக்கத்தான் வேணுமா?”

அவளின் கேள்விகளுக்கு பதில் சொன்னால் வார்த்தை உடைந்து அழுது விடுவேன் என்பதால் தலையை மட்டும் அசைத்துக் கொண்டேன்.

“என்னால் அறிய முடியுது உனது மனநிலைய. ரெலிவிசனைப்பார்த்துப் பார்த்து இரண்டு நாட்களாக எனக்கே நித்திரையில்லையென்றால் உனக்கு எப்படிஇருக்கும். இதென்ன கொடுமை?... இதென்ன பயங்கரம்? என்ன நடக்குது இந்த உலகத்துல? உனக்கு நான் என்னென்று ஆறுதல் சொல்ல?”

பேச்சின் நடுவில் வந்த வாடிக்கை யாளன் உண்டியலுக்குள் பணம் போடுவ தையும் உற்றுப் பார்க்கின்றாள் மிஸிஸ் மார்ட்டீன்.

“ஓ... நோ..... இந்த நேரத்தில் கையிலும் காசில்லையே, உள்ளதெல் லாத்தையும் ஜோனின் சவ அடக்கத்துக் கல்லவா செலவு செய்து விட்டேன்.”

“மிஸிஸ் மார்ட்டீன் நீ வந்து என்னிடம் விசாரித்ததே பெரிய ஆறுதல். அதற்கே நான் நன்றிக்கடன் பட்டிருக் கின்றேன். உன்னால் முடிந்தபோது நீ உதவி செய்து கொள்ளலாம். அதற்கேன் கவலைப்படுகின்றாய்?”

பதை பதைத்தவளை ஆறுதல் படுத்த முயற்சித்தேன்.

“இல்லையே.... நானும் ஏதும் செய்ய வேணும்போல என்னுடைய மனம் கிடந்து துடிக்குதே நான் என்ன செய்வேன். அந்தச் சின்னக் குழந்தைகளையும் பெண்களையும் பார்க்க பார்க்க......”

இப்போது மிஸிஸ் மார்ட்டீனின் உதடுகள் துடிக்கின்றன. அணைப் பிலிருக்கும் றோஸி நடப்பது என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று புரியாமல் அவளின் முகத்தையே பார்க்கின்றது. இதற்குள் இன்னொரு வாடிக்கையாளன் வந்து விட இடைஞ்சல் செய்ய விரும்பாதவள்போல் நான் வருகிறேன் என்று கை சைகையால் சொல்லிவிட்டு நடந்தவளின் மார்பில் சாய்ந்திருந்த றோஸி அவளின் தோளுக்கு மேலால் எட்டி என்னை பார்த்துக் கொண்டே போகின்றது.

நத்தார் விடுமுறைக்கு பின்பாய் தொடங்கிய முதல்வேலை நாள் என்பதால் நேரம் போனதே தெரியவில்லை. பின்நேரம் வேலைமுடிய அரை மணி நேரம் இருக்கும்போது மிஸிஸ் மார்ட்டீன் அவசரமாய் வருவதக்கண்டு ஹலோ மிஸிஸ் மார்ட்டீன் என்றேன்.

பதிலுக்கு ஹலோ சொல்லிக் கொண்டு வந்தவள் என்னைப் பார்த்து சிரித்தபடியே பர்சைத்திறந்து நான் கைந்து பண நோட்டுக்களை எடுத்து அவைகளை மடித்து சுனாமி நிவாரண நிதி உண்டியலுக்குள் திணித்துவிட்டு மீண்டும் நிமிர்ந்து என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டு நெஞ்சின் நடுவே கைவிரித்து வைத்துக் கொண்டு ஒரு பெருமூச்சினை விட்டுவிட்டு மேலே அண்ணார்ந்து கடவுளைக் காட்டுவது போல கண்விழியை முகட்டுக்கு செலுத் துகின்றாள்.

பலத்த போட்டியொன்றில் வெற்றி பெற்றவள் போலவும், பெற்ற பரிசுத் தொகையைத்தான் உண்டியலில் போட்டு விட்டு நிற்பது போலவும் பெருமை படர்ந்த முகத்தோடு நின்ற மிஸிஸ் மார்ட்டீனை நான் ஆச்சரியமாக பார்த்து “நன்றி மிஸிஸ் மார்ட்டீன்” என்றேன். “ச்சு.... இதுக்கெல்லாம் எதுக்கு நன்றி கடவுள் எல்லோரையும் காப்பாற்றுவார்” என்று விட்டு அவள் நடந்த போதுதான் கவனித்தேன்.... எந்நேரமும் அவள் மார்போடு அணைத்தபடி இருக்கும் றோஸியைக் காணவில்லை. பதிலாக ஒரு கரடிப் பொம்மையொன்றையே அணை த்து கொண்டிருந்தாள்.

“மிஸிஸ் மார்ட்டீன்!”

போய்க்கொண்டிருந்தவள் நான் அழைத்ததும் திரும்பி வந்து என்ன என்றாள்.

“எங்க றோஸி? என்ன நடந்தது றோஸிக்கு?”

“ ஒன்றும் நடக்கவில்லையே”

அப்போ எங்க றோஸி?”

“அவள் நலமாகத்தான் இருப்பாள்”

“எங்க?”

“யார் விலைக்கு வாங்கிக் கொண்டார்களோ அவர்களிடத்தில்.”

“என்ன மிஸிஸ் மார்ட்டீன் றோஸியை வித்திட்டியா ஏன்?”

மிஸிஸ் மார்ட்டீன் பதில் சொல்ல வில்லை. எதிரே இருந்த உண்டியலை தூக்கி குலுக்கிக்காட்டி விட்டு வைத்தாள். அவளின் முகத்தில் எந்தவித சலனமும் தெரியவில்லை.

“மிஸிஸ் மார்ட்டீன் அதுக்கு றோஸி யையா விற்பாய்?”

என் கண்கள் பனித்திருப்பதை அவள் கவனித்திருக்க வேண்டும்.

“ஏய்,,ஏய்....இதுக்கெல்லாம் கவலைப்படாதே, றோஸியை நான் என்ன கொலையா செய்துவிட்டேன்? அவள் எங்கோ, யாரிடமோ செல்லப்பிள்ளையாய், சுகமாய்த்தானே வளரப்போகின்றாள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நீயும் கவலைப்பட வேண்டாம், கடவுள் இருக்கின்றார். உனக்கு ஒன்று சொல்லட்டுமா? இனித்தான் என்னால் நிம்மதியாகத் தூங்கமுடியும், நீ கவலைப்படாதே... எனக்கு இனிமேல் இவன் இருக்கிறான்” என்று பயித்தியக் காரிபோல் கரடிப்பொம்மையை அணைத்துக் கொண்டு எனது தோளை தொட்டுத் தடவி ஒருதரம் அமுக்கிவிட்டுப் போனவளைப் பார்த்துக் கொண்டே நின்றேன்.

யேசு பாலகனற்ற மேரி மாதா சிலையொன்று நடந்து மறைவது போல் எனது தூரப்பார்வையிலிருந்து விலகி வெள்ளைப் புள்ளியானாள் மிஸிஸ் மார்ட்டீன். ❏


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் எழுத்தாளருக்கு நோபல் பரிசு



'சமுதாயத்தின்கண் புரையோடிப் போயிருக்கும் மூடநம்பிக்கைகளையும், பழமைமிக்க கொள்கை களையும் தனது எழுத்துமூலம் பகிரங்கமாக எதிர்த்துப் பெரும் போராட்டமே செய்த 'எல்ஃப்ரீட் ஜெலினக்' 1946 ஆம் ஆண்டு அக்டோபர் 20 இல் ஆஸ்திரிய நாட்டிலுள்ள ஸ்டைரியா மாநிலத்தில் இருக்கும் முர்சுஷ்லாக் என்ற நகரத்தில் பிறந்தார். இவருக்குத்தான் இந்த ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு கிடைத்துள்ளது. இதனால் பெண் எழுத்தாளர்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள்.

அன்று இந்தியக் குடிமகன் ரவீந்திரநாத் தாகூர் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றபோது ஆசிய நாட்டவர்கள் பெருமைப்பட்டார்கள். இந்த ஆண்டு ஒரு பெண்மணிக்கு நோபல் பரிசு கிடைத்தமையால் உலகப் பெண்கள் அனைவருமே பெருமைப்பட்டுக் கொள்கின்றார்கள்..

சிறுவயதிலிருந்தே கவிதைகள் எழுதத் தொடங்கினார். இவரது "லிசாஸ் ஷாட்டன்" என்ற முதல் கவிதைத் தொகுப்பு 1967 இல் வெளிவந்தது. மாணவ இயக்கங்களுடன் இவர் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் இவரது எண்ணங்கள் சமுதாயத்தின் புரையோடிப்போன அர்த்தமற்ற கருத்துக்களைக் கண்டித்து எழுதும்படி இவரைத் தூண்டின. அதனால் இவரது கருத்துக்கள் மாணவ சமுதாயத்தால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

1970 ஆம் ஆண்டில் இவர் முதல்முதலாக 'விர்சிண்ட் லாக்வோகல் பேபி' என்னும் நாவலை வெளியிட்டார். இக்கதை பழமைவாதிகளை நையாண்டி செய்வதாக எழுதப்பட்டிருந்தது. இதன் பின்பு இவரால் எழுதப்பட்ட படைப்புகள் சமுதாயத்தின்கண் புரையோடியிருக்கும் குறைபாடுகளைத் தட்டிக் கேட்கும் முறையிலேயே அமைந்திருந்தன. கதைகள், கவிதைகள் மட்டுமல்லாமல் நாடகங்களையும், பாடல்களையும் எழுதினார். இவரது படைப்புகள் வன்முறையையும், ஆணவமும், அதிகாரமும் நிறைந்த இரக்கமற்ற சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டின. நாடக அரங்குகளுக்கும் வானொலிகளுக்கும் மேலதிகமான பல ஆக்கங்களை வழங்கி வந்தார். திரைப்படங்களுக்கும் கதைகள் எழுதியுள்ளார். எல்லா வகையான ஆக்கத்துறைகளிலும் தடம்பதித்துள்ளார்.

இவருடைய எழுத்துக்களுக்கு அடிநாதமாக விளங்கிய சீர்திருத்தக் கொள்கைகளைப் போற்றும் வகையில் இவருக்கு நோபல்பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளார்கள். பெண் எழுத்தாளர்கள் பெருமைப்பட வேண்டிய விடயமல்லவா இது. இருந்தும் இப்பரிசைப் பெற எழுத்தாளர் விரும்பவில்லை எனத் தெரியவந்துள்ளது.

**- புதினப்பித்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொள்கைப் பற்றுறுதி குன்றாத முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன்

ஈழத்தின் இலக்கிய வரலாற்றிலே முற்போக்கு இலக்கியங்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் ஏராளம். அறுபதுகளுக்குப் பின் முற்போக்கு எழுத்தாளர்கள் செழிமை மிக்க இலக்கியங்களைப் படைக்கலாயினர். அதன் காரணமாக ஈழத்து இலக்கியம் செழுமை பெற்று இலக்கிய வரலாற்றிலும் தனித்துவம் பெற்றது. இக்கால கட்டத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள் பரவலாகப் பேசப்படலாயின. முற்போக்கு எழுத்தாளர்கள் சமுதாயத்தை மாற்றி யமைக்க வேண்டுமென்ற இலட்சிய வேட்கையுடன் தமது படைப்புகளை ஆக்கினார்கள். இவ் எழுத்தாளர்களில் அநேகர் மாக்ஷிஸ சித்தாந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர்கள். இவர்கள் ஸ்தாபன மயமாய் இயங்கும் நோக்குடன் 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்ற அமைப்பை ஐம்பதுகளில் உருவாக்கினார்கள். இவர்கள் மக்களுடைய போராட்டங்களில் நேரடியாகவே பங்கு பற்றியிருக்கின்றார்கள். மக்களுடைய போராட்டங்கள்– தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டம் – தொழிலாளர்கள் விவசாயிகளின் போராட்டம் ஆகியவற்றில் நேரடியாகப் பங்குபற்றி இருந்ததுடன் அப்போராட்டங்களில் தாங்கள் பெற்ற அனுபவங்களையும், உணர்வுகளையும் கலைத்துவமான படைப்புகளாக வெளிக் கொணர்ந்தார்கள். இவர்கள் மக்களைப் பற்றி மக்களுக்காகவே தமது படைப்புகளை மக்களுக்கு வழங்கினார்கள். அதனால்தான் இவர்களின் படைப்புக்கள் வலிமையானதாகவும் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியனவாகவும் அமைந்துள்ளன.

அத்தகைய எழுத்தாளர் இயக்கத்தைச் சேர்ந்த நீர்வை பொன்னையன் பற்றிய பதிவுகளை வாசகர்களுக்கும், இளம் எழுத்தாளர் களுக்கும் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

நீர்வை பொன்னையன் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள் "ஒரு எழுத்தாளன் எதை எழுதுகிறானோ அதன்படி அவனும் வாழ்ந்து காட்ட வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயம் அவனையும் அவன் எழுத்துக்களையும் மதிக்கும்" அவரைப் பொறுத்தளவில் அவர் எதை எழுதுகின்றாரோ அதன்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார். தான் கொண்ட கொள்கையில் இம்மியளவும் மாறாமல் இலட்சிய வேட்கையோடு நேர்மையான ஓர் எழுத்தாளராக எம்முன் நிற்கின்றார். புகழ்ச்சி, பட்டங்களுக் கெல்லாம் சிறுமைப்படாமல் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக அமைதியாக இருந்து இலக்கியப் பணி செய்து வருகின்றார். இந்த இடத்தில் மார்க்ஸிம் கார்கியின் வார்த்தை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. "மனிதன் என்னே அற்புதமானவன்" இந்தக் கூற்று நீர்வைக்கு மிகவும் பொருந்தும். அவர் என்னே அற்புதமான மனிதன் இலட்சிய வழிநின்று நேர்மை தவறாமல் இலக்கியப்

- த. சிவசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகளைப் படைப்பதுடன் இளம் எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியும் தந்துள்ளார்.

“முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்” என்ற நூலை எழுதிய நீர்வை பொன்னையன் ‘என்னுரை’ என்ற பகுதியில்........ உலகளாவிய கலை இலக்கிய வரலாற்றில் முற்போக்கு இலக்கியம் இன்று ஆழத்தடம் பதித்துள்ளது. உலக இலக்கிய வளர்ச்சிக்கும் செழுமைக்கும் அது அளப்பரிய பங்கினைச் செலுத்தியுள்ளது. வரலாற்று வளர்ச்சிப் போக்கில் அதுவும் இணைந்து வளர்ந்து விருத்தியடைந்துள்ளது.” ஆழ்ந்து அனுபவித்து எழுதிய இக்கூற்று முற்போக்கு இலக்கியத்திற்கு ஒரு முத்தாப்பைக் கொடுக்கின்றது.

1930 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் – நீர்வேலி என்னும் விவசாயக் கிராமத்திலே பிறந்த நீர்வை பொன்னையன் நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர் கல்கத்தா சர்வகலா சாலையின் பி. ஏ. பட்டதாரியானார். கல்வி கற்கும் காலத்திலேயே மாணவர் போராட்டங்களில் பங்கு கொண்டவர். அநீதிக்கும் அடக்கு முறைக்கும் எதிராக குரல் கொடுக்கத் தவறாத ஒரு இலட்சிய வாதியாகவே இருந்தார். 1957 இல் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் பல ஆண்டுகளாக வேலைதேடி அலைந்து வேலை கிடைக்காமையால் தோட்டக்காரனாகவே வாழ்ந்தார். மூத்த முற்போக்கு எழுத்தாளராகிய இவர் “சமுதாயத்தின் கண் தான் தரிசித்த தரிசனங்களை மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தி அதைப் பட்டை தீட்டி மக்களுக்கு வழங்குகிறவனே உண்மையான படைப்பாளி” என்று கூறிக்கொண்டு அறுபதுகளிலிருந்து இன்றுவரை எழுதிக் கொண்டே இருக்கின்றார்.

‘நீர்வை’, ‘ஞானி’ ஆகிய புனை பெயர்களில் கட்டுரைகள், சிறு கதைகள் எழுதியதோடு பிறநாட்டு இலக்கிய மொழி பெயர்ப்புகளும் செய்துள்ளார். ‘கலைமதி’, ‘வசந்தம்’ ஆகிய முற்போக்குக் கலை இலக்கியச் சஞ்சிகைகள் மூலமும் தன் பணியை மேற்கொண்டார். ‘தேசாபிமானி’, ‘தொழிலாளி’ ஆகிய அரசியல் வாரப் பத்திரிகைகளின் ஆசிரிய குழுவில் பணியாற்றி ஆக்கபூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார். 1969 ஆம் ஆண்டிலிருந்து 1983 வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1996 இல் இருந்து ‘விபவி’ மாற்றுக் கலாசார மையத்தில் தமிழ்பிரிவின் இணைப்பாளராகச் செயற்பட்டு ஆக்க இலக்கியம் மற்றும் கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் தன்னாலான பங்களிப்பைச் செய்து வருகின்றார்.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி ‘மேடும் பள்ளமும்’ 1961 ஆம் ஆண்டு வெளிவந்தது. “ஈழத்து எழுத்தாளர்கள் தென்இந்திய எழுத்தாளர்களுக்குக் குறைந்தவர்களல்லர். என்பதற்கு நீர்வை பொன்னையனுடைய கதைத் தொகுதி ஓர் எடுத்துக் காட்டு. இவரது எழுத்தில் நோக்கமிருக்கிறது தெளிவிரு க்கிறது. துணிவிருக்கின்றது” என்று முதலாம் பதிப்பிற்கான பதிப்புரையில் எச். ஜீ. எஸ். ரத்னவீர குறிப்பிட்டதிலிருந்து நீர்வை பொன்னையனின் எழுத்தின் உன்னத நோக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்நூல் சாஹித்ய பரிசிற்குத் தெரிவு செய்யப் பட்டபோதிலும் ‘சிறுகதை’ இலக்கியமல்ல என்று சாஹித்ய இலக்கியக்குழுவில் இருந்த ஒரு தமிழ் பேராசிரியர் இதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு வழங்குவதைத் தடுத்துவிட்டார். முதல் வருடமும், ஒரு வருடம் விட்டு அடுத்த வருடமும் சிறுகதைக்கு சாஹித்ய பரிசு கொடுக்கப்பட்டது. இரண்டு வருடத்தின் இடைப்பட்ட வருடத்தில் மட்டும் சிறுகதைக்கு பரிசு வழங்காமல் விட்டதன் காரணம் நீர்வை ஒரு கொம்யூனிஸ்ட் என்ற காரணத்தினா லேயாகும்.

1970 ஆம் ஆண்டு வெளிவந்த 'உதயம்' சிறுகதைத் தொகுதி சாஹித்ய மண்டல தமிழ் குழுவினால் சிறந்தது என்று தெரிவு செய்யப்பட்டு விருதுக்காக சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் அரசியல் காரணங்களைக் காட்டி 'உதயம்' சிறுகதைத் தொகுதி நிராகரிக்கப்பட்டு விருது வழங்கப்படவில்லை. மூவர் கதைகள், பாதை, வேட்கை, உலகத்து நாட்டார் கதைகள், முற்போக்கு இலக்கிய முன்னோடிகள், நாம் ஏன் எழுது கின்றோம்? போன்ற பல்வகைப்பட்ட படைப்பிலக்கியங்களை ஈழத்து இலக்கிய உலகிற்கு வழங்கியுள்ளார். இவரின் 'பாதை' சிறுகதைத் தொகுதி தமிழ் நாட்டில் வெளிவந்து முற்போக்கு இலக்கி யத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தது. அடுத்து 'வேட்கை' ஐந்தாவது சிறுகதைத் தொகுதியாக தமிழ் நாட்டில் அறிமுக மானது.

நீர்வை பொன்னையன் நேர்மை யுடன், ஒழுக்கமும் பண்பாடும் மிக்க மனிதர், எல்லோருடனும் அன்பாகப் பழகக்கூடியவர். விளம்பரத்தை விரும்பாத ஒரு மனிதர். கலை இலக்கியம் சம்பந்தப் பட்ட விடயங்களில் நீண்டகால அனுப வஸ்தர். எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் அதிலும் இளம் எழுத்தாளர் களை வளர்த்துவிடவேண்டும் என்பதில் அயராது பற்றுறுதி கொண்டவர். முற்போக்கு எழுத்தாளர், உழைக்கும் தொழிலாளர் விவசாயிகள் தான் நீர்வையின் படைப்புகளின் கதா நாயகர்கள்; இவர்களே வரலாற்றின் உந்து சக்தி, வரலாற்றின் போக்கை நிர்ணயிப் பவர்கள் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்.

'உலகத்து நாட்டார் கதைகள்' என்ற இவரது படைப்பு தமிழில் மீள்மொழிவு செய்து 2001 ஆம் ஆண்டு முதற்பதிப்பும் 2004 இல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்தன. இந்நூலுக்கு 'நூல்முகம்' தந்த இ. முருகையன் அவர்கள் "நாட்டார் கதைகள் பொதுமதியின் உறைவிடம்" என்று குறிப்பிட்டுள்ளார், "இக்கதைகள் அவற்றிக்குரிய கால அடிப்படையிலோ தேச அடிப்படையிலோ இங்கு தொகுக்கப் படவில்லை. காரணம், இவை கால தேச வர்த்தமானங்களைக் கடந்தவை. உலக சமுதாயத்திற்கு உரிய பொதுமைக் கருத்தியலை வெளிப்படுத்துபவை" மக்கள் இலக்கியம் என்ற தனதுரையில் நீர்வைப் பொன்னையன் விளக்கியுள்ளார். இந்நூலில் 250 நாட்டார் கதைகள் அடங்கியுள்ளன. இத்தொகுப்பிலுள்ள கதைகள் அனைத்தும் தினக்குரல் பத்திரிகையின் ஞாயிறு வாரப்பதிப்பில் வெளிவந்தவை.

இவருடைய நூல்களில் என்னை வெகுவாகக் கவர்ந்த நூல் எல்லோரும் வாசித்து வரலாறுகளை அறிந்துகொள்ள வேண்டிய நூல் 'முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்'. எல்லோருடைய படைப்பு களை வாசிக்காத எம் போன்ற வர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். முன்னோடிகளைப் பற்றியும் அவர்கள் எழுதிய சிறுகதை களையும் தந்து எழுத்துலகப் பார்வையை வியாபிக்க வைத்துள்ளார். தோழர் மு. கார்த்திகேசன் ஞாபகார்த்தமாக ...... அவரின் மறைவின் 25வது ஆண்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலில் மிக நீண்ட முன்னுரையை எழுதிய நீர்வை பொன்னையன் "ஒரு எழுத்தாளன் அல்லது கலைஞன் தனது வாழ்வை, விதியை மக்களின் விதியோடு, அவர்களது விடுதலை, மேம்பாடு, மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை ஆகிய வற்றுக்கான போராட்டத்தோடு இணைக்கின்ற போது தான் அவன் புனர் ஜென்மம் எடுக்கிறான். அவனுடைய படைப்புக்கள் வீரியமும் வலுவும் உள்ளனவையாக அமைகின்றன.

அவனுடைய படைப்புக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தையோ குறிப்பிட்ட நாட்டையோ சார்ந்தவையாக இருக்க முடியாது. அவை சர்வ வியாபக மானவை, காலத்தை வென்றவை" என்று தெளிவான தனது கருத்தை கூறியுள்ளார். உலகம் ஏற்றுக்கொண்ட எழுத்தாளர் மார்க்ஸிம் கார்க்கியின் புகைப்படத்தை அட்டையில் தாங்கி வெளிவந்திருக்கும் இந்நூலின் ஆசிரியர், பத்து இலக்கிய கர்த்தாக்களின் அறிமுகத்துடன் அவர்களின் படைப்பாற்றல்களின் உத்வேகத்தை நயம்பட எடுத்தியம்பி யுள்ளார். மார்க்ஸிம் கார்க்கியின் 'மனிதன் பிறந்தான்', பிரேம் சந்த் எழுதிய 'கொஞ்சம் கோதுமை', லூசுன் தந்த 'ஒரு நிகழ்ச்சி', சரத் சந்திரர் எழுதிய 'மகேஷ்', ஆஸ்த்றோவஸ்கி படைத்த 'வீரம் விளைந்தது', தகழி தந்த 'தந்தையும் மகனும்', அப்பாஸ் ஆக்கிய 'அநாமதேய அகதி', அசுரவேக எழுத்தாளர் ராகுல சாங்கிருத்யாயனின் 'சுமேர்', முல்க்ராஜ் ஆனந்த் எழுதிய 'நாவிதர் சங்கம்', கிருஷன் சந்தர் படைத்த 'முழுநிலவு' ஆகிய முத்தான பத்து சிறுகதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இவரின் நூலில் இடம் பெற்றுள்ளன.


நீர்வைப் பொன்னையனின் "நாம் ஏன் எழுதுகின்றோம் ?" என்ற கட்டுரைத் தொகுதியின் முதற்பதிப்பு 2004 செப்டம்பரில் வெளிவந்தது. 1970களில் வெளிவந்த 'களனி' என்ற இலக்கிய சஞ்சிகையிலும், 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டு மகா நாட்டு மலராகிய 'புதுமை இலக்கியத்திலும்', 'விபவி' கலாசார மையத்தின் செய்தி ஏட்டிலும் வெளிவந்த கலை இலக்கியக் கட்டுரைகளில் பதினைந்து இத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது. "முற்போக்கு இலக்கியம் ஒரு வாழ்க்கை நோக்கு, அதாவது வரலாற்றுப் பின்னணியில் அமைந்த மக்களின் மேம்பாட்டுக்கான ஒரு சக்திமிக்க கோட்பாடு, இலக்கியம் இலக்கியத்துக்காகவே என்று கூறுகின்ற ஒரு வெறும் போக்கு அல்ல. முற்போக்கு இலக்கியம் மனிதநேயக்குரல் ஓங்காரமாக ஒலித்துக் கொண்டே இருக்கும்; இது கலகக்குரல். பழைய உலகை மாற்றி புதிய உலகை உருவாக்கும் உன்னத லட்சியத்துடன் முற்போக்கு இலக்கியம் படைக்கப் படுகின்றது."

இந்த இலட்சிய வேட்கையுடன் எழுத்துலகில் தடம்பதித்துள்ள மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வைப் பொன்னையன் கம்பீரமான தோற்றத்துடன் தனது 75வது வயதிலும் கலை இலக்கியத்துறைக்கு பெரும் பங்காற்றி உழைத்துவருகின்றார். அவருடைய 'ஜெனனம்' என்னும் சிறு கதைத் தொகுதி அச்சில் இருக்கின்றது. எதற்கும் மனஞ்சோராத இந்த ஆக்க இலக்கிய கர்த்தா தொடர்ந்தும் நீண்ட காலம் தனது கலை இலக்கிய சேவையை மக்களுக்காக ஆற்றவேண்டுமென்று இலக்கிய நெஞ்சங்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு புல்லாங்குழல்





இந்த மேடையில் நான்
ஒரு புல்லாங்குழல் மட்டுமே
எங்கோ தொலைக் காற்றினில்
கேட்கும் ஒரு நாதத்துக்காக
தவமிருக்கும்.

எனது
ஒவ்வொரு மூச்சுத் துவாரத்திலும்
உயிர் சேர்க்கும்
மெல்லிய விரல்களிடையே
தொங்கி அழுகின்றேன்
சிரிக்கின்றேன்...
இதழ் பதித்த முத்தத்தில்
அழிகின்றேன், மீண்டும்
எழுகின்றேன்...

நெஞ்சைப் பிழிந்து கொண்டு
வரும் எனது ராகத்தில்
எத்தனையோ காதலர்கள்
தழுவிக் கொண்டார்கள்...
ஏழு ஸ்வரங்களுக்குள் மட்டும்
எனது உணர்ச்சி நரம்புகள்
சுருங்கி விரிவதால்
குறுகிப் போகிறேன் மனிதா!
சுதந்திரக் காற்றைக் கூட
சுவாசிக்க முடியாமல்
உன்னைப் போல...!

– மும்தாஸ் ஹபீள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரும் பித்தரும்

**சிறுகதை**

'**வெ**சாக்' என்றால் இன, மத, பேதத்திற்கு இடமேது..? அழகை ஆராதிக்காத மனித மனம் என்று ஒன்று இருக்க முடியாதாகையால் 'வெசாக்' இந் நாட்டில் ஒரு பொது விழாவாகவே எடுக்கப்படுகின்றது....!

ஆனால் தேவிகாவுக்கு அந்த அழகுணர்ச்சி கெட்டு பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.... திருமணமாகி, சுவர்ணா அவள் வயிற்றில் இருந்தபோது மதம்சார் குரோத நடவடிக்கை ஒன்றின் போது, அவளது கணவனின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டது. திருமணமாகி வயிற்றில் சிசு ஒன்றினை பெற்றுக் கொண்டதுடன் தனது மணவாழ்வு முடிந்துவிடும் என்று எந்தப் பெண்ணாவது கற்பனையாவது பண்ணிப் பார்த்திருப்பாளா? ஆனால் அந்த அவலம் தேவிகாவுக்கு நிஜமாகவே நேர்ந்துவிட்டது... அழுதாள்... குழறினாள்... நிலத்தில் அடித்துக் கொண்டாள். முதிர் கன்னிகளாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துப் பெண்கள் மத்தியில் விதவைப் பெண்களுக்கு விமோசனம் என்று என்ன இருக் கின்றது...?

தனது மன உளைச்சலை முன்னி லைப்படுத்தித் தன்னைச் சார்ந்த வர்களுக்குத் தொல்லைகளைக் கொடுக்கக்கூடாதென்ற முடிவுடன் தனது நடமாட்டங்களையும் கதை பேச்சையும் முற்றாக மட்டுப்படுத்திக் கொண்டு ஒரு மூலைக்குள் முடங்கிக் கொண்டாள் தேவிகா!

அவளது மகள் சுவர்ணா, தாயின் துடியாட்டங்களையெல்லாம் குத்தகைக்கு எடுத்துவிட்டவள் போல எப்போதும் வீட்டை இரண்டுப்படுத்திக் கொண்டி ருந்தாள்.

தனது தாயானவள் நற்காரியங்களில் பங்குபற்றுவதை சுவர்ணா ஒன்றும் கண்டிருக்கவில்லையாதலால், தனது காரிய சித்திகளுக்காக அவள் எப்போதும் தாத்தாவிடமே அடம் பிடிப்பாள்.....

தாத்தா ஒரு இந்துவாக இருந்து இந்நாட்டில் அனுபவித்துவிட்ட துன்பகரமான நிகழ்வுகளைப் பட்டையாக அவரது நெற்றியில் தீட்டப்பட்டிருக்கும் திருநீற்றுப் பூச்சின் ஊடாக தெரியும் சுருக்கங்கள் தெளிவாகப் புலப் படுத்தின....

"தாத்தா, நான் அந்த வெசாக் அலங்காரங்களை கிட்டப்போய்ப் பார்க்க வேணும்..... என்னைக் கூட்டிக் கொண்டு போங்கோ...."

வழமையானதொரு வெசாக் தினமாக இருந்தால் அவரும் தனது பேத்தியை மகிழ்வுடன் அழைத்துச் சென்று அலங் காரங்கள் அனைத்தையும் காட்டுவதுடன் நடைபாதை விற்பனை நிலையங்களில் அவளுக்கு வேண்டிய விளை யாட்டுச் சாமான்களையும்

**—திருமலை. வீ. என். சந்திரகாந்தி—**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரப் பொருட்களையும் வாங்கிக் கொடுப்பார்......

ஆனால் இம்முறையோ மாறுபட்ட தொரு 'வெசாக்' தினத்தை அவர் தனது வாழ்நாளில் முதற் தடவையாகச் சந்திக்கின்றார்....

சித்தார்த்த கௌதமன் என்ற பெயருடன் இந்து மன்னன் ஒருவனுக்கு மகனாகப் பிறந்து, மனைவியையும் மகளையும் கைவிட்டு, அரச போகத்தைத் துறந்து, அரச மரத்தின் கீழ் சென்றமர்ந்து, ஞானமும் பரிநிர்மாணமும் பெற்று, பஞ்ச சீலங்களை உலகுக்கு எடுத்தியம்பிய மகா ஞானி கௌதம புத்தரின் சிலைகள் இன்று எவ்வகையான அவமானங்களுக்கு உட்படுகின்றன வென்பதைச் சிந்திக்கையில் தாத்தாவின் கள்ளங் கபடமற்ற மனம் வெதும்பியது.

இரு குடியேற்றக் கிராமங்களின் மத்தியில், இந்துக்கள் பிரதானமாக செறிந்து வாழும் எல்லைப் பகுதியில், சில வருடங்கள் முன்னராக அவர்களது அதிருப்திக்கு மத்தியில் பொலிஸ் பாதுகாப்புடன் அரச மரம் ஒன்று கொண்டு வரப்பட்டு நாட்டப்பட்டதை தாத்தா தனது தெருவோர வீட்டிலிருந்த படியே பார்த்திருந்தமை இன்று போல் அவரது நினைவுத் திரையில் பளிச் சிடுகின்றது.

அன்று அமைந்ததுதான் அந்த பௌத்த விகாரை....!

கோயில் என்பது அம் மதம்சார் மக்கள் மத்தியில்.... அவர்களால் சூழப்பட்டு.... வழிபாட்டுக்கு இலகுவாக, வழிவிடுவதாக அமைந்திருக்க வேண்டும்.... பிறர் மீது திணிக்கப்படும் எதுவும் நீடித்து நிலைக்க முடியாது.

"தாத்தா... இப்ப 'லைட்' எல்லாம் போட்டிட்டினம்.... வெசாக் கூடுக ளெல்லாம் தாமரைப் பூ மாதிரியும் அல்லிப் பூ மாதிரியும், நட்சத்திரம் மாதிரியும், விமானங்கள் மாதிரியும் எவ்வளவு வடிவாய் இருக்கு.... அந்த பூக்களையும் நட்சத்திரங்களையும் ஓடிப்போய் கட்டிப் பிடிக்க வேணும் போலை எனக்கிருக்கு..... அந்த விமானங்களை பிடிச்சுக்கொண்டு தொங்க வேணும் போலை ஆசையாய் இருக்கு..... நாங்கள் உடனை போவம் தாத்தா..."

சுவர்ணா தாத்தாவின் கரங்களைப் பற்றியபடி கெஞ்சினாள்.....

தாய் தேவிகா அனைத்தையும் கவனித்தபடி இருந்தாள்..... ஆனாலும் அவள் மகள் சார்பாக தந்தையிடம் எதுவும் கூறவில்லை......

சுனாமி பேரலையின் பின்னர் மனிதாபிமான அடிப்படையில் இந் நாட்டுக்கு வந்த நிவாரணப் பொருட் களுடன் பல புத்தர் சிலைகளும் கிடைக்கப் பெற்றன. இச் சிலைகளை மத ரீதியான முறையில் பிரதிஷ்டை செய்யாமல் சிலர், அரசியல் இலாப நோக்கில் பிரதேச ஆக்கிரமிப்பை மட்டும் கருத்தாகக் கொண்டு அமைக்க முற்பட்டதால் நகரில் ஹர்த்தாலும் வன்முறைகளும் தலையெடுத்தன.

ஹர்த்தாலின் போது சனநடமாட்டம் காணப்பட்ட இடங்களில் 'கிரனேட்' வீச்சு இடம் பெற்றது. திறந்திருந்த பழக் கடையொன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பௌத்த மதம் சார் முதலாளி ஒருவர் இறந்ததுடன் மூவர் காயம் அடைந்தனர். பௌத்த மத கிராமங் களுக்கு முன்பாக இந்து இளைஞர்கள் வாள் வெட்டுக்கு இலக்காகினார்கள்!

நகரின் மையத்தில் அமைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலையை அகற்றக் கோரி ஹர்த்தால் நடவடிக்கைகளும் நீதிமன்ற செயற்பாடுகளும் இடம்பெற்றுக் கொண்டி ருந்த சமயம் தேவிகாவின் வீட்டுக்கு அருகில் அமைந்திருந்த விகாரையிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெசாக் அலங்காரங்கள் இடம் பெற்றதுடன் தெருவோரமாக புத்தர் பெருமானின் சிலையொன்றும் வைக்கப் பட்டது.

அந்த அலங்காரங்களை அருகில் சென்று பார்க்க வேண்டுமென்றே சுவர்ணா பிடிவாதம் செய்து கொண்டி ருந்தாள்.....

நகரின் மத்தியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை காரணமாக இடம் பெற்ற ஹர்த்தால் தினங்களில் பல பௌத்தர்களும் இந்துக்களும் காய முற்றனர். ஒருவர் மரணத்தைத் தழுவினார்.....

இப்படியான சூழ்நிலையில் 'வெசாக்' விழாவை கருத்தில் கொண்டு ஹர்த்தால் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

ஹர்த்தால் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டாலும் இந்துக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த மன விரக்தி காரணமாக வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன, பூட்டப்பட்டேயிருந்தன! வீதிகளிலும் ஜன நடமாட்டம் அரிதாகவே இருந்தது.

மூன்று சமூகங்கள் வாழும் நகர் இது ஒரு மதம் சார்ந்தோர் அடாவடித்தனமாக எதையாவது செய்ய முற்பட்டால் நகரின் அமைதிக்கே பங்கம் ஏற்பட்டுவிடும்.

வழக்கமாக வெசாக் அலங்கா ரங்களைக் காண வென ஆவலுடன் திரண்டு செல்லும் இந்துமக்கள் இம் முறை மனச் சோர் வுடன் தத்தம் வீடுகளி லேயே தங்கிவிட்டதால் பௌத்த கோவில்களும் 'வெசாக்' கூடுகள் அமைக்கப்பட்டிருந்த பிற இடங்களும் சோபை இழந்தன.

சுவர்ணா பாதையை ஓடிச் சென்று பார்ப்பதும் தாத்தாவை கெஞ்சுவதுமாக அடம் பிடித்தாள்..... பிஞ்சு வயதின ளாகையால் அவள் தனது பிடிவாதத்திலிருந்து இறங்கி வர மறுத்தாள்.

தேவிகா மகளை பெயர் சொல்லி அழைத்தாள்.... சுவர்ணா ஆவலுடன் ஓடி வந்து தாயின் தாடையை வருடியபடியும் பிஞ்சுக் கால்களை நிலத்தில் உதைத் தபடியும்.....

"அம்மா.... அம்மா..... எனக்கு புதுச் சட்டை தாங்கோ..... நான் குளிச்சிட்டு ஓடி வந்திருவன் எல்லே..... என்னம்மா சொல்லுறியள்.....?"

என இரந்தாள்.

'தந்தை இருந்திருந்தால் இந்தப் பிள்ளை இப்படி தவிக்குமா? என எண்ணியபோது தேவிகாவின் விழிகளில் நீர் சுரந்தது....'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன் பிள்ளை.. உன்னைக் கூட்டிக் கொண்டு போய் வெசாக் தோரணம் காட்ட தாத்தா சம்மதிச்சவரே...?”

இப்போ சுவர்ணாவுக்கு அம்மா மேல் நம்பிக்கை பிறந்துவிட்டது. “ஏனம்மா.... நான் பிடிவாதம் பிடிச்சன் எண்டால் தாத்தா மாட்டன் எண்டு சொல்லுவாரே” என கூறியபடியே குளியலறையை நோக்கி ஓடினாள்.

தந்தை இல்லாத பிள்ளை என்பதால் அவளுடைய பிடிவாதங்களெல்லாம் அந்த வீட்டில் எடுபடக் கூடியதாக இருந்தது.

தேவிகா தந்தையை நிமிர்ந்து பார்த்தாள். அவர் மகள் அருகே வந்து தயங்கி நின்றார்.... பின்னர்.....

“நகர மத்தியிலே புத்தர் பெருமான்ர சிலையை அகற்றக் கோரி நகர சபையும் தமிழர் பேரவையும் கோரிக்கை விடுத்திருக்கு..... நீதி மன்றம் அதையே தீர்ப்பாக வழங்கியிருக்கு. ஆனால் துவேஷிகள் இரத்த ஆறு ஓடும் எண்டும், தீக்குளிப்போம் எண்டும், மிரட்டல் செய்வது எந்த வகையிலை நியாயம் எண்டதுதான் விளங்கேல்லை. மதவெறி பிடித்தவர்களும், அரசியல் சந்தர்ப்ப வாதிகளும், கேணியடியில் வைக்க முற்பட்ட புத்தர் சிலையை, பாதுகாப்பு படை உரிய நேரத்திலை தடுத்ததாலை, அது ஒரு பிரச்சனையாய் இல்லாமல் போச்சு..... இந்த நிலையிலை எங்கடை வீட்டை அண்டிய பகுதியிலை ஒரு புதுப் பிரச்சனையாய் இந்தப் புத்தர் சிலை வந்திருக்கு. பொலிசுக்கு மேலதிகமாக பெரும் அளவிலை இராணுவத்தை குவிச்சிருக்கிறதாலையும் ஹர்த்தால் அகற்றப் பட்டிருக்கிறதாலையும் கொஞ்சம் அமைதி நிலவுது. வெசாக் தோரணங் களைக் காட்ட சுவர்ணாவை கூட்டிக் கொண்டு போற அளவிலை நிலைமை உசிதமானதாக இருக்கிறதாய் எனக் கெண்டால் தெரியேல்லை. இனி உன்ரை மகள்.... உ.ன்ரை விருப்பம்..”

எனக் கூறி அலுத்தும் கொண்டார்.

தேவிகாவுக்கு நிலைமைகள் விளங் காமலும் இல்லை. மகளின் பிடிவாத குணத்துக்கு விட்டுக் கொடுத்து போகாமலும் அவளால் இருக்க முடிய வில்லை.

“அப்பா.....சந்தியிலை நிண்டு சில காடையர் எங்கடை சனத்தை வெட்டின தெண்டது உண்மைதான். ஆனால் அந்த ஊர்ச் சனம் முழு அளவிலை அதற்கு ஆதரவு எண்டு சொல்ல முடியாது. நாங்கள் மாத்திரம்தான் பயங்கர வாதம் எண்டும் வன்முறை எண்டும் ஓடி ஓடி அலுத்த தெண்டில்லை. அந்தச் சனமும் ஓடி ஓடி நல்லாய் களைச்சுப் போச்சு. ஆட்களை வெட்டிறவன் வெறி முறிய போய் படுத்திடுவான். ஊர்ச் சனம் இரவிலை குழந்தை குட்டியோடை பயமில்லாமல் படுக்க முடியுமே? சனம் எல்லாம் சேர்ந்து வெட்டினவையின்ரை பேர்ப் பட்டியல் ஒண்டை எழுதி பொலிசுக்கு முறைப்பாடு குடுத்திட்டது. இப்ப அவையள் வெட்டிற வேலையை ஒத்திவைச்சுட்டு தலை மறைவாகி விட்டினம். மற்றது வெசாக் நாளையிலை பிரச்சனை எண்டு வராது. அப்பா சுவர்ணாவை ஒருக்கால் கூட்டிக் கொண்டு போய் வெசாக் சோடனை களைக் காட்டிக் கொண்டு வாங்கோ.....”

மகளின் விழிகளில் பனித்த கண்ணீர் தந்தையைக் கலங்கச் செய்து விட்டது.

சுவர்ணா நன்கு குளித்து விட்டு மேனியெங்கும் நீர்த்துளிகள் சொட்ட தாயிடம் ஓடிவந்தாள். நீரில் அமுக்கி எடுத்த தாமரை மொட்டுப் போல அவளது வெள்ளை மேனி பிரகாசித்தது.....

மகளை அறைக்கு கூட்டிக்கொண்டு சென்று அழகுபடுத்தியபடியே.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளையை தாத்தா கூட்டிக் கொண்டு போவார். அங்கை போய் அதுவேணும், இது வேணும் எண்டு தாத்தாவுக்கு கரைச்சல் கொடுக்கக் கூடாது......"

என எச்சரிக்கை செய்தாள் தேவிகா.

தாத்தா பிரதான கதவை திறந்து விகாரைச் சந்தியை நோட்டம் விட்டார். வழமையாகவென்றால் தாய்மாரும், இளம் பிள்ளைகளும், வெண்ணிற ஆடை அணிந்து நிறைய மலர்களை கைகளில் ஏந்தியபடி விகாரை நோக்கி அன்னப் பட்சிகள் போலவோ, வெண் முகிற் கூட்டங்கள் போலவோ, திரள் திரளாக வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

ஆனால் இம்முறை மக்கள் மத்தியில் ஏற்பட்ட பீதி காரணமாக சந்தி வெறிச்சோடி கிடந்தது. சில இளைஞர்கள் மட்டும் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே காணப்பட்டனர்.

சந்தியை ஒட்டிய அன்பு ஒழுங்கையில் உள்ள அரச விடுதிகளிலும் அவற்றை அண்டிய வீடுகளிலும் இந்துக் குடும்பங்கள் பல குடியிருந்தன. அவர்களுக்கு ஏதாவது நேர்ந்திருக்கக் கூடுமோ என தாத்தாவின் மனம் எண்ணிக் கலங்கியது. இந்துக் கிராமத்துடனான தொடர்பு அவர்களுக்கு துண்டிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இடம் பெயர்ந்திருக்கவும் கூடும்.

'உங்களுக்கு நாங்கள் பாதுகாப்பு தருவோம், நீங்கள் எங்கும் போக வேண்டாம்.' என நித்தம் பழகும் பௌத்த இளைஞர்கள் சிலர் வாக்குறுதி அளிப்பது வழக்கமேயானாலும். அதனை நம்பும் நிலையில் அவர்கள் இருந்திருக்க மாட்டார்கள்.

அனைத்தையும் எண்ணுகையில் தாத்தாவுக்கு மனக்கிலேசம்தான் அதி கரித்தது.....

சுவர்ணா பத்து வயது சிறுமிதான். ஆனால் சிங்கள பெண்கள் போல அட்டகாசமாக இருப்பாள். சென்ற வருடம் பாடசாலையில் சரஸ்வதி தினத்தில் நடாத்தப்பட்ட பஜனை நிகழ்வுக்கு தலைமை தாங்குவதற்காக தைக்கப்பட்ட வெள்ளை நிற நீளப் பாவாடை, சட்டையில் அவள் லக்ஷ்மிகரமாகத் தோற்றமளித்தாள்!

அவளை பார்த்ததும் தாத்தாவின் மனதும் குளிர்ந்தது. இளமையில் தேவிகா அப்படித்தான் இருந்தாள். காதை மூடி தோள் வரை பதிய விட்டு கட்டையாக வெட்டப்பட்ட கேசத்துடன் அவள் பாடசாலை செல்லும் போது 'சிங்களத்தி...சிங்களத்தி.... என மாணவர் கூட்டம் அவளை கேலி செய்வது தாத்தாவுக்கு திடீரென நினைவுக்கு வந்தது.

தாத்தா பேத்தியை அழைத்துக் கொண்டு கிளம்பிய சிறிது நேரத்தில் தேவிகாவின் தங்கை டக்ஸிகா, 'எங்கையக்கா சுவர்ணா' என கேட்டபடி ஓடோடி வந்தாள். சுவர்ணா தாத்தாவுடன் சென்று விட்டதை தெரிவித்து கொண்டதும். சகோதரியை சுகம் விசாரித்தாள்..... பின்னர்.....

"இந்த முறை நகர மத்தியின் உள்ள பொதுச் சந்தையிலை வெசாக் தோரணம் எதுவும் அமைக்கப் படேல் லையக்கா, நடைபாதைக் கடைகளோ, மற்றெந்த நிகழ்ச்சிகளோ, இல்லாமல் நகர் வெறிச்சோடிக் கிடக்கு பாட்டும், பைலாவும் என காணப்படுகின்ற மேடைகள் எதையும் காணமுடியேல்லை... அனுமதி பெறப்படாமலும் அரசியல் நோக்கத்திற்காகவும் அமைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரம் பூதாகர மாக்கப்பட்டு காரணமின்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது தான் மிச்சம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்ஸிக்காவுக்கு மூச்சு இரைத்தது.

"ஏன் தங்கச்சி ஹர்த்தால் பெரிய அளவிலை வெற்றி அளிச்சும் சிலை அகற்றப்படேல்லையே?

'பிளாஸ்ரிக்' கதிரைகள் நான்கு மண்டபத்தில் இடப்பிரச்சனை காரணமாக ஒன்றன் மீது ஒன்று அடுக்கப்பட்டிருந்தது. டக்ஸிகா ஒரே பாய்ச்சலாக அதில் தாவி கால் மேல் கால் போட்டபடியும் வலது கரஆள் காட்டி விரலை கன்னத்தில் ஊன்றியபடியும் சிறிது நேரம். சகோதரியை உற்றுப் பார்த்தபடி இருந்தாள் பின்னர்....

"நாங்கள் செய்யவேண்டிய காரியங்கள் இருக்க, அவகள் செய்ய வேண்டிய காரியங்களை வற்புறுத்திக் கொண்டிருக்கிறதாலை என்ன பிரயோசனம் இருக்குமெண்டு சொல்லு பார்ப்பம்..... புத்தர் சிலையை அவையள் வைச்ச நோக்கம் வேறையெண்டது தெரியும்தானே....? நாங்களும் இந்த விவகாரத்தை அவையளின்ற போக்கிலையே விடுவம், விட்டிட்டு.... புத்தர் சிலை வைத்தது நல்ல காரியம்தான்.. புத்தர் சிலைக்கு அருகாக இருபக்கத்திலையும் இருக்கிற மதுபான கடைகள், மீன் சந்தைகள், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழியிறைச்சி கடைகளையெல்லாம் எடுங்கோ எண்டு ஒரு போடு போடுவம்.... அதோடை மூடியிருக்கிற எங்கடை புதுச் சந்தைக் கட்டடத்தை திறக்கிறது தான் அதற்கு ஒரே வழி எண்டும்.... அது வரைக்கும் நடைமுறையிலை இருக்கிற சந்தையை மூடுங்கோ எண்டும் சொல்லுறதோடை எந்தச் சாமான் வாங்கவும் ஒத்தபடி நாங்கள் எல்லோரும் போகாமலும் விடுவம்...... இதை எங்கடை ஆக்கள் செய்வினமோ?"

தேவிகா இது பற்றி கருத்துச் சொல்லவென வாய் திறக்கவும் சுவர்ணா பதட்டத்துடன் ஓடி வரவும் சரியாக இருந்தது.

டக்ஸிகா கதிரை அடுக்கிலிருந்து குதித்து அவளை அணைத்தபடி கதை கேட்டாள்......

"சித்தி....சித்தி....... நாங்கள் வெசாக் பாக்க போனனாங்கள். குடிகாரன் ஒருத்தன் தாத்தாவைப் பார்த்து... 'நீங்கள் தமிழர்தானே; ஏன் இஞ்சை வந்த னீங்கள்?' எண்டு கேட்டு ஏசிப் போட்டான்."

சுவர்ணா பதற்றம் நிமித்தம் திக்கித் திக்கி கூறினாள்.

"ஏனப்பா.... என்ன நடந்தது?" தேவிகா கலக்கத்துடன் வினவினாள்.

"சாதுவை எனக்கு நல்லாய் தெரியும் பிள்ளை.... பக்கத்து கிளினிக்கிலை மருந்தெடுக்க வந்து பழக்கம்.. நல்லாய் தமிழ் கதைப்பார். அவரைப் போய் சந்திச்சனான். 'புத்தர் சிலை சரியான மதச் சடங்கு பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்படேல்லை.' எண்டு மனவருத்தப்பட்டு கதைச்சவர்..... பௌத்த மதத்தின் உண்மையான பிரதிநிதியான அவருடைய மன வேதனைகளை நானும் கேட்டு கவலைப்பட்டுக் கதைச்சன்..... எங்களுக்கு பக்கத்திலை நிண்ட ஒருத்தன் நான் பிள்ளையோடை அலங்கா ரங்களைச் சுற்றிப் பார்த்து வரேக்கை என்னைப் பேசிப்போட்டான். சுவர்ணா பயந்திட்டாள். எண்டாலும் சில இளைஞர்கள் வந்து என்னைச் சமாதானம் பண்ணி 'அவன் குடிகாரன்; நீங்கள் போங்கோ ஐயா' எண்டு சொல்லி அனுப்பி வைச்சாங்கள்."

தேவிகாவுக்கு கோபத்தில் அதரங்கள் துடித்தன. மதவெறிக்கு விலையாக அவள் ஏற்கனவே தனது கணவனை கொடுத்திருந்தாள்.......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்ஸிக்காவுக்கும் ஆத்திரம் பொறுக்க முடியவில்லை....

“அக்கா... கோவிக்கிறதாலையும், உணர்ச்சி வசப்பிடுகிறதாலையும் எதையும் சாதிக்க முடியாது.... நான் சொன்ன விசயங்களைப் பற்றி யோசி.... தீர்வு தானாய் வரும்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டாள்.

மதிலுக்கு மேலால் தெருவில் பொலிஸ், இராணுவ ட்ரக் வண்டிகள், போவதும் வருவதுமாக இருப்பது தெரிந்தது. வீதி ஒழுங்கை என்றில்லாமல் எங்கும் இராணுவம் நிலை கொண்டிருந்தது. சனத்தினுடைய பாதுகாப்புக்காக என்று கூறி அரசாங்கம் செய்யும் காரியங்களை மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்த்ததுடன் பீதியும் அடைந்தார்கள்!

நாட்கள் செல்லச் செல்ல ஹர்த்தால், கடையடைப்பு, என்பன வெகுஜன போராட்டமாகவும் வன்முறையாகவும் மாறக் கூடும் என்று மக்கள் அச்சம் கொண்டனர். நடுவு நிலை பேணும் அரசியல் தலைவர்கள் கூறுவனவோ, நீதிமன்ற தீர்ப்போ பரிகாரம் இல்லையெண்டால் அடுத்து இந்த தேசம் எதிர்நோக்குவது என்ன?

தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் ஒருவர் வடிவாகச் சொன்னார்.... வெய்யில் காலத்திலை கண்ட கண்ட இடமெல்லாம் சர்பத் கடை தோன்றுவது போல இருக்கு இந்த புத்தர் சிலை நிறுவும் விவகாரம்...!

விகாரையிலிருந்து ஒலி பெருக்கியில் ஒலி பரப்பப்படும் எதுவும் தேவிகா வீட்டிற்கு நன்கு கேட்கும்....

வெசாக் தினம் ஆரம்பமாகி ஐந்தாம் நாள் சாது ஒலி பெருக்கி மூலம் ஒரு அறிவிப்பை விடுத்தார். அதில் அவ்வூர் பௌத்த மத வாசிகளை பத்து நிமிடத்தில் விகாரைக்கு வருமாறும் முக்கியமானதொரு விடயம் பற்றி கலந்தாலோசிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.....

அது போதும் தேவிகாவை குழப்பி விடுவதற்கும் பயங் கொள்ள வைப்பதற்கும்......

விகாரைச் சந்தியில் நின்று யாராவது உரத்துக் கதைத்தால்.. இந்துக்களுக்கு எதிராக யாரோ கோஷமிடுவதாக எண்ணிக் கலங்குவாள்!

விகாரை சந்தியிலிருந்து யாராவது ஓடிவந்தால்... இந்துக்களை வாளால் வெட்ட துரத்தி வருவதாக எண்ணி நடுங்குவாள்....!

சாது இப்போ அனைத்து பௌத்தர்களையும் ஒலி பெருக்கி வாயிலாக அழைத்தமை அவளது மனத்தைக் குழப்பிவிட்டது. நகரில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டதா? கணவனை இழந்தது போல, நான் பாசம் மிகக் கொண்ட எனது மகளையும் இழந்துவிடுவேனோ என்றெல்லாம் அவளது பேதை நெஞ்சம் எண்ணிக் கலங்கியது.

பொழுதுபடும் சமயம், சாதுவுடனான கலந்துரையாடல் முற்றுப்பெற்றதைத் தொடர்ந்து விகாரையடிச் சந்தியில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக வாக்குவாதப்பட்டுக் கொண்டு நின்றார்கள். கூச்சலும் அட்டகாசமும் அவர்களது மன உணர்வுகளைப் பிரதி பலித்தன. பெண்களின் குரலும் உயர்ந்து ஒலித்தன... இந்த நகரின் இந்துக்களை யெல்லாம் துவம்சம் செய்து விடத் தயாராகி விட்டவர்கள் போலவும் புத்தர் சிலையை தொடுபவர்களை அழித்துவிட ஆவேசம் கொண்டவர்கள் போலவும் அவர்களது உக்கிரம் காணப்பட்டது!

பொலிசாரும், இராணுவத்தினரும் அவர்களை சுற்றி நின்றார்கள். மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இராணுவத்தினர் வாகனங்களில் வந்து இறங்கியபடி இருந்தனர். உயர் பொலிஸ் அதிகாரிகள் 'வயர்லெஸ்' கருவிகள் மூலமாக மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

என்ன தான் நடக்கின்றதென்பதை ஊகிக்க முடியவில்லை....

தேவிகா பிரதான கதவு மறைவில் நின்று நிலைமைகளை அவதானித்தபடி இருந்தாள்.

அப்பாவையும், மகளையும் அழைத்துக் கொண்டு வேறிடம் சென்று விடலாமா என அவளது மனம் எண்ணித் தவித்தது.

நேரம் கடந்து கொண்டிருந்தது. சிறிது சிறிதாக அமைதி திரும்புவது போல இருந்தது.

தந்தைக்கும், மகளுக்கும் உணவு பரிமாரி தானும் ஆகாரத்தை எடுத்தபின் வீதிக்கு வந்து பார்த்தாள்.... நேரம் இரவு 10.00 மணியை தாண்டிவிட்டது. இளைஞர் கூட்டம் கலைந்துவிட்டிருந்தது. பொலிசாரும் தமது இரவு ஆகாரத்தி ற்காகக் கவனத்தை திசை திருப்பி யிருந்தனர்......

திடீரென புத்தர் சிலை அமைந்திருந்த இடத்தை சூழ இருந்த மின் குமிழ்கள் ஒளி உமிழ்வதை நிறுத்தின.....

இருள் கவிந்தது.....

பின் நிலவின் கதிரொலியில் இரு உருவங்கள் அந்த சிறிய அளவினதான புத்தர் சிலையை அகற்றி விகாரையை நோக்கி எடுத்துச் செல்வது நிழல் போல தெரிகின்றது.....

அந்த உயரமான தடித்த உருவம் நிச்சயமாக சாதுவினுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பு தேவிகாவின் உள்ளத்தில் நம்பிக்கையாக சுடர் விடுகின்றது.....!

❑

# பிடித்ததும் பிடிக்காததும்

உதடு குவித்து
அவ்வப்போது நீ சிந்தும்
அங்குலப் புன்னகை
பிடிக்கும் எனக்கு
மாலைச் சூரியனாய்
மனந்தின்னும் உன் கண்களும்
உயிர் ஊடுருவும் பார்வையும் கூட
பிடிக்கும் எனக்கு...
ஒன்றே ஒன்றைத் தவிர
சிரிக்கும் போது
சிலிர்க்கும் மீசை
கொதிக்கும் போது
துடிக்கும் புருவம்
பரந்திருக்கும் உன்மார்பில்
அடர்ந்திருக்கும் ரோமங்கள்
துவளாத கால்களின்
நிமிர்ந்த நன்னடை
நிமிர்ந்த ஞானச்செருக்கு
எல்லாமே பிடிக்கும் எனக்கு...
ஒன்றே ஒன்றைத் தவிர ...

கண்களால் காதல் சொல்லி
காத்திருக்கும் என்னைக்
கவனிக்காமலேயே இருக்கிறாயே
அதுமட்டும்தான்
பிடிக்கவில்லை எனக்கு.

**– தே. சங்கீதா**
கொழும்புப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களின் கமரா திருப்பப்பட வேண்டிய பக்கங்கள்

**மாவை வரோதயன்**

இன்றைய நுகர்வுக் கலாசார யுகம் நமக்கெல்லாம் வழங்கியுள்ள சாபம் சமூக அக்கறை இன்மை ஆகும். போட்டி அடிப்படையிலான கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரத் தேடல் என்பவற்றோடு ஒன்றன்பின் ஒன்றாக நீட்டிச் செல்லப்படும் தேவைகளின் இலக்குகள் மனிதரை முற்று முழுதாகப் போட்டி மனப்பான்மையின் உருவங்களாக அச்சு வார்த்துள்ளன. இதனால் தனி நபர் ஈடேற்ற சிந்தனை மட்டுமே ஒவ்வொரு மனிதனதும் குறிக்கோளாகத் திணிக்கப்படுகின்றது. அதாவது சக மனிதர் பற்றிய அன்பு, இரக்கம், அனுதாபம், மதிப்பு, மரியாதை, ஆதரவு என்று எவையுமே பெறுமதியில்லாப் பொருளாகப் போயின.

இந்த மலினப் போக்கைக் கூர்மைப்படுத்தும் வகையிலேயே தொலைக்காட்சி நாடகங்கள், மெகா தொடர்கள் தயாரிக்கப்பட்டு எமது பள்ளியறைகள் வரை அனுப்பப்படுகின்றன. அவற்றை ஊடு கடத்தும் நமது தொலைக்காட்சிகளுக்கும் அத்தகைய சமூகப் பொறுப்பு அருகி வருவதும் மனம் வருந்தத் தக்கதே.

இந்த அடிப்படையில் குறைந்த விகிதமேனும் திரும்பிப் பார்க்கின்ற ஒரு நிகழ்ச்சிதான் ‘வட்டறவும’ ஆகும்.

இதை தமிழில் ‘சுற்று வட்டம்’ ஆங்கிலத்தில் ‘Round about’ என்று வைத்துக் கொள்ளலாம். பிரதி ஞாயிறுதோறும் இரவு 9.30ற்கு ரூபவாஹினியில் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகின்றது.

இலங்கையைத் தளமாகக் கொண்டு சமூகவியல், பண்பாடு, கலாசாரம், வரலாறு, புவியியல், விஞ்ஞான அறிவியல், உற்பத்தி, கைத்தொழில், விவசாயம் என்று பல்வேறு துறைகளையும் சார்ந்து ஓரளவு நகைச்சுவை கலந்து இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்படுகின்றது. அத்துடன் அது அந்த வார முக்கிய நிகழ்வை மையப்படுத்தி அல்லது சம்பவங்களைச் சார்ந்து புலக் காட்சிகளோடு விவரணப்படுத்துவது விசேட அம்சமாகும்.

அது சிங்கள மொழி மூலம் நடத்தப்படும் நிகழ்ச்சி என்பதால் சிங்கள பௌத்தர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த சின்னங்கள் பற்றிய விவரணங்களில் அதிக அக்கறை காண்பிப்பதையும் கவனிக்க முடிகின்றது.

ஆனால் அப்படியான ஒரு சமூகவியல் சார் அறிவு மேம்பாட்டிற்கான தேடல் நிகழ்ச்சி நமது தமிழ் ஊடகங்களில் இல்லை என்பது கவலை தரும் விடயமாகவே உள்ளது. எனவே கமராவை எடுத்துக் கொண்டு சென்று ‘உங்கள் விருப்பம்’ என்ன என்று கேட்பதை விட்டு அந்த மனிதனின் சமூக இருப்பை வெளிக்காட்டினால் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிதி

## போர்க்காலச் சிங்களச் சிறுகதை
### (இராணுவச் சிப்பாய் ஒருவனின் சொந்த அனுபவம்)

டக் டக்... டக் டக்... அலுவலகத்தின் தட்டச்சு இயந்திரத்தில் இருந்து வெளிவரும் சப்தம் இப்பொழுது எனக்கு வெறுப்பினைத் தருகிறது. எனக்கு தலையே வெடித்துவிடுமாற்போன்று தலைவலிக்கிறது. நான் தலையை ஒரு கரத்தினால் பிடித்தபடியே மேசையில் சாய்ந்து கொண்டேன்.

'டிங்' என்று எழுந்த மணிச் சத்தத்தினால் எனது தலையை நிமிர்த்திக் கொண்டேன். அது எனது அதிகாரி தன்னிடம் வருமாறு அழைக்கும் அடையாளம். நான் உடனடியாக அங்கே செல்வதற்கு ஆயத்தமானேன். அதற்கிடையிலேயே இரண்டு மூன்று தடவைகள் மணி ஒலித்தது. நான் ஓடிச்சென்று மரியாதையை வெளிப்படுத்தி அவதானமாக நின்றேன்.

"என்ன ஐசே மணி அடித்தும் வருவதற்குத் தாமதம்?" எனது அதிகாரி வினவினார். அவர் ஒரு கப்ரன். **"எங்கே அந்தக் கடிதம் சரிசெய்துவிட்டீரா"**

"சேர், என்ன கடிதம்?" அலுவலகத்தில் நாளொன்றுக்கு மிகப் பெரிய அளவில் கடிதங்களை தட்டெழுத்துச் செய்வதனால் நான் கேட்டேன்.

"ஐசே, அந்த கிரிக்கெட் போட்டி பற்றிய கடிதம்?" அவர் மேலும் கோபத்தோடு கேட்டார். அவர் கோபமில்லாமல் இருந்த நாளே கிடையாது. கடிதத்தில் ஒரு புள்ளி குறைந்தாற் கூட எழுதுவினைஞரிடம் எரிந்து விழுவார்.

"உமக்கு நான் ஐந்து நிமிடம் தருகிறேன். கடிதத்தை தயாரித்து எனது மேசையின் மேல் வைக்க வேண்டும்" அவர் கட்டளையிடுகிறார். நான் அமைதியாக நின்றேன்.



**றுவன் சமிந்த அத்துகோறள**

மொழியாக்கம் -

**ஆறுமுகம் தங்கவேலாயுதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய தட்டச்சு இயந்திரத்தில் குற்றம் குறைகள் அதிகம். எனக்குத் தெரிந்த காலத்திலிருந்து அதனைத் திருத்தம் செய்யவில்லை. எழுத்து விசைகள் மேலே போனால் கீழே வராது. வாகனத்தின் லிவரைப் போன்று கையினால் இழுத்து கீழே கொண்டுவர வேண்டும். காபன் பட்டியை கையால் சுற்றவேண்டும். எழுத்துக்களிடையே இடைவெளி விடும்போது தவளையைப் போன்று அடுத்த பக்கம் பாயும். அதிகாரிக்கு அதைப்பற்றி விளக்கம் இல்லை. கடிதத்தை தயாரித்து அவரது மேசையின்மேல் வைக்க வேண்டும். அது அவரது கொள்கை.

வாழ்க்கையில் புதிய பிடிப்பு இல்லை. காலையிலேயே தவளையைப் போன்று அலுவலகத்தினுள்ளே பாய்ந்து கொள் ளும் எனக்கு பேனை, பேப்பர், தட்டச்சு இயந்திரம், சல்யூட் அடித்துவிட்டு அவதானமாக நிற்றல் இவற்றைத் தவிர வேறு வாழ்க்கை இல்லை. மற்றைய எழுதுவினைஞர்களது வாழ்க்கையும் இதே போன்றுதான்.

நான் கடந்த காலத்திற்குச் சென்றேன். பள்ளிக்கூடம் செல்லும் நாட்களில் தம்பபதத்தின் பாளிச்செய்யுள் பாடமின்றி ஆசிரிய பிக்கு அடித்த விதம் ஆங்கிலம் பாடமாக்காதமையால் வெய் யிலில் நின்று கொண்டு பாடம் செய்தமை, அரசியல் விஞ்ஞான பாடத்தின் போது காள்மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின் பற்றி கேட்கும் போது ஆசிரியை கருணாவதி 'சேகுவேராகாரனாக வேண்டாம்' என்று கூறிய விதம் இவை அனைத்தும் எனக்கு ஞாபகம்.

பல்கலைக்கழகம் செல்வதற்கு புள்ளிகள் சிறிதளவு குறைந்தபோது, பொருளாதாரம் பரிகாசமாகப் போன போது, ஈழம்வாதிகள் குண்டுகளை வெடிக்க வைத்தபோது அனைத்தையுமே மறந்துவிட்டு யுத்தத்தைத் தேர்ந் தெடுப்பது நீதியானது என நினைத்தேன். ஆனால் நீதி அமைதி பெறமுடியா தென்பதை மாக்சிம்கோர்கியின் 'அம்மா'விடமிருந்து தெரிந்து கொண்டேன்.

நாங்கள் யுத்தம் செய்தோம். ஆனால் கிடைத்தது என்ன? சிறுதொகை யினருக்கு யுத்தத்தில் வென்றாலும் வெற்றி. தோற்றாலும் வெற்றி. நான் தினமும் தோற்றுப் போகிறேன். கற்ற கல்விக்கு தொழில் கிடைக்காவிட்டாலும் உழைக்கும் பணத்திற்கு இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தினேன். ஏச்சுக்கள் கேட்டேன்.

'டிங்' மீண்டும் மணி நாதம் எழுப்பியது. எனது அமைதி உடைந்து விழுந்தது.

"அபேசிங்ஹ கடிதங்கள் அனைத் தையும் தயார்பண்ணி மேசைக்கு அனுப்பு"

"சேர் நான் விடுமுறையிலை போக இருக்கிறன்."

"சரி சரி..... விடுமுறையிலை போவதற்கு முன்பு வேலையைக் கொஞ்சம் கவனி" சொல்லிவிட்டு அந்த அதிகாரி வீட்டிற்குப் புறப்பட்டார்.

நானும் அவரும் ஒரு பக்கத்தில் பார்த்தால் சமமானவர்கள். மறுபுறத்தில் பார்த்தால் சமமற்ற தன்மைகள் அதிகம். நான் அவருடைய அளவுக்கு கல்வி கற்றிருந்தாலும் அவர் ஒரு அதிகாரி. நான் ஒரு சாதாரண படைவீரன். அவர் எனக்கு ஆணையிடுவார். நான் அவரது ஆணையை ஏற்பேன். மேலும் பல வேறுபாடுகள் எங்கள் இருவரிடையேயும் உள்ளன.

எனக்கு வீடு ஞாபகத்திற்கு வந்தது. மனைவியையும் மகனையும் பார்க்காமல் ஒரு மாதம் கழிந்துவிட்டது. எனக்கு கடந்த விடுமுறைக் காலம் நினைவுக்கு வந்தது. ஒரு மாதம் முகாமில் இருந்துவிட்டு போனபோது மனைவிக்கு என்னில் பல மாற்றங்கள் தெரிந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்பா நீங்கள் மெலிந்துவிட்டீர்கள். கறுத்துப் போயிட்டீர்கள்...... உங்களுக்குக் கிடைக்கும் சாப்பாடு நல்லா இல்லையா? கண்கள் உள்ளே போய்...... நீங்கள் நித்திரை விழிக்கின்றீர்களா?” அவள் கேட்டாள். நான் சிரித்துக் கொண்டே மௌனமானேன்.

எனது சிறிய மகனும் சென்ற மாதத்தைவிட மிகவும் பெரியவன் போலத் தோன்றினான். மற்றைய நாட்களைவிட செல்லம் அதிகம். குழப்படிகளும் அதேபோன்று. ஆனால் அவனுக்கு கிளர்ச்சியோ தந்தையின் அன்போ கிடைப்பதில்லை.

பாட்டனுக்கு ‘தாத்தி’ என்று சொற்கள் தெரிகிறது. நான் மகனுக்கு ‘மாமா’ ஆகிவிட்டிருந்தேன். எனது உள்ளம் உடைந்து நொருங்கியது. யுத்தத்தில் இறந்து போயிருந்தால் அரச கௌரவம் கிடைத்திருக்கும். ஆனால் பீத்திற பதவிக்கு ‘மாமா’ என்கிற கௌரவப் பெயரை ஒரு தந்தையால் தாங்கிக் கொள்ள முடியுமா?

இனிமேல் எந்தளவுக்கு மாற்றங்கள் வருமென்று சொல்லமுடியுமா? இறந்து போன மனிதனுக்கு நான்கு முழம் சொந்தம். ஆனால் எனக்கு நான்கு முழம் இல்லாமற் போகக்கூடும். நான் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டேன், இரவுக் காவல் கடமைக்குச் செல்வதன் பொருட்டு. நாளை விடிகின்ற போது மீண்டும் அலுவலகத்திற்குள் நுழைவதற்கு நேரும்.

துப்பாக்கிக்கு, தட்டெழுத்து இயந்திரத்திற்கு இருதயம் இல்லாத காரணத்தினால் இவை எல்லாம் தெரிவதில்லை.

❑

---

# பிறகு ஏன் என்னை மட்டும்...?

*பிறகு ஏன்*
*என்னை மட்டும்...?*

*மடியில் வைக்கிறாய்*
*மயிர் கோதுகிறாய்*
*செல்லமாய் பேசுகிறாய்*
*ஊசி போட்டு பின்*
*புத்தகத்தில் பதிகிறாய்*
*அன்று ஜீரணக் கோளாறில்*
*எடுத்த வாந்திக்காய்*
*பதறி ஓடினாய் மருத்துவரிடம்*
*உன் செல்ல நாய்க்காய்*
*பிறகு ஏன்*
*என்னை மட்டும்...*

*நீ தவறாமல்*
*அழுது இரசிக்கும்*
*தொடர் கதையில் – அன்று*
*இறந்து பிறந்த குழந்தைக்காய்*
*கண்ணீர் வடித்தாய்*
*பிறகு ஏன்*
*என்னை மட்டும்...*

*சாக்லெட் கொடுத்தாய்*
*விளையாட்டுப் பொருட்கள் ,*
*புத்தகங்கள் இன்னும் பலவும்...*
*உன் கையால் ஒவ்வொருவருக்கும்*
*உணவு பகிர்ந்தாய்*
*ஒவ்வொரு அனாதைச்*
*சிறுவருடனும்*
*அன்பு கூர்ந்தாய்*
*உணர்வு பகிர்ந்தாய்*
*இப்படித் தானே – நீ*
*உன் பிறந்த நாளைக்*
*கொண்டாடினாய்*
*பிறகு ஏன்?*
*பிறகு ஏன் – நீ*
*என்னை மட்டும்*

*கருவிலேயே கலைத்தாய்?*

**இரா. நெல்சன் மோகன்ராஜ்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

# இருப்பவையும் இருக்கவேண்டியவையும்

## IV

### ஆரம்பப் பாடசாலைகளில் காணப்படும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள்

— தேவானந்த்

பார்வையாளர்களுக்கு முன்பாக அளிக்கை செய்யப்படுவதற்காக கொண்டு செல்லப்படும் நாடகங்கள் நன்கு ஒத்திகை பார்க்கப்பட்டு நேர்த்தியாக அழகாக இருக்க வேண்டும். அளிக்கையில் முழுமை இருக்கின்ற போது அழகு பிறக்கும். நாடக எழுத்துரு, நடிப்பு, அசைவியக்கங்கள், மேடைக் காண்பியங்கள், சொற்கள் வெளிக் கொடுக்கப்படும் முறைமை, இசைக் கோலங்கள், பாடல்கள், ஆடைகள், ஒப்பனைகள், நடனக் கோலங்கள் அனைத்துக்கும் இடையில் காணப் படுகின்ற 'ஒட்டுறவை' நாடக முழுமை எனக் கொள்ளலாம். மேற்சொன்ன மூலகங்களுக்கிடையில் ஒட்டுறவை ஏற்படுத்துவது மிகக்கடினமானதும் நுட்பமானதுமான பணி. இதனை செம்மை யாகச் செய்கின்றபோது படைப்பு வெற்றி பெறும்.

பாடசாலைகளில் தயாரிக்கப் படுகின்ற சிறுவர் நாடகங்களில் எழுத்துருவையும் பாத்திரத்தையும் சிறார்கள் புரிந்து கொண்டு வெளிப்படுத்துவது போதாமல் உள்ளது. சிறுவர்கள் தாம் ஏன் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு சொல்லை, வசனத்தை சொல்கிறோம். என்பதற்கான பேச்சுப் போட்டியில் இரண்டுகைகளையும் பக்கங்களில் உடம்போடு இறுக்கமாக சேர்த்துக் கொண்டு பேசுவது போலவே நாடகத் திலும் பேசுவார்கள். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பார்வையாளர்களை நேர் எதிரே பார்த்து சொல்வார்கள். பக்கத்தில் நிற்பவரிடம் சொல்ல வேண்டிய விடயங்கள் பார்வையாளர்களைப் பார்த்து சொல்லப்படும். அதிகமான சிறுவர்கள் மேடையில் பேச ஆரம்பிக்கின்றபோது இறுகிவிடுவார்கள். ஒருவகையாக இழுத்து இராகமாகப் பேசும் முறைமை காணப்படும். நிலைக்குத்தாக நின்று பேசுவார்கள். அவர்கள் பேசுகின்ற சொல்லுக்கும் நிற்கின்ற நிலைக்கும் தொடர்பு இருக்காது. மேடையில் பாடி ஆடுகின்ற போதும், விளையாடுகின்ற போதும் இந்த இறுக்கம் இருப்பதில்லை. ஆகவே, பிள்ளைகளின் விருப்பமான செயல்களூடாக வார்த்தைகளை வெளிப் படுத்த முயற்சிக்கலாம். ஒவ்வொரு பாத்திரங்களுக்கும் இடையில் உள்ள உறவு, ஊடாட்டம் இரண்டும் தெளிவாக பல தடவை மாணவர்களுக்குப் புரிய வைக்கப்பட வேண்டும். மேடையில் வெளியை கையாள்வதற்கான பயிற்சி நன்கு வழங்கப்படுகின்றபோது அசைவி யக்கங்கள் அழகாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். மேடையில் தேவையற்று இரு அந்தங்களுக்கும் நடந்து நடந்து கதைக்கின்ற வழமையையும், வசனம் பேசுகின்றபோது மட்டும் பார்வை யாளர்களை நோக்கி வருதல் பின் பின்பக்கமாக கால்வைத்து பின்னோக்கி செல்லுதல் போன்ற அசைவியக் கத்தையும், சிறுவர் நாடகங்களிலும் காணமுடிகிறது. மேடையில் தேவை யின்றி அசைவது மேடை அழகை குலைத்துவிடும் இதனை சிறார்களுக்கு உணர்த்த வேண்டும்.

தற்போது, மேடையேற்றப்படுகின்ற பல சிறுவர் நாடகங்களில் மேடையை விட்டு இறங்கி பார்வையாளர்களிடம் வருதல். பார்வையாளர்களில் ஒருவராக நடிகர்கள் இருந்து நாடகம் நடந்து கொண்டிருக்கும் போது மேடையை நோக்கி பொறுங்கோ பொறுங்கோ என்று சொல்லிச் செல்லுதல் போன்ற உத்திகள் வலிந்து சேர்க்கப்படுகின்றன. இதற்கான தேவை என்ன என்ற கேள்வியை நாடகம் பயிற்றுபவர்கள் கேட்டுக் கொள்ள வேண்டும். பார்வையாளர்களை பங்கு கொள்ளச் செல்வது தான் இதன் நோக்க மாக இருந்தால் அது சரியாகச் செய்யப்பட வேண்டும். நடிகர்கள் மேடையில் இருந்து கீழ் இறங்கி மேலேறுவதால் மட்டும் பார்வையாளர்கள் பங்கு கொள்ள மாட்டார்கள். மேடையில் இருந்து நடிகரை இறக்குவதற்கு முன் நிறைய யோசிக்க வேண்டும். அது நடிகர்களுக்கும் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

ஆரம்பப் பாடசாலைகளில் மேடை யேற்றப்படுகின்ற சிறுவர் நாடகங்கள் அனைத்தும் பாடலுடன் அல்லது ஒரு விளையாட்டுடன் ஆரம்பிக்கின்றன. பின் 'சரி இனிக்காணும் நாடகம் நடிப்பம்' என்று தொடர்கின்றன. முடிவில் புத்திமதி சொல்வதான ஒரு பாடலுக்கு கைதட்டி அல்லது கைகோர்த்து ஆடுவதுடன் நாடகம் முடிவடைகிறது. இந்த (சீரியோரைப்) ஒரே மாதிரியான தன்மை ஆக்கத்திறன் விருத்திக்கு தடை யானது. இதேபோல், ஓரிரு ஆடல் முறைமைகளே அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. சிறுவர் நாடகப் பாடல் மெட்டுக்களும் அவ்வாறே. இதனால், சிறுவர் நாடக அளிக்கைகள் உயிரற்ற இயந்திரத் தனமான அசைவியக்கங்களைக் கொடுக்கின்றன. சிறுவர்களுடன் இணைந்து புத்தாக்கமான அசைவியக் கங்களை செய்து பார்க்கின்ற போது புதிது புதிதாக அவர்கள் பல அசைவுக் கோலங் களை, நடனங்களை கொடுப்பார்கள். அவற்றில் இருந்து தேர்ந்தெடுத்து சிறிய மாற்றங்களைச் செய்து பயன்படுத்து கின்றபோது பலவகையான நடனங்களை அசைவியக்கங்களை நாடகத்தில் கொடுக்க முடியும். இதே போன்று புத்தாக்க இசைப் பயிற்சிகளை இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சிறார்களுடன் சேர்ந்து செல்கின்ற போது பல்வேறு இசை மெட்டுக்கள் கிடைக்கும். அவற்றை செழுமைப்படுத்தி பயன்படுத்தினால் வளமான அரங்காற்றுகை கிடைக்கும். இவ்வாறு சிறார்களுடன் சேர்ந்து கண்டு பிடித்து பயன்படுத்தப்படுகின்ற அசைவி யக்கங்கள், ஆடல்கள், இயந்திரத் தனமான அளிக்கையைத் தவிர்த்து உயிர் துடிப்புள்ள அளிக்கைகளைக் கொடுக்கும்.

சிறுவர் நாடக அளிக்கையில் கட்புலப் பெறுமானத்தைக் கொடுப்பது மேடைக் காண்பியங்களும் காண்பியங் களுடன் நடிகர்கள் ஏற்படுத்திக் கொள் கின்ற ஊடாட்டமுமாகும். மேடைக் காண்பியங்கள் சிறார்கள் விரும்புவதான பலவர்ண நிறங்களைக் கொண்டவையாக அழகானவையாக இருக்க வேண்டும். மேடையில் ஒன்றைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு வேறொரு பொருளைப் பயன்படுத்துவது சிறந்தது. இயற்கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதை உள்ளவாறே மேடையில் படைக்கத் தேவையில்லை. பிள்ளைக்கு ஒரு சடப் பொருள் பலவாறான சடப்பொருட்களாகவும் உயிருள்ள பல பொருட்களாகவும் தெரியும். உதாரணமாக மேடையில் மிருகப் பாத்திரங்களைப் படைக்கும்போது அவற்றின் பண்புகளில் பிரதானமானவை துலங்கக் கூடியதாக படைக்கமுடியும். அது அவை கத்தும் சத்தமாக, அதனது அசைவாக, வாலின் அமைப்பாக அமையலாம். இதே போல் காட்டு மரங்களை மேடைக்குக் கொண்டுவரும் போது மரங்களின் கூடாரம், கொப்புகள், இலைகள், காய்களை புலப்படுத்துவதற்கு உண்மையான மரக்கொப்புகளைவிட வேறு பொருட்களைப் பயன்படுத்தலாம். அவை மேடைக்கு அழகாகவும் நாம் உணர்ந்து கொள்ளும் மரத்தின் பண்பையும் கொடுத்து நிற்கும். 2004ம் ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் யாழ்மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் மேடை யேற்றப்பட்ட 'பஞ்சவர்ண நரியார்' நாடகத்தில் மரங்களுக்கு குடைகளைப் பயன்படுத்தி யிருந்தார்கள். பல கிளைகள் உள்ள மரத்தின் கூடார அமைப்பு அதிலிருந்து வெளிப்பட்டது. இதே போல் இலை களுக்கு பலூன்களை வடமராட்சி வடஇந்து மகளிர் பாடசாலை பயன் படுத்தியது. இதனையே இயற்கையை படைப்பாளியின் மனப்பதிவோடு மீள் படைத்தல் என்பார்கள். இவ்வாறு படைக்கும் படைப்பு கலைப்பெறு மானத்தைப் பெற்றுக் கொள்கின்றது.

பல ஆரம்பப் பாடசாலைகள் மேடைக் காண்பியத்திற்கு மரக்கொப்புகளை கதிரைகளில் கட்டி மேடையில் வைத்து விடுகிறார்கள். சில வேளைகளில் பச்சை உடை அணிந்த சிறுவர்கள் கொப்புகளை கையில் தாங்கியபடி மேடையில் நிற்பார்கள். மேடையை அலங்கரிப்பதாக நினைத்து இதனைச் செய்கிறார்கள். இந்த மரக் கொப்புக்களோடு பெரும்பாலும் எந்தத் தொடர்புகளும் இல்லாமலே சிறுவர்கள் நடிக்கிறார்கள். இதனால் மரக் கொப்புகள் மேடையில் தேவையற்ற பொருட்களாகவே கிடக்கின்றன. இதனால் மரக்கொப்புகளை, கொடிகளை மேடைக்கு கொண்டுவரும் போது ஏன் கொண்டு செல்கிறோம்? அதனால் விளையும் பயன் என்ன? அவற்றிற்கும் பாத்திரங்களுக்கும் என்ன தொடர்பு? என்பவற்றை ஆசிரியர்கள் கருத்தில் எடுக்க வேண்டும். மேடையில் பொருட்கள் எதுவும் இல்லாது பிள்ளைகளே காண்பியமாவது தனிஅழகு. எளிமையான, அழகான காண்பியங்கள் சிறுவர்களைக் கவரும். ஆரம்பப் பாடசாலைகளில் தயாரிக்கப்படுகின்ற வேட உடைகளை நோக்கும் போது அவை, ஒரே வகைமாதிரி யானவையாக காணப்படுவதை அவதானிக்கலாம். தலைத் தொப்பியுடன் கூடிய நீளக்கை நீளக்காற்சட்டை உடைய முழுநீள உடை பயன்படுத்தப்படும். பாவிக்கப்படுகின்ற நிறங்கள் அனேகமாக கறுப்பு, சாம்பல், பிறவுண் நிறங்களாக இருக்கும். கரடி, யானை, மாடு, ஆடு, குரங்கு போன்ற மிருகங்களுக்குக் கறுப்பு நிறத்தைப் பயன்படுத்துவார்கள். அதனால் மேடை கறுப்பு நிறமாகவே இருக்கும். இதனோடு, முகத்திற்கு கறுப்பு மைபூசி கண்களைச் சுற்றி சிவப்பு நிறம் தீட்டியி ருப்பார்கள். இதனால் பிள்ளைகளின் முக அசைவு நிலையைக் கண்டுகொள்ள முடிவதில்லை. சிறுவர்கள் மிருகங்களை வெவ்வேறு நிறங்களைக் கொண்டு அடையாளம் காண்பார்கள். பல்வேறு நிறங்கள் மிருகப்பாத்திரங்களுக்கான வேட உடைக்காவும் ஒப்பனைக்காகவும் பயன்படுத்தப்படலாம். வேட உடை ஒவ்வொரு பாத்திரங்களுக்கும் ஏற்றதாக வெவ்வேறாக வடிவமைக்கப்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஒவ்வொரு மிருகப் பாத்திரங்களினதும் குணவியல்புகள் அசைவுகளுக்கேற்ப ஆடைகள் வடிவமைக்கப்படலாம். இந்த ஆடைகள் எமது பண்பாட்டு அம்சங்க ளோடு இருப்பது சிறந்தது. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் பஞ்சவர்ண நரியார் நாடகத்தில் பண்பாட்டு அம்சங்களோடு கூடிய ஆடை வடிவமைப்பைக் காண முடியும். எமது சிறுவர் நாடகங்களில் மேற்கு நாடுகளில் புத்தகங்களில் காணப்படும் ஆடைப்பாரம்பரியமே காணப்படுகின்றது. இந்த ஆடைப்பாரம் பரியத்தை எமக்கான ஆடைப்பாரம் பரியமாக மாற்றுவதற்குரிய எண்ணத்தை நாம் விருத்தியாக்க வேண்டும். சிறுவர் அரங்கிற்கான ஆடைகள் பற்றி ஆய்வு செய்வதற்கும் புதியவற்றைக் கண்டு கொள்வதற்கும் தனியாக வேலை செய்பவர்கள் உருவாகின்றபோது இந்த 'தறுக்கணிப்புக்கள்' இல்லாது போகும்.

சில ஆண்டுகளுக்கு முன் மிருகப் பாத்திரங்களின் வேட முகங்களை தடித்த மட்டைகள் கொண்டு செய்து பிள்ளை களின் முகத்தில் அணிந்து அவர்களின் முக வெளிப்பாட்டினை மறைத்தார்கள். தற்போது, அவை ஓரளவு குறைந்துள்ளன. தற்போது சிறுவர்களின் முகங்கள் வெளித் தெரியவேண்டுமென்பதில் அதிக கவனம் செலுத்தப் படுகிறது. இருப்பினும் கரிய முகப் பூச்சுக்கள் சிறுவர்களின் முக அசைவுகளை வெளிக்காட்டாது அமுக்கி விடுகின்றன. எளிமையான முக ஒப்பனைகள் சிறுவர்களின் வெளிப் பாட்டிற்குத் தடையாகமையாது.

சிறுவர் நாடகங்கள் மேடையேற்றப் படும் இடங்கள் பற்றி நாம் நிறையச் சிந்திக்கவேண்டும். நீண்ட ஒடுக்கமான மண்டபங்களில் நாடகம் பார்க்கின்ற சிறுவர்களை நெருக்கமாக இருத்தி நாடகங்களை பாடசாலைகளில் மேடை யேற்றுவார்கள். போட்டிகளில் மேடை யேற்றப்படும் மேடைகள் சரியான தெரிவுகளாக இருப்பதில்லை. வீட்டு வீதியான நல்ல மேடைகளில் நாடகங் களை மேடையேற்ற வேண்டும். இதற்கேற்றதான பாடசாலை மண்டபங்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். போட்டிகளை ஒழுங்கு செய்து நடத்துகின்ற அதிகாரிகள் சிறுவர் நாடகம் ஒன்றை நியம முறைப்படி மேடையேற்றுவதற்கு ஏற்றதான மேடை வெளியை ஆற்றுகைக் குழுவிற்கு வழங்க வேண்டும். வெள்ளை மஞ்சள் வர்ணத்துடன் காணப்படும் மேடையின் பின் சுவரை அப்படியே பயன்படுத்து வதனால் நடிக்கின்ற சிறார்களின் அசைவுகள் துலக்கமாக தெரியாது போய்விடும். எப்போதும் ஆற்றுகையாளர் களுக்குப் பின் முளிப்பான நிறங்களுடன் சேர்ந்த பின்னணி இருப்பதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு இருந்தால் ஆற்றுகை செய்வோரின் அளிக்கையை அது விழுங்கி விடும். பின்சுவரை மறைப்பதற்கு திரைகள் பயன்படுத்தப் படலாம். இவையும் கடும் நீலம், கறுப்பு, பிறவுண் நிறங்களாக இருக்க வேண்டும். சில பாடசாலைகளின் பின் திரை சிவப்பு, பச்சை நிறங்களில் போடப்பட்டிருக்கும். இந்த நிறங்களும் திரைக்கு முன்னின்று அசைபவர்களின் அளிக்கையை விழுங்கிவிடும். சிறுவர் நாடகங்கள் மேடையேற்றப்படும் இரு பக்கங்களும் திரைகளால் மூடப்படுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பக்கங்களால் வருகின்ற சூரிய ஒளி பார்ப்போருக்கு இடையூறாக அமையும். ஆற்றுகையாளர்களின் சாயல் பக்க ஒளிகளால் மாற்றமடையும். குறிப்பாக நிழல்களால் ஆற்றுவோரின் தோற்றம் மாற்றமடையும். இதனைக் கருத்தில் கொண்டு பக்க ஒளிகள் கட்டற்று மேடைக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்ட ஒரு சிறுவர் நாடகத்தை மேடையேற்றும் போது அதற்கான ஆயத்தங்களை சிறுவர்கள் மேற்கொள்ளக் கூடியதாக ஒழுங்கு படுத்துவதுசிறந்தது. சிறுவர்கள் சுயமாக இயங்குவதற்கு ஏற்றதான பயிற்சியை, வாய்ப்பை, நாடகம் பழக்குபவர்கள் வழங்க வேண்டும். போட்டிகளிலும் விழாக்களிலும் சிறுவர் நாடகங்களை மேடையேற்றும் போது. நாடகங்களை பழக்கிய ஆசிரியர்கள் மிக அவசர அவசரமாக மேடை ஒழுங்கு படுத்தல்களை பதட்டத்துடன் மேற்கொள் வார்கள். சிறுவர்கள் எங்கே நிற்க வேண்டும் எவ்வாறு உள்நுழைவது எவ்வாறு வெளியேறுவது என்பதை சிறுவர்களைப் பிடித்து ஒவ்வொரு இடமாக நிறுத்தி உறுக்கியபடி கட்டளை இடுவார்கள். நாடகம் நடந்துகொண்டி ருக்கும் போது தமது கண்ணசைவுகள் கையசைவுகள் மூலம் சிறுவர்களை வழிநடத்துவார்கள். இதனால் நாடக அளிக்கையின் போது சிறுவர்கள் மேடையில் ஒரு மூலையில் மறைந்தி ருக்கும் நாடகம் பழக்கிய ஆசிரியரை அடிக்கடி பார்த்து அவர்களின் கையசைவு களுக்கும் கண்ணசைவுகளுக்கும் ஏற்ப தடுமாறுவார்கள்.

மேடையில் நாடகம் நடக்கும் கணத்தில் கட்டளைகளை இட்டு நெறிப்படுத்துபவர் அல்ல நாடக நெறி யாளர். மேடைக்கு நாடகம் ஒன்று வருவதற்கு முன் மேற்கொள்ளப்படுகின்ற முக்கியமான பணியே நெறியாள்கை. இதனைப் புரிந்து மேடையில் தன் பாட்டில் நாடகம் நடக்க உதவுதல் அவசியம். இது மிகச் சிரமமான பணியாக தென்பட்டாலும் இதனைச் சிறார்களின் தன்னம்பிக்கை விருத்தியாக செய்தே ஆகவேண்டும். சிறார்களிடம் நாம் துணிந்து பொறுப்புக் களைக் கொடுக்கலாம். அவர்கள் அதனை கச்சித்தமாகச் செய்து முடிப்பார்கள். நாடகம் பழக்கியவர்கள் நாடக மேடை யேற்றத்திற்காக முன்னாயத் தங்களை செய்துவிட்டு பார்ப்பவர்களின் ஒருவராகி மறைந்துவிடலாம். இந்த பக்குவம் பழகியவர்க்கு வரும் போது இந்த நாடகம் பெரும் வெற்றி பெறும். பழகியவர் பதட்டமாக நிற்பதினால் சிறுவர்களும் பதட்டமடைவர்கள். குறிப்பாக போட்டி முடிவுகள் அறிவிக்கப் படும் போது முதலில் பதட்டமடை பவர்களாக ஆசிரியர்களும், அதிபர் களுமே காணப்படுகிறார்கள். முடிவு முதல் மூன்று இடங்களுக்குள் இல்லை யென்றால், குறிப்பாக முதலிடம் கிடைக்காவிட்டால், ஆற்றுகை செய்யும் மாணவர்களை மிகவும் பாதிக்கின்ற வர்களாக ஆசிரியர்களும் அதிபர்களும் இருப்பார்கள். வெற்றி தோல்வியை சமமாக கருதவேண்டும் என்று கற்பிக்கின்ற நாங்கள் அதனை செயலில் காட்டத் தவறிவிடுகின்றோம். வெற்றிக்காக முயற்சிப்பதும் தோல்வியை கண்டு துவண்டு போகாமல் இருப்பதும் நாடக நெறியாளரின் நற்பண்புகள். இது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய பண்புகளும் கூட. இந்த பண்புகளை வளர்க்கின்றபோது அது சிறுவர்களையும் தொற்றிக்கொள்ளும். இதனால் ஆரோக்கியமான இயங்கு நிலை கொண்ட சிறுவர் சமூகம் சிருஷ்டிக் கப்படும்.

சிறுவர் அரங்கச் செயற்படுகளில் ஈடுபடுவோர் ஒவ்வொரு கணமும் சிறார்களின் நன்மையை பற்றி சிந்திக்க வேண்டும். அவர்களின் ஒவ்வொரு விருப்புக்கள் துலங்கல்கள் பற்றி ஆய்வு செய்யவேண்டும். சிறார்களின் தேவைகள் சரியான முறையில் இனம் காணப்படவேண்டும். அப்போது தான் சிறார்களோடு சேர்ந்து சிறகடித்து பறக்க முடியும். இதன் மூலமே சிறார்களுக்கு மிகப்பயனளிப்பதான சிறுவர் அரங்கை பாடசாலைகளில் குடிவைக்க முடியும். ❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தி– சில நினைவுக் குறிப்புகள்


# என் இனிய ஆசான் சிவஞானசுந்தரம்

-ச. முருகானந்தன்-

ஈழத்து இலக்கியத்தை அரை நூற்றாண்டு காலமாக செழுமைப் படுத்திக் கொண்டிருந்த ஒரு வலு மிக்க பேனாவை ஏந்திய கை ஓய்ந்து போய் விட்டது. ஆம்! நந்தி என்ற அற்புதமான படைப்பாளி – ஞானத்தின் அட்டையை அலங்கரித்த அதே வாரம் எம்மைப் பிரித்துவிட்ட அதிர்ச்சியான செய்தி மனதை வாட்டுகிறது.

ஈழத்து இலக்கியப் பரப்பில் சிவஞான சுந்தரம் என்ற பெயர் கொண்ட மூவர் இருந்தார்கள். எனினும் அவர்களில் இருவர் தமது புனை பெயர்களிலேயே பிரபலமாக இருந்தார்கள். ஒன்று சிரித்திரன் ஆசிரியர் சுந்தர், மற்றவர் நந்தி என்கிற மருத்துவ பேராசிரியர். இயற்பெயரிலேயே பிரபலமாக இருந்தவர் இலங்கை வானொலி சிவஞானசுந்தரம்.

ஒரு சிறந்த கல்விமானாக சமூக மருத்துவ பேராசிரியராகப் பணியாற்றி மருத்துவ பீடாதிபதியாக உயர்ந்து. ஓய்வு பெற்ற பின்னரும் பகுதிநேர விரிவுரைகளை வழங்கி யாழ் மருத்துவ பீடத்தினை நிமிர வைத்தவர். யாழ் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது தொகுதி உதவி வைத்திய மாணவர்களில் ஒருவனாக உட்புகுந்த போது எமது பயிற்சி நெறிக்குப் பொறுப்பாக இருந்தவர் பேராசிரியர் நந்தி அவர்கள்தான். மருத்துவ பீட மாணவனாக இருந்த போதே தீபம் சஞ்சிகையில் வெளியான எனது மீன் குஞ்சுகள் சிறுகதைக்கு இலக்கிய சிந்தனைப் பரிசு கிடைத்தபோது என்னை உற்சாகமாகத் தட்டிக் கொடுத்ததுடன் ஒரு பாராட்டு நிகழ்வையே பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தியவர் நந்தி.



அன்று முதல் எனது மருத்துவ ஆசானாக மட்டுமல்லாது இலக்கிய ஆசானாகவும் அவரைக் கருத ஆரம்பித்தேன். 1987 முதல் தடைவையாக மல்லிகையில் இனப்பிரச்சினை தொடர்பான கதைகள் பிரசுரமானபோது நந்தியின் கேள்விகள் உருவாகின்றவுடன் எனது 'தரைமீன்கள்' சிறுகதையும் பிரசுரமாகியிருந்தது. இக்கதையைப் படித்துவிட்டு கடித மூலம் என்னைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார். ஒரு பேராசிரி யராக இருந்தபோது இலக்கியத் துறையினரை மிகவும் நேசித்தவர். சமூக மருத்துவ பேராசிரியர் ஆதலினால் சமூகத்துடன் தொடர்பு கொண்டு செயற்பட்டபோது, சமூகத்தினை மிகவும் நேசித்தவர். ஆரம்ப காலத்தில் மலையகத்தின் உயர்வுக்காக அயராது எழுதியவர்.

அவர் இன்று எம்மிடையே இல்லை. எனினும் என்றும் அவரது எழுத்துக்கள் வாழும். அவை சாகாவரம் பெற்றவை.

**பே**ராசிரியர் நந்தியின் படம், ஞானம் அட்டைப்படத்தில் பிரசுரமாகி இதழினுள்ளே கட்டுரையும் வெளிவந்த வேளையில் அன்னாரின் இலக்கியப்பணியினைக் கௌரவிக்குமுகமாக ஞானம் கலை இலக்கியப் பண்ணையின் சார்பில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் விழாவெடுக்க சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டோம். அவரது அட்டைப்படம் தாங்கிய இதழை விழாவிலே வெளியிட இருந்தோம். கொழும்புக்கிளைத் தலைவர் ந.சோமகாந்தன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆனாலும் இறுதி நேரத்தில் நோயின் காரணமாக தன்னால் பயணம் செய்ய முடியாத நிலைமையை பேராசிரியர் எமக்குத் தெரியப்படுத்தியிருந்தார். எமக்குப் பெரும் ஏமாற்றமாய்ப் போய்விட்டது. நாம் கொடுத்துவைத்தது அவ்வளவுதான். அன்னாரின் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஞானத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- ஆசிரியர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைகதை இலக்கியம் : அறிவோம், கற்போம், படைப்போம்.

செங்கைஆழியான் க. குணராசா

9

### 9.1 மானிடநேயத்தினைச் சித்திரிக்கும் ஒரு சிறுகதை

நல்லதொரு சிறுகதைக்குரிய கரு எங்கிருந்தாலும் எப்பொருளிலிருந்தும் படைப்பாளிக்குக் கிடைத்துவிடும். அக்கருவைச் சிறுகதை என்ற வடிவத்தில் அடக்க முயலும்போது (1) அதற்கான கதையம்சம், (2) அக்கதை நிகழ்கின்ற யதார்த்தக் களப்பின்னணி, (3) அப்பின்னணியில் நடமாடும் கதாபாத்திரங்கள், (4) அவர்கள் மூலம் வெளிப்படுகின்ற மானிடநேயம், (5) அவை எல்லாவற்றினூடாகப் படைப்பாளி சமுகத்திற்குச் சொல்ல விரும்பும் செய்தி (6) படைப்பாளி – பாத்திரங்கள் – வாசகன் என்ற முக்கோணப் பிணைப்பினால் உணரப் படும் படைப்பனுபவம் என்பன நல்லதொரு சிறுகதையை உருவாக்கிவிடுகின்றன.

1994 களில் மல்லிகையில் 'தெருவிளக்கு' என்றொரு சிறுகதை வெளிவந்தது. பின்னர் அது ராவய என்ற சிங்களப்பத்திரிகையிலும் மொழிபெயர்ப்பாக வெளிவந்தது. அச்சிறுகதை அக்காலகட்டத்து யாழ்ப்பாணத்தினை கண்முன் கொண்டுவர முயல்கின்றது. மின்சாரம் கிடைக்காத அக்காலகட்டத்தில் பழைய மின்கம்பங் களில் தெரு விளக்குகள் பொருத்தப் பட்டிருந்தன. அத்தெருவிளக்குத்தான் இச்சிறுகதையின் கரு. சிறுகதையினைத் தொடங்கும்போது அங்குமிங்கும் சுற்றி யலையாமல் பளிச்செனக் கதையின் கருவினைச் சுட்டுவதாகத் தொடங்குகிறது.

'கடைத்தெருவுக்கு வந்த செல்வராசன் சந்தியில் அப்படியே நிலைகுத்தி நின்று விட்டான். அவன் விழிகள் இரண்டும் வியப்பால் விரிய தாங்க முடியாத அதிசயத்தால் அவன் வாயும் சற்று அகலத்திறந்து கொண்டது' எனக் கதை தொடங்குகிறது. தெரு விளக்கு என்ற இச்சிறுகதையின் பிரதான பாத்திரம் செல்வராசன் என்ற சிறுவன் தான். அவனை அப்படி வியப்படைய வைத்தது மின்சாரக் கம்பத்தில் பொருத்தப்பட்டிருக்கும் தெருவிளக்குத்தான். 'கண்ணாடிக் கூடுக்குள் மேசை லாம்பு எரிகிறது' யாழ்ப்பாணத்தின் தெருக்களில் இவ்வாறான தெருவிளக்குகள் வரவேண்டிய சூழ்நிலையைக் கூறுவதன் மூலம் கதை நிகழ் பிரதேசத்தின் யதார்த்தக் களத்தினைப் பின்வருமாறு ஆசிரியர் புலப்பட வைக்கிறார்.

'பாதுகாப்பு வலயத்தின் நான்கு மூலைகளிலும் ஐசிஆர்சிகாரர் சிலுவை வடிவில் வானத்தை நோக்கி இரவில் ஒளிவிடும் ரியூப் லைற்றுகள் மட்டுமே உள்ளன. நான்கு ஆண்டுகளாக இருண்டு கிடக்கிற யாழ்ப்பாணத் தெருக்களுக்கு ஒளியூட்ட முன் வந்தவர்கள் யார்? இருட்டுக்குப் பழக்கப்பட்டுவிட்ட மக்கள் மாலை கவியத் தொடங்கும்போது கூடுகளுக்கு திரும்பிவிடும் பறவைகள் போல வாழக்கற்றுக் கொண்டார்கள். ஏழு மணிக்குள் வெறிச்சோடிப்போகின்ற வீதிகள், கடைத்தெருக்கள் இரவில் விளக்கு ஏற்றாமலே படுக்கைக்குப் போகின்ற மக்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செல்வராசன் வீட்டில் ஒரு சிக்கன விளக்கு இருக்கின்றது. ஒரு லிற்றர் மண்ணெண்ணெய் நூறு ரூபாவிற்கு மேல் விற்கின்ற வேளையில் அரிக்கன் லாம்பும் மேசை லாம்பும் எரிக்கவா முடியும்? ஒரு கரண்டியில் பக்குவமாக மண்ணெண்ணெயை வார்த்து சிக்கன விளக்கின் பஞ்சுப் பொதியில் விட்டு நனைத்து அதனுள் திரியைப் புதைத்து எரிக்கின்ற தொழில்நுட்பம் பல ஏழை மக்களின் குடிசைகளில் இரவில் சிறிது நேரமாவது மினுங்கல் வெளிச்சத்தைத் தர உதவுகின்றது'– யாழ்ப்பாணத்தில் அக்கால கட்டத்தில் சிக்கன விளக்கென்று அழைக்கப்பட்ட சிறியதொரு விளக்கமைப்பு இருந்தது. அதன் தொழில் நுட்பத்தினை செல்வராசனூடாக ஆசிரியர் விளக்குகிறார்.

"அப்பு எனக்கொரு சிக்கன விளக்கு வேணும்"

" செய்தால் போகிறது. போய் ஒரு ஜாம் போத்தல் எடுத்துவா..." என்கிறார் அப்பு.

"ஜாம் போத்தல் என்றால் என்ன?"

அப்பு தலையைச் சொறிகிறார். கடற் கரையோரக் குடிசைகளில் வாழ்கின்ற ஏழைப் பையனிடம் ஜாம்பற்றிக் கதைத் திருக்கக்கூடாது. இன்றைய யாழ்ப்பாண இளம் பிள்ளைகளுக்குப் பல சங்கதிகள் தெரியாது.

அப்பு எப்படியோ விளங்க வைக்கிறார். ஜாம் போத்தல் கிடைக்கிறது. அடுத்து சயிக்கில் ரியுப் அடிக்கட்டை தேவைப்படுகிறது. சயிக்கில் கடை இராசதுரையிடம் செல்கிறான்.

"அண்ணை... ஒரு ரியுப் வால்ப் அடிக்கட்டை..."

"அது எங்கயடா இப்ப கிடைக்கிறது. சிக்கன விளக்கு வந்ததும் ஒன்டாவது கடையில் இருக்க விடுகிறான்களில்லை"

"அண்ணை நான் இராவில படிக்க..."

இராசதுரைக்கு அவன் மீது இரக்கம் வந்து விடுகின்றது. தேடி எடுத்துக் கொடுக்கிறார்.

சிக்கன விளக்கென்பதை யாழ்ப் பாணத்தவர் அறிவர். சிறுகதை என்பது ஒரு குறிப்பிட்ட எல்லையினுள் வாழ்பவருக்கு மட்டும் புரிய வைப்பதன்று. அனைவருக்கும் புரியவேண்டும். பிரதேச எல்லைகளுக்கு அப்பாலுள்ளவர்களுக்கும் புரியவேண்டும். எனவே வட்டார வழக்கப் பொருளை அச்சிறுகதை யாதென வாசகர் அனைவருக்கும் தெரியவைக்க வேண்டும். தெருவிளக்கின் ஆசிரியர் அச்சிறுகதையில் ஏற்றவிடத்தில் தெளிவாக்குகிறார்.

'அப்பு அதன் பின்னர் சிக்கனவிளக்கினைச் செய்வதில் ஈடுபட்டார். அவன் அவர் அருகில் அமர்ந்து அவதானமாகப் பார்த்தான். (அவன் பார்வையூடாக சிக்கன விளக்கின் செய்முறை விளக்கப் படுத்தப்படுகிறது) கம்பியொன்றினைப் 'ப' வடிவில் வளைத்து ஜாம் போத்தலினுள் வைத்து ஆழம் பார்த்தார். ஒன்றரை அங்குலம் போத்தலின் அடித்தளத்தி லிருந்து உயர இறக்கிவிட்டுக் கம்பியை போத்தல் விளிம்பில் செவியாக வளைத்துவிட்டார். வால்ஃப் கட்டையில் பஞ்சுத் திரியை நுழைத்து அதனைக் கம்பியின் 'ப' நடுவில் பிணைத்தார். பஞ்சைப் போத்தலினுள் வைத்தார். மண்ணெண்ணெயில் ஒரு தேக் கரண்டியளவு எடுத்து கவனமாகப் பஞ்சில் விட்டார்.

"இது காணுமே அப்பு?"

"ஒரு மணித்தியாலம் வடிவாக எரியக் காணும்"

அதன் மங்கிய வெளிச்சத்தில் அவன் படித்தான். தெருவில் அவன் பார்த்த தெரு விளக்கு ஆசையைத் தூண்டி விடுகிறது. அப்படியொரு மேசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கிருந்தால் நல்லதெனப்படுகிறது. வேகமாக வீட்டிற்கு ஓடிவருகிறான். அக்கால வேளையில் எவராவது விழுந்தடித்து ஓடிவந்தால் "என்னடா பொடி எங்கையாவது குண்டு போட்டிட்டான்களே?" என்பதே கேட்கின்ற கேள்வி யாகவிருக்கும். அப்புவிடம் அவன் தெரு விளக்கினைப்பற்றி விபரிக்கிறான்.

"அந்தக்காலத்தில சந்திக்குச் சந்தி கோயிலுக்குக் கோயில் இப்படித் தெரு விளக்கிருந்தது. ஆளுயரக் கம்பின் உச்சியில் கண்ணாடிக் கூடு. அதுக்குள்ள தேங்காயெண்ணெயில் செய்த விளக்கு... இப்ப திரும்பவும் தெருவிளக்கு வந்திட்டுது.."

"போ அப்பு, உங்கட காலத்தில இப்படிக்குண்டு போட்டவங்களே? ஷெல் அடிச்சவங்களே? ஏகே 47 இருந்ததே? வீதியில வீடுகளில கோயில்களிலே ஆக்கள் உடல் சிதறிக்கிடந்தவையே?" எனப் பேரன் கேட்கிறான்.

தெருவிளக்குகள் அவசியம் கதையில் என உணர்த்தப்படுகிறது.

"அப்படி எல்லாத் தெருவிலும் வைத்தால் என்ன அப்பு?"

"ஆர் வைக்கிறது?"

"எங்கட வீட்டிற்கு முன்னால இருக்கிற மின்கம்பத்தில ஒரு விளக்கு இருந்தால்...? முந்த நாள் மாரிமுத்தர் கச இருட்டில ரோட்டுக் கானுக்குள்ள விழுந்திட்டார். அதுக்கு முதல் நாள் விறகுச்சுமையோடு வந்த சண்முக மண்ணை சயிக்கிலோட பிரண்டு விழுந்து பாவம் சரியான காயம்" என்கிறான் சிறுவன். அப்பு சிந்தனையில் ஆழ்கிறார்.

இரவு நித்திரை வராது அப்பு தவிக்கிறார். தன் வாங்கிலிருந்து எழுந்து வெளியில் வந்தவர் செல்வராசனின் குடிசைப்பக்கமாகப் பார்க்கிறார். அப்படியே விறைத்துச் சிலையாகி விடுகிறார். செல்வராசனின் குடிசைக்கு எதிரிலிருந்த மின்கம்பத்தில் சிக்கன விளக்கொன்று மினுங்கிக் கொண்டிருப்பது தெரிகின்றது. அணைந்து விடுமாப் போல ஒளி அடங்கி மினுமினுத்தது. அவர் அடுக்களைக்குள் போய் மண்ணெண்ணெய்ப் போத்தலைக் கையில் எடுத்துக் கொண்டார். செல்வராசன் ஏற்றிவைத்த தெருவிளக்கை நோக்கித் திருப்தியுடன் நடக்கத் தொடங்கினார்.

இவ்விடத்தில் அச்சிறுகதை முடிகிறது.

(1) இச்சிறுகதையின் உள்ளடக்கம் : போர்க்காலச் சூழ்நிலையில் விளக்கெரிப்பதற்கு மக்கள் பட்ட அவலங்கள்.

(2) இச்சிறுகதையின் கரு : தெருவிளக்கு அதுவே கதையின் தலைப்பாகிறது.

(3) இச்சிறுகதையின் உத்தி : முன்னிலைப்பாங்கான ஒரு மையத்தெழும் உத்தி செல்வராசன் என்ற பாத்திரத்தின் பார்வையில் கதை வளர்க்கப்படுகிறது.

(4) இச்சிறுகதையின் உருவம் : தொடக்கம் வளர்ச்சி – முடிவு என்ற இயல்புநிலை உருவம். தொடக்கத்தில் செல்வராசன் கடைத்தெருவில் மின்கம்பத்தில் பொருத்தப் பட்டிருக்கும் மேசைலாம்புத் தெரு விளக்கினைப் பார்க்கிறான். வளர்ச்சியில் தனக்கெனப் படிப்பதற்கு ஒரு சிக்கன விளக்கினைத் தேடிக் கொள்கிறான். முடிவில் அதனைப் பொது நலனுக்காகத் தியாகம் செய்கிறான். வியப்பான எதிர் பாராததுமான முடிவு. இவ்வகை முடிவுகளை ஓ'ஹென்றிப்பாணி முடிவு என்பர்.

(5) இச்சிறுகதையின் நடை : மிக எளிமையான பாசாங்கற்ற மொழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடை உள்ளடக்கமும் கருவும் சிறப்பாக இருப்பதால் கதைகூறும் மொழி நடை எளிமையானதாக அமைந்தாலும் கதை சிறப்புறுகிறது.

(6) இச்சிறுகதையின் கதாபாத்திர வார்ப்பு : செல்வராசன் என்ற சிறுவன், அப்பு என்ற முதியவர் இருவரும் முக்கிய பாத்திரங்கள். தலைமுறை இடைவெளியைக் காட்டும் விபரணங்கள் இச்சிறு கதையில் வருவதால் அவர்கள் அவசியமாகிறார்கள். அவர்களைவிட அம்மா, இராசதுரை என இரு துணைப்பாத்திரங்கள் உள்ளனர். சிறுகதைகளில் பாத்திரங்களின் எண்ணிக்கை அவ்வாறுதான் இருக்கவேண்டும். ஒரு குறுகிய காலப் பொழுதில் நிகழ்கின்ற சம்பவத்தினை ஒரு யன்னலூடாகப் பார்க்கின்ற காட்சி தான் சிறுகதை என்றார் புதுமைப்பித்தன்.

(7) இச்சிறுகதையின் களமும் சூழலும் : யாழ்ப்பாணத்தின் கடற்கரை யோரக்கிராமம் ஒன்று களமாகின்றது. போர்க்கால யாழ்ப்பாணத்தின் பின்வரும் முகங்களை இச்சிறுகதை யினூடாகத் தரிசிக்க முடிகின்றது. (1) அக்கிராமத்திற்கு மின்சாரம் இல்லை. இருளில் மூழ்கிக்கிடக்கிறது. (2) பல்வகை விளக்குகள் சிக்கனத் திற்காகக் கண்டுபிடிக்கப்படுகின்றன. சவால்கள் வரும்போது இவ்வகை முயற்சி இயல்பாகிறது. (3) ஜாம் போன்ற நவீன பதார்த்தங்கள் குறித்து இளம் தலைமுறைக்கு கதை நிகழ் காலத்தில் அறிமுகமில்லை. (4) மண்ணெண்ணெய் விலை போத்தல் இருநூறு ரூபா. இருபத்தைந்து ரூபா மானியத்தில் வாங்குகிற மண்ணெ ண்ணெயை ஏழை மக்கள் உடன் பணக்காரர்களுக்கு விற்று விடுகிறார்கள். (5) மீன்பிடிக்கப் போகின்ற மீனவர்கள் ஷெல் தாக்குதலிற்குள்ளாகின்றனர். (6) சயிக்கிலில் விறகுச் சுமையேற்றி விற்றுப்பிழைக்கிறார்கள்.

(8) இச்சிறுகதையில் கற்பனைக்கான இடம். இது ஒரு யதார்த்தபூர்வமான சிறுகதை. இதில் கற்பனைக்கான இடம் எதுவுமில்லை என்று கூறிவிட

## வருவது எதுவானாலும்

அதோ வருகிறது
தலைவிரி கோல அரக்கியாய்,
அவிழ்த்துவிடப்பட்ட வெள்ளமாய்,
ஆவேசமாய் வருகிறது – நம்
ஓலைக்குடில்களின் வாசலுடைத்து,
அதிகதியாய் நுழைந்து
குழந்தைகள், குமரிகள்
சொத்துக்கள் சூறையாடி – எமை
தகர்த்துத் தொலைக்க
இராட்சசப் பசியுடன்
வருகிறது.
கழிந்த காலத்தின் போல்
ஓடி ஒளிதல் இயலாது.
எதிர்த்து நில்லுங்கள்
போராடிச் செத்துவிட்டு போவோம்.
செங்குருதி கொண்டவர் நாம்.

**வே. தினகரன்**
பத்தனையூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. பல குடும்பங்களின் அவலங்களை ஒரு குடும்பத்தில் ஏற்றிக் கதாசிரியர் கற்பனை செய்திருப்பார். ஓரிடத்தில் செல்வ ராசன் கேட்கிறான் : "உந்தத் தெரு விளக்குகளை ஆர் வைத்தவர்கள் அப்பு?" "அது பாலசிங்கமாம்" என்கிறார் அப்பு. யாழ்ப்பாணத்தின் அக்கால மாநகரசபை ஆணையாளர் பாலசிங்கமாவார். அவரும் இச்சிறுகதையூடாக வரலாற்றுப் பதிவாகிறார்.

(9) இச்சிறுகதையின் கருத்தியற் கோட்பாடு: சமூகத்தின் வறுமை யையும் உரிமைகள் மறுக்கப் பட்ட ஓரினத்தையும் யதார்த்தவியல் அடிப்படையில் சித்திரிக்கிறது. போர்க் காலச் சூழ்நிலையிலும் ஏழை மக்களுக்குக் கிடைக்கின்ற மானிய மண்ணெண்ணெயைக் காசைக் காட்டிச் சுரண்டுகிற ஒரு வர்க்கம் இருக்கிறது.

(10) இச்சிறுகதையின் சமூகச்செய்தி : எச் சூழ்நிலையிலும் வறுமையிலும் கூட மானிடனின் உயர் பண் பியல்புகள் அற்றுப்போவதில்லை என்பது இச்சிறுகதையின் சமூகச் செய்தியாகும். பாலசிங்கம் என்ற மாநகர ஆணையாளர் தெரு விளக்குப் பொருத்தியதான பெரும் பணி, சிறுவன் செல்வராசன் தனது படிப்பிற்காக செய்த சிக்கன விளக்கினை பொது நலன் கருதி கம்பத்தில் கட்டிய செயலால் சிறிதாகிவிடுகின்றது. நாம் நமக்காக மட்டும் பிறந்தவர்களல்லர் சமூகத் திற்காகப் பிறந்தவர்கள்.

நல்லதொரு சிறுகதைக்குரிய இப்பத்து அம்சங்களையும்... மன திருத்தி இச்சிறுகதை படைக்கப் பட்டதா? இல்லை அவை படைப்பாளி எழுதும் போது இயல்பாகவே அமைந்து விடுகின்ற சங்கதிகளாம். (செங்கை ஆழியானின் 'இரவு நேரப்பயணிகள்' என்ற சிறுகதைத் தொகுதியிலுள்ள முதற் சிறுகதை 'தெருவிளக்கு')

❑


## 'ஞானம்' சந்தா விபரம்

### உள்நாடு

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூபா 30/= |
| ஆண்டுச் சந்தா | : | ரூபா 360/= |
| 2 ஆண்டுச் சந்தா | : | ரூபா 700/= |
| 3 ஆண்டுச் சந்தா | : | ரூபா 1000/= |
| ஆயுள் சந்தா | : | ரூபா 15000/= |

சந்தா காசோலை மூலமாகவோ வங்கிக் கணக்கு மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம்.

மணியோடர் அனுப்புபவர்கள் அதனை **வெள்ளவத்தை** தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்ப வேண்டும். வங்கிக் கணக்கு மூலம் அனுப்புபவர்கள் **T. Gnanasekaran, HNB - Pussellawa,** நடைமுறைக் கணக்கு இலக்கம் – 26014 என்ற கணக்கிலிட்டு வங்கி ரசீதை அனுப் புதல் வேண்டும்.

*அனுப்ப வேண்டிய பெயர், முகவரி :*

**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
*3-B, 46 th Lane, Colombo - 06.*

### வெளிநாடு

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | : | 25 US$ |
| ஆயுள் சந்தா | : | 300 US$ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலியும் நானும் (1)

கே. எஸ். சிவகுமாரன்

## *செய்தி அறையில்*

**1969**ஆம் ஆண்டு இலங்கை வானொலியின் செய்தி அறையில் (News Room) நிரந்தர தமிழ் செய்தி மொழிபெயர்ப்பாளனாகச் சேர்ந்தேன். என்னுடன் மறைந்த கே. எஸ். மகேசனும், எஸ். ராசையாவும் அங்கு பணிபுரிந்தனர். பின்னர் வி. நவரத்தினம், காசி நவரத்தினம் ஆகியோர் செய்தி அறையில் சேர்ந்தனர்.

செய்தி மொழிபெயர்ப்பாளர்களின் பணி, ஆங்கிலத்தில் தரப்படும் பிரதான வானொலிச் செய்தியறிக்கைகளைத் தமிழில் மொழிபெயர்த்து செய்திவாசிப் பாளர்களிடம் கொடுப்பதுதான். இந்த மொழிபெயர்ப்பாளர்கள் வருமுன்னர் செய்தி வாசிப்பவர்களே செய்தியறிக் கைகளை தயாரித்து வந்தனர்.

தினமும் உள்ளூர் நேயர்களுக்காக நான்கு பிரதான செய்தியறிக்கைகள் ஒலிபரப்பாகின. இவற்றிலே உள்நாட்டுச் செய்திகளும், வெளிநாட்டுச் செய்தி களும் இடம் பெற்றுவந்தன.

உள்நாட்டுப் பிரதான செய்தியறிக் கைகளுடன், ஆசிய நேயர்களுக்கான தமிழ்ச் செய்தியறிக்கைகளையும் நாம் தமிழில் கொடுத்துவந்தோம்.

ஓர் எழுத்துப் பரீட்சையின் பின்னரே நாம் மொழி பெயர்ப்பாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டோம். குறைந்தது லண்டன்/இலங்கை ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் தமிழிலே சித்தி யடைந்திருத்தல் வேண்டும். ஆங்கில மொழிப் பரிச்சயம் ஆகியன வேண்டப் பட்ட தகைமைகளிற் சில

இலங்கை வானொலியில் தமிழ் மொழிபெயர்ப்பாளராகச் சேருமுன்னர், நான் கொழும்பிலுள்ள உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அலுவலகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளனாக எட்டு வருடங்கள் (1961–1969) அனுபவம் பெற்றிருந்தேன். அப்பொழுது நான் கலைமாணிப்பட்டம் பெற்றிருக்கவில்லை. பின்னரே, வெளிவாரிப்பட்டதாரி யாகினேன்.

1970 ல், மொழிபெயர்ப்பு முறை தளர்த்தப்பட்டு செய்தி ஆசிரியர்களை நியமித்தனர். அந்நாட்களில் அரசியல் மாற்றம் ஏற்பட்டது காரணமாக தமிழ்மன்றம் பதிப்பக உரிமையாளரும் சட்டத்தரணியுமான எஸ். எம். ஹனிபா தமிழ்ச் செய்திப்பிரிவின் உயர்ந்த பதவியான கடமை ஆசிரியராக (Duty Editor) பதவியில் நியமிக்கப்பட்டார். மற்றுமொரு கடமை ஆசிரியராக, அறிவிப்பாளர் எஸ். புண்ணியமூர்த்தி நியமிக்கப்பட்டார். இவர்களுக்கு அடுத்த தரத்தில், தரம் 1 உதவி ஆசிரியராக T.G.பாலேந்திரா நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில் கே. எஸ். மகேசன் செய்தியறையிலிருந்து விலகிக் கொண் டார். அரசியற் பின்னணி காரணமாக, எஸ். ராசையாவும், நானும் தரம் 2 உதவி ஆசிரியர் பதவிக்குத்தான் லாயக்கு என்று தள்ளப்பட்டோம். வி. நவரத்தினமும், காசி நவரத்தினமும் தரம் 2 உதவி ஆசிரியர்கள் ஆனார்கள்.

பின்பு எஸ். எம். ஹனிபா விலகிய பின்னர், பொறுப்பாசிரியர் பதவிக்கு நான் தரம் உயர்த்தப்பட்டேன். நான் செய்தி யறையிலிருந்து 1978ல் விலகியதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.G.பாலேந்திரா பொறுப்பாசிரியர் ஆனார். பின்பு எஸ். ராசையா, வி. நவரத்தினம், காசி நவரத்தினம் ஆகியோர் தமது தரங்களிலிருந்து உயர்தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டனர். அதன் பின் ஒருவர் பின் ஒருவராக விலகியதும், நிரந்தர பதவிகளில் எஸ். முத்தையா, சதீஷ் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் நியமனம் பெற்றனர். இப்போது சதீஷ் கிருஷ்ணபிள்ளை மாத்திரமே நிரந்தர பதவி வகிக்கிறார். இடையிலே எஸ். கோபாலனும் உதவி ஆசிரியர் பதவி வகித்து இப்பொழுது இலங்கை வானொலி செய்தியறை யிலிருந்து விலகி ரூபவாஹினியில் பகுதிநேரப் பணி புரிகிறார். எஸ். தில்லைநாதனும் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார்.

தற்சமயம், ஓய்வுபெற்ற சிலர் பகுதிநேரச் செய்தி ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர். இவர்களுள் எஸ் நடராஜ ஐயர், செல்வி சற்சொரூபவதி நாதன், எஸ். ராசையா, காசி நவரத்தினம், நான் ஆகியோர் செய்தி யறிக்கைகளைத் தமிழில் தயாரிக்கின்றோம்.

முன்னர் ஆங்கிலமொழியில் தயாரிக் கப்படும் செய்தியறிக்கையே (Master Bulletin) ஆக (மூலப்பிரதியாக) கருதப்பட்டது. இது ரிட்ஜ்வே திலகரத்ன என்பவர் ஒலிபரப்பு அதிபராக வந்த பின்னர் சிங்கள மொழித் தயாரிப்புக்கே முதலிடம் வழங்கப்பட்டு நடைமுறையில் இருக்கிறது.

தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் தற்சமயம் செய்தி–1 (6.30), செய்தி–2 (12.45) செய்தி–3 (6.00) செய்தி–4 (9.00) ஆகிய செய்திகளும், அவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதற்காக நான்கு உலகச் செய்திகளும், காலையில் ஒலிபரப்புவதற்காக மாகாணச் செய்தி களும், ஆசிய நேயர்களுக்காக மாலை 6.30 செய்திகளும், மத்திய கிழக்கு நாடுகளுக்கான தலைப்புச் செய்திகளும் தமிழில் தரப்படுகின்றன.

1974 ஆம் ஆண்டிலே, ‘‘மாணவர் கல்விக்களஞ்சியம்’’ என்ற கருத்தியலின் படி ‘‘வளர்மதி’’ என்ற பெயரிலே கல்வித் திணைக்களம் ஒரு மாத சஞ்சிகையை வெளியிட்டு வந்தது. அதன் ஆசிரியர் வே. பேரம்பலம் துணை ஆசிரியர்களாக இ. குணநாதான், ந. வாகீச மூர்த்தி, அ.வி. விக்டோரியா, கு. உதயகுமார் ஆகியோர் பங்களித்தனர்.

‘வளர்மதி’ இதழ் 2லே (ஆவணி1974), ‘‘நீங்கள் கேட்பது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்திகள்’’ என்ற தலைப்பிலே ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். அதில் சில விபரங்கள் தரப்பட்டுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தியறையிலே ஒரு நிரந்தர ஊழியனாக ஒரு 9 வருடங்கள் அனுபவம் பெற்றேன். நாளாந்தப் பயிற்சி மூலம் செய்திகளை வானொலி என்ற ஊடகத்திற்கு எவ்வாறு தயாரிப்பது என்பதைப் படிப்படியாக அறிந்து கொள்ள முடிந்தது.

அந்நாட்களில் பயிற்சி பெற்ற செய்தி வாசிப்பாளர்களாக வி. ஏ. கபூர், எஸ். புண்ணியமூர்த்தி, வி. சுந்தரலிங்கம், நடராஜ ஐயர், ‘தாடி சுந்தரலிங்கம், சற்சொருபவதி நாதன், வி.பி. தியாகராஜா எஸ். சிவராஜா போன்றோர் நாம் தயாரிக்கும் செய்திகளை தமது உச்சரிப்புகளுக்கும், வாசிக்கும் முறைக்கும் ஏற்ப வாசிக்கும் பொருட்டுச் சில திருத்தங்களைச் செய்து வாசிப் பார்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தி அறையில் நிரந்தரமாக நான் (1969) சேருமுன்னர், 1966 ஏப்ரில் மாதம் தொடக்கம், வர்த்தக ஒலிபரப்பிலே பகுதிநேர தமிழ் அறிவிப் பாளராகச் சேர்ந்திருந்தேன். அச்சமயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஹரிஹர சர்மா தயாரித்துத்தந்த ஆசிய நேயர்களுக்கான செய்தி அறிக் கைகளை ஆசிய ஒலிபரப்பில் வாசித் திருக்கிறேன்.

1970 களின் பிற்பகுதியில், தமிழ்ச் செய்திவாசிப்பாளராக நான் தெரிவு செய்யப்பட்டபோதும், ஒரு வருடத்திற்கும் மேலாக தமிழ்ப் பகுதி நிர்வாகத்தினர் என்னைப் பயிற்சி வாசிப்பாளராக ஒரு போதுமே அழைக்கவில்லை. இலங்கை வானொலி ஒலிபரப்பாளர்களிடையே இருக்கும் 'அரசியல்' அலைகளை அறிந்திருந்ததனால் நடப்பது நடக்கட்டும் என்று வாளாதிருந்தேன். அப்போது செய்தி வாசிப்பவர்கள் கே. எஸ். பாலசுப்பிரமணிய ஐயரின் நிர்வாகத் துக்குள் இருந்து வந்தனர். சி.வி. ராஜசுந்தரம் தமிழ்ச் சேவையில் உதவித் தலைவராக இருந்தார். சிரேஷ்ட தமிழ் அறிவிப்பாளர்கள் மிகுந்த பலம் பொருந் தியவர்களாக இருந்ததனால், அவர் களுடைய ஆளுகைகளுக்கும், செல்வாக் குகளுக்கும் பலமிழந்தவர்கள் ஈடு கொடுக்க முடியவில்லை.

பின்னர், அமைச்சராக இருந்த, மறைந்த சி. குமாரசூரியரின் கேள்வி ஒன்றுக்கு (ஏன் நான் செய்தி வாசிக்க அனுமதிக்கப்படவில்லை) பதிலளிக்கும் வகையில், என்னைத் திடீரென பாலசுப்பிரமணிய ஐயர் அழைத்து 12.45 செய்திகளைப் பயிற்சிச் செய்தி வாசிப்பாளராகப் பணித்தார். அதன் பின்னர் படிப்படியாக நானும் தமிழ்ச் செய்திகளை வாசிக்கத் தொடங்கினேன்.

பின்பு சிறிது காலத்தின் பின்னர் செய்தி வாசிப்பாளர்களுக்கான ஒரு குரல்வளப் பரீட்சையை நடத்தி நான் தகுதியற்றவன் என்று கண்டனர். ஒரு சிலரை நீக்குவதற்காகப் பலம் பொருந் தியவர்கள் கையாண்ட உத்தி இது. அதன் பின்னர், ஆங்கிலத்தில் நான் செய்தி வாசித்த பொழுதும், தமிழில் பின்னர் செய்தி வாசிக்கவேயில்லை.

இந்த ஆண்டில் செய்தி வாசிப் பவர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு மொழி பெயர்ப்பு பரீட்சையையும், குரல்வளப் பரீட்சையையும் நடத்தினார்கள். வி. ஏ. கபூர், சிவராஜா, ராஜ குரு சேனாதிபதி கனகரத்தினம் போன்ற சிரேஷ்ட செல்வாக்கு மிகுந்த அறிவிப்பாளர்கள் தேர்வுக்குழுவில் இருந்தார்கள். இம் முறையும் நான் தகுதியற்றவன் என்று தட்டிவிட்டனர்.

இலங்கை வானொலி செய்தி யறையில் நான் பெற்ற அனுபவம் மிகப் பெரியது.

❑

## புதியன புகுதல்

காய்த்து பூர்த்து
கலகலத்த மரங்கள்
நேற்று முடிந்தபோரில்
மொட்டைகளாய்
காட்சி தருகின்றன !

இடர்பாடுகளில்
அரையும் குறையுமாய்
வளர்ந்த கன்றுகள்
இன்று
பூர்த்து புன்னகை தருகின்றன !

மொட்டை மரங்கள்
பழைய வரலாறுகளை
எண்ணிக் கலங்குகின்றன !

இளங் கன்றுகள்
இனிய கனிகளை தந்து
புதிய வரலாற்றை
பதிவு செய்கின்றன !

**வதிரி. சி. ரவீந்திரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி சொல்லும் சாதனையில் சற்சொரூபவதி



நாற்பது வருடகாலம் ஒலிபரப்புத் துறையில் அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் திகழும் ஒரே தமிழ்ப் பெண்மணி செல்வி சற்சொரூபவதி நாதன் ஆவார். செய்தி வாசிக்கும்போது மிகத் தெளிவான உச்சரிப்புடன் கருத்து விளங்க இவரது குரல் கணீரென்று ஒலிக்கும்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மூலமாகவும், பல மேடைகளில் கருத்தரங்குகள் விவாதங்கள் பேச்சுக்கள் மூலமாகவும் பலரது உள்ளங்களில் இடம்பிடித்துக் கொண்டவர் சற்சொரூபவதி.

சிறந்த பாரம்பரியமுள்ள குடும்பத்தில் பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் உயர்கல்வியை சென்னைப் பல்கலைக்கழகத்திலும், பெற்று விஞ்ஞானப் பட்டதாரியானார். ஆரம்பத்தில் பௌத்த மகளிர் கல்லூரியில் ஆங்கில மூலம் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியையாகத் தமது பணியைத் தொடங்கினார். பின்னர் 1965 ல் ஊடகத் துறையில் தம்மை இணைத்துக் கொண்டு செய்தி அறிவிப்பாளரானார்.

தன் வாழ்நாள் முழுவதும் பெண் உரிமைகளுக்குக் குரல் கொடுத்து, பெண்ணின் திறமைகளை, ஆற்றல்களை, உணர்ச்சிகளை உள்ளக் குமுறல்களை வெளிக் கொணர்வதில் பெரும் பங்காற்றினார்.

இவர் ஒலிபரப்புத்துறையில், செய்திவாசிக்கும் துறையில் தமது திறமைகளை மட்டுப்படுத்திக் கொள்ளாது பல சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவராகவும், பிரபல்யமான பலரை நேர்முகப் போட்டி காண்பவராகவும் தமது பணியைச் சிறப்பாக ஆற்றியுள்ளார்.

நாடகத் துறை, பூவையர் பூங்கா, பாடசாலை மாணவர் கல்வி நிகழ்ச்சிகள் ஆகியனவும் இவரால் தொகுத்து அளிக்கப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகளாகும். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடிய இவர், பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் நடனங்களின் விளக்க உரைகளையும் சிறப்பாக வழங்கியுள்ளார்.

ஊடகத்துறையில் சிகரம் என்று சொல்லத்தக்க நிலையை எய்தி பல விருதுகளைப் பெற்ற சற்சொரூபவதி கூட்டுத்தாபனத்தின் 70ஆம் ஆண்டு நிறைவின்போது நேயர்மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் சிறந்த செய்தி அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு, ஜனாதிபதி விருதைப் பெற்றார். அத்துடன் முதன்முறை ஒலிபரப்பாளருக்கான உண்டா விருதையும் பெற்றார். இவர் கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் ஸ்தாபகராகவும் அங்கத்தவராகவும் செயலாளராகவும் பின்னர் தலைவியாகவும் விளங்கி அயராது சமூகப் பணியாற்றியவர். இத்தகைய சிறப்புகள் வாய்ந்த சற்சொரூபவதியின் பணி மென்மேலும் சிறந்தோங்க ஞானம் வாழ்த்துகின்றது.

**- தி. ஞானசேகரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலக் கலை இலக்கிய நிகழ்வுகள்

## —பார்வையும் பதிவும் —

த. சிவசுப்பிரமணியம்

### நினைவுச் சொற்பொழிவுகள்

ஈழத்து இலக்கிய முன்னோடிகளான இளங்கீரன், சில்லையூர் செல்வராஜன், எச். எம். பி. மொகைதீன் ஆகியோரின் நினைவுச் சொற்பொழிவுகள் கலாநிதி முகம்மது சமீம் தலைமையில் யூன் 12 ஆம் திகதி கொழும்பு இராமக்கிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. கவிஞர் சில்லையூர் செல்வராஜன் பற்றிய உரையை கவிஞர் ஏ. இக்பால் அவர்கள் நிகழ்த்தினார்கள். முற்போக்கு எழுத்தாளரான திரு. நீர்வை பொன்னையன் எச். எம். பி. மொகைதீனின் பத்திரிகைத்துறை சம்பந்தமான செயற்பாடுகளின் திறமையைப் பற்றி மிகத் தெளிவாக விளக்கினார். நாவல் இலக்கியம் என்று வரும்போது 'இளங்கீரன்' தான் எம் கண்முன் நிற்கின்றார் என்று தினகரன் ஆசிரியர் திரு. சிவா சுப்பிரமணியம் இளங்கீரனுக்கு புகழாரம் சூட்டினார்.

### திருக்குறள் உலக நாட்குறிப்பேடு

தெய்வத் தமிழையும், தேனமுதக் குறளையும் உலகமெல்லாம் பரப்பிவரும் தொகுப்பாசிரியரும், பத்திரிகையாளருமாகிய எஸ். சிவலிங்கத்தினால் தொகுக்கப்பட்ட உலக நாட்குறிப்பேடும் தகவல் ஏடும் உள்நாட்டு வெளிநாட்டுப் பதிப்புகளாக வெளிவரவிருக்கிறது. சர்வதேசப் பதிப்பு தமிழ், ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு, மலாய் ஆகிய ஐந்து மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது. வெளியீட்டு விழாக்கள் ஜூன் மாதம் ஜெர்மனியிலும், பிரான்ஸிலும் நடைபெற்றிருக்கின்றன. பிரான்ஸ் விழாவை பாரிஸ் கம்பன் கழகமும், ஜெர்மனியில் நடக்கவுள்ள விழாவை எம். ரி. எஸ். இன்டர்நெஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் ஏற்பாடு செய்திருக்கின்றன. 2006 ஆம் ஆண்டு மேலே கூறப்பட்ட ஐந்து மொழிகளுடன் ஜெர்மன் மொழியிலும் வெளிவரவிருக்கின்றது.

### டோக்கியோ பல்கலைக்கழகத்தில் நினைவுதினக் கூட்டம்

தமிழ் அரசியல் பத்தி எழுத்தாளரும், இராணுவ ஆய்வாளருமான தர்மரத்தினம் சிவராம் அவர்களுக்கு டோக்கியோ சூ பல்கலைக்கழகத்தில் நினைவுக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இனப் பிரிவுகளுக்கு அப்பால் ஒரு பாலமாக இருந்து தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளுக்காக உறுதியுடன் போராடிய சிவராம் போன்ற ஒருவரின் படுகொலையானது தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான சமாதான முயற்சிக்கு பெரும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளதாக மாணவர் பிரதிநிதி மிட்சுகு மகாவா குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வரங்கு

அனாரின் 'ஓவியம் வரையாத தூரிகை' என்னும் கவிதை நூலின் ஆய்வரங்கு விபவி கலாசார மையத்தின் ஏற்பாட்டில் யூன் மாதம் 19 ஆம் திகதி பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தினகரன் ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் தலைமையில் அனாரின் 'ஓவியம் வரையாத தூரிகை' கவிதைகளில் சமுதாயக் கண்ணோட்டத்தில் சிதம்பரப்பிள்ளை சிவகுமாரும், பெண் நோக்கில் தினக்குரல் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த தேவகௌரியும், கவித்துவம் பற்றி கவிஞர் ஏ. இக்பாலும் ஆய்வுரை வழங்கினார்கள். இக்கவிதைத் தொகுதியின் நூல் மதிப்புரை 'ஞானம்' கலை இலக்கிய சஞ்சிகையில் ஜுன் 2005 இதழில் வெளிவந்துள்ளமை அவதானிக்கற்பாலது.

## 2004ஆம் ஆண்டுக்கான விருதுபெற்ற பத்திரிகையாளர்கள்

சிறந்த பத்திரிகையாளருக்கான விருது தினகரன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த விசு கருணாநிதியும், வீரகேசரி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த கிருஷ்ணி கந்தசாமிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் (2003) சிறந்த பத்திரிகையாளருக்கான விருது கிருஷ்ணி கந்தசாமிக்கே கிடைத்துள்ளது என்பதையும் பெருமையுடன் சொல்லியே ஆகவேண்டும். இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து வருடாவருடம் இவ்விருதுகளை வழங்கி வருகின்றன. விவரணக் கட்டுரைகளுக்கான விருது வீரகேசரி நிறுவனத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் ரவிவர்மாவும், சிறந்த கேலி சித்திரத்திற்கான விருதை சுப்பையா ஜெயபாலனும் பெற்றுள்ளனர். விளையாட்டுக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை பத்திரிகையில் எழுதிவந்த சிவலிங்கம் சிவகுமாரன் அதற்காக ஒரு விருதைப் பெற்றுள்ளார்.

## கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாக்கள்

திரு. சி. சிவநிர்த்தானந்தா தனது M.Phil பட்டப்படிப்புக்காக ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பற்றிய தொகுப்பை நூலாக வெளியிட்டுள்ளார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடை பெற்ற விழாவில் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொண்ட பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தைப் பார்க்கும் போது, நூல் வெளியீட்டுக்காக இல்லாமல் அரசியல் கூட்டத்திற்கு ஆட்களை அழைத்து வந்ததாகவே தென்பட்டது. அளவான அழைப்பை கொடுத்து வந்தவர்கள் அமைதியாக இருந்து வெளியீட்டு விழாவை நடத்தியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். புலவர்மணி ஆய்வுரை நூல் வெளியீட்டுவிழாவில் அவரின் சிறப்புகளுக்கு பேச்சாளர்கள் கொடுத்த முக்கியத்துவத்திலும் பார்க்க வருங்கால கலாநிதி சி. சிவநிர்த்தானந்தா என்றும் அவர் புகழ்பற்றி பள்ளுப் பாடியவர்களே அதிகம். அது அவ்வளவு சிறப்பாக இருக்கவில்லை என்றே கூறவேண்டும்.

"வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி" திரு. சோ. பரமசாமி திருக்குறளில் உழவு என்ற அதிகாரத்தில் வரும் பத்து குறளையும் வைத்து பத்து வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். இவை 1969, 70 களில் வானொலி நாடகங்களாக கிராமிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியில் இடம் பெற்றுள்ளன. அந்த நாடகங்களை உள்ளடக்கிய நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவர் திரு. குமாரசுவாமி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.
'ஞானம்' ஆசிரியரும் எழுத்தாளருமாகிய டாக்டர் தி. ஞானசேகரன், வீரகேசரி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி இராசதுரை, எழுத்தாளரும் பிரபல விமர்சகருமாகிய கே. எஸ். சிவகுமாரன் ஆகியோர் ஆய்வுரை வழங்கினர். நூலின் முதற்பிரதியை முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் பெற்றுக்கொண்டார். இந்நூல் வெளியீட்டுவிழா 26-06-2005 இல் நடைபெற்றது.

## எழுத்துலகப் பொன்விழாக் காணும் 'குறமகள்'


மூத்த எழுத்தாளர் 'குறமகள்' என்னும் வள்ளிநாயகி இராமலிங்கம் ஐம்பது ஆண்டுகளாக எழுதிவரும் ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர்களில் ஒருவராவர்.

இவரது எழுத்துலகப் பொன்விழா 'கனேடிய கலை இலக்கிய ஊடக நண்பர்கள் வட்டம்' சென்ற மே 29ம் திகதி சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவில் 'இலக்கியப் பொன்மகள்' என்னும் பட்டம் இவருக்குச் சூட்டப்பட்டது.

"தமது மகள் ஒருவரைத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மாவீரராக அர்ப்பணித்ததாய் குறமகள் இவர் எம்மத்தியில் வாழும் ஒரு புறநானூற்று வீரத்தாய்" என உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் நாவலன் இவ்விழாவிலே குறமகளைப் பாராட்டினார்.

குறமகளாய் எழுதப்பெற்ற "மாலை சூட்டும் நாள்" என்னும் கவிதைத் தொகுதியும் இவ்விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## நேர்காணல்



# எஸ். பொ.

**சந்திப்பு : தி. ஞானசேகரன்**

**அடுத்த இதழில் தொடரும்....**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

**கலாநிதி துரை. மனோகரன்**

## *அண்மையில் மறைந்த இருவர்*

அண்மையில் ஈழத்து இலக்கியத்துறைக்கு இரு பெரும் இழப்புகள் ஏற்பட்டன. எழுத்தாளர்களான நந்தி, செம்பியன் செல்வன் ஆகியோரின் மறைவுகள் நெஞ்சை நோகச் செய்தன. நந்தியைப் பற்றியும், செம்பியன் செல்வனைப் பற்றியும் எனது பத்தியில் எழுதவேண்டும் என்று நீண்டகாலமாக நினைத்திருந்தேன். அவர்கள் உயிரோடு இருக்கும்போதே அவர்களைப் பற்றி எழுத வாய்ப்பு ஏற்படும் என்றுதான் கருதியிருந்தேன். ஆனால், நான் சற்றும் எதிர்பாராத முறையில் இருவரின் திடீர் மறைவுகளும் ஏற்பட்டுவிட்டன.

நான் மாணவனாக இருந்த காலத்தில் ஞாயிறு தினகரனில் வெளிவந்த மலைக்கொழுந்து என்ற நாவல் மூலமே முதன்முதலாக நந்தி என்ற எழுத்தாளரைத் தெரிந்து கொண்டேன். வாராவாரம் தொடராக வெளிவந்த அந்த நாவலை ஆர்வத்தோடு தவறாது வாசித்துவந்தேன். அப்போதைய நிலையில், மலைக்கொழுந்து மலையகம் பற்றிய ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாக விளங்கியது. சிறுகதை, நாவல், நாடகம் எனப் பல்வேறு கலை இலக்கியத்துறைகளில் நாட்டம் கொண்டிருந்த அவர், மேடையில் நூல் விமர்சனம் செய்யும் போது நகைச்சுவை உணர்வுததும்ப விமர்சிப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஈழத்து இலக்கிய உலகில் தமக்கென ஓர் அழியா இடத்தினை தமது அயரா உழைப்பினாலே நந்தி பெற்றுக்கொண்டார்.



காலஞ்சென்ற இரசிகமணி கனக. செந்திநாதன் மூலமாகவே செம்பியன் செல்வனின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. நான் பாடசாலை மாணவனாக இருந்தபோது எழுதிய பாவையின் பரிசு என்ற நாவலின் வெளியீட்டு விழாவுக்கு நூல் விமர்சனத்துக்காக கனக. செந்திநாதன் அவர்களை அணுகியபோது அவர் செம்பியன் செல்வனைப் பற்றிக் குறிப்பிட்டு அவரைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். செம்பியன் செல்வனும் மனமகிழ்வுடன் அந்த நிகழ்வில் கலந்துகொண்டு தக்க விமர்சன உரையை நிகழ்த்தினார். இடையிடையே இருவரும் சந்திக்கக்கூடிய வாய்ப்புகள் முன்னர் இருந்தன. தாம் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது விரிவுரையாளராக விளங்கிய கைலாசபதி பற்றிய சுவாரசியமான விடயங்களையும் அவ்வப்போது அவர் கூறுவார். இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் கண்டியில் இடம்பெற்ற ஓர் இலக்கிய நிகழ்வின் போது செம்பியன் செல்வனை மீண்டும் சந்தித்து அளவளாவச் சந்தர்ப்பம் கிடைத்தது. சிறுகதை, நாவல், உருவகக் கதை, நாடகம், விமர்சனம், திரைப்படம் முதலான பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டவராக அவர் விளங்கினார். எண்ணிக்கையில் குறைவாக எழுதினாலும் ஆழமான பார்வை வீச்சுக் கொண்டவராகவும் ஈழத்து இலக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் தடம் பதித்தவராகவும் விளங்கியவர், செம்பியன் செல்வன்.

## *தேசிய நலனா? சுயநலமா?*

எமது நாட்டின் விசித்திர வினோ தங்களைப் பார்க்கும்போது மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. நாடு பொருளாதாரத்துறையில் பாதாளப் பாதையை நோக்கிச் சென்று கொண்டி ருக்கிறது. விலைவாசிகள் சிறுவர் விடும் பட்டங்கள் போல் மேலும் மேலும் ஏறிக்கொண்டிருக்கின்றன. ஆழிப்பேரலையின் அனர்த்தத்தால் அவதிப்படும் மக்களின் துன்பங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. சமாதானம் என்னும் அழகிய தேவதை ஓடி ஒளிந்து விளையாட்டுக் காட்டிக் கொண்டி ருக்கிறாள். இந்த இலட்சணத்தில் புதிது புதிதாகச் சிலைகள் ஆங்காங்கு முளைத்துக் கொண்டிருக்கின்றன. தேவையற்ற பிரச்சினைகளை அவை உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. புதிதாக முளைக்கும் சிலைகள் பற்றிச் சிந்திக்கும் போது "யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே" என்ற திரைப்படப் பாடல்தான் ஞாபகம் வருகிறது.

அரசியலைத் துறந்து ஆசைகளை நீக்கி மக்களுக்கு ஞானவழி காட்டினார் ஒரு மகான். ஆனால், அவரது சீடர் களோ, அரசியலுக்குள் புகுந்து, ஆசைகளை நிறைத்து அதர்ம வழியில் சென்றுகொண்டிருக்கின்றனர். அகிம்சை வழியில் நாட்டுக்கு நன்மை பயக்கும் விடயங்களைச் சாதிப்பதற்காக உண்ணா நோன்பை அனுட்டித்தார், ஒரு மகாத்மா. ஆனால் போர்வெறி கொண்டு தீய நோக்கங்களுக்காக அந்த நோன்பைப் பயன்படுத்துகின்றனர் குருக்கள்மார். நாட்டைக் குட்டிச் சுவராக்குவதற்கெனப் பிறந்தவர்கள் போலவே இவர்கள் செயற் படுகின்றனர். அந்த மகான் காட்டிய வழியிற் செல்பவர் களாகக் குருக்கள்மார் இருந்திருப் பாராயின் நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டாது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் பற்றி ஓரளவாவது கவனமெடுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தக் குருக்கள்மார்கள் குறுக்கே வந்து குட்டையைக் குழப்புவர்களாகவே விளங்குகின்றனர். சாந்தியும், சமா தானமும் நிலவவேண்டிய இவர் களின் உள்ளங்களில் பேரினவாதச் சிந்தனை களே மண்டிக்கிடக்கின்றன. நல்ல வற்றைச் சொல்லவேண்டிய இவர் களின் நாக்குகளில் நஞ்சே ஊறிக் கிடக்கிறது. அரசியல் தலைவர் களை ஆட்டிப் படைக்கும் சர்வ வல்லமையும் தமக்கே உண்டு, என்ற இயல்பான இறுமாப்பு இவர்களிடம் எப்போதும் உண்டு. இவர்களின் ஆட்டத்துக்கு ஏற்பவே அரசியல் தலைவர்களும் நீண்ட காலமாகத் தாளம் போட்டு வந்துள்ளனர். அது இவர்களது இறுமாப்பை மேலும் வலுவூட்டி வளர்த்திருக்கிறது.

மானுட விமோசனத்துக்காகச் செயற்பட்ட மார்க்ஸையும் ஏங்கல்ஸையும் லெனினையும் ஒப்புக்காக வழிபட்டுக் கொண்டு சிவப்புச் சட்டையில் மாத்திரமே மார்க்சியம் இருக்கிறது எனக் கருதும் சிவப்புச் சட்டைப் பேரினவாதிகள், நாட்டைக் குட்டிச்சுவராக்குவதில் தமக்கும் நிறையப் பங்குண்டு என்ற முறையிற் செயற்படுகின்றனர். கிணற்றுத் தவளைகள் போலவும் காட்டுவாசிகளைப் போலவும் பேச்சிலும் செயலிலும் இவர்கள் நடந்து கொள்கின்றனர். பரமார்த்த குருவும், சீடர்களுமாகவே இவர்களது போக்கு அமைந்துள்ளது. சிவப்புச் சட்டைப் பேரினவாதிகளைப் பொறுத்த வரை, நாட்டில் சமாதானம் ஏற்பட்டு பொருளாதார சுபீட்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வது அவர்களது எதிர்கால அரசியல் அபிலாசைகளுக்குப் பாதகமாகவே அமைந்துவிடும். அதனால் எப்படியாவது சமாதான முயற்சிகளைக் குழப்பியடித்து இவற்றில் ஈடுபடுவோருக்குச் சேறு பூசி, தமது சுயநல அரசியலை நடத்திக் கொண்டு செல்கின்றனர். தமது சுயநல அரசிய லுக்குத் தேசியச்சாயம் பூசி, தங்களை நம்பும் மக்களை மடைமையில் வைத்திருக் கின்றனர். இத்தகைய சுயநல வாத அரசியல்வாதிகளைத்தான் ஒரு நாட்டின் மார்க்சீய நேசர்கள், தமது மாநாடு ஒன்றுக்கு விருந்தினராக அழைத்து மார்க்சியத்தையே கேவலப் படுத்தியுள்ளனர்.

நாட்டின் பெரும்பான்மையின் அரசியல் தலைவர்கள் பொதுவாகவே பேரின வாதச் சிந்தனைகளுக்கு ஆட் பட்டவர்கள். ஆயினும், பொதுக் கட்டமைப்பு விடயத்தில் சில அரசியல் தலைவர்கள், என்றும், யாரும் எதிர்பார்த்திராத உறுதியைக் காண்பித்து வருகின்றனர். அதேவேளை, "அந்த நாடகம் இந்த மேடையில் எத்தனை நாளம்மா?" என்ற பாடல் வரியும் நினைவுக்கு வராமல் இல்லை. வெளி நாடுகளின் அழுத்தங்களே அவர்களது இம்மன உறுதிக்கு அடிப்படை எனலாம். எவ்வாறாயினும், இந்த உறுதி வரவேற்கத்தக்கது. ஆனால் இதே உறுதியை எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் காட்டுவார்களா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம். பெரும்பான்மையின அரசியல் தலைவர்களை அவசரப்பட்டு நம்ப முடியாது என்பது இருபதாம் நூற்றாண்டு அரசியல் வரலாறு கற்றுத்தந்த பாடம். இது இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடரலாம். தேசிய நலனா, சுயநலமா? இதுவே இன்றைய கேள்வி. ❑


## 'வரதர் வெளியீடு'

எழுத்தாளர்களை அழைக்கிறது!

## இது ஓர் அரிய சந்தர்ப்பம் !


- 'இன்றைய இளைஞர்களின் நாளைய வாழ்வுக்காக' என்ற நோக்கத்தோடு பல சிறிய நூல்களை வெளியிடத் தீர்மானித் துள்ளோம்.
- இந்த நூல்களைப் படிப்பதனால் இளைஞர் களின் பொது அறிவு வளர்வதோடு, முக்கியமாக, தாங்களும் எதிர்காலத்தில் நல்ல பல சாதனைகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் உள்ளங்களில் துளிர்க்க வேண்டும். தாங்களும் ஒழுக்க சீலர்களாக, கற்றறிந்த சான்றோர்களாக எல்லோரும் போற்றும்படியாக வாழவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.
- உதாரணமாக – வாழ்க்கையின் அடிமட்டத் திலிருந்து தமது விடாமுயற்சியினாலும் திறமையினாலும் உச்ச நிலைக்கு வந்த சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறு களைச் சுருக்கி எழுதலாம். (வசனநடை வாசகரை ஈர்க்கவேண்டும்).
- சாதாரண புத்தக அளவில் 25 பக்கங்களுக்கு எழுதினால் போதுமானது.
- வெளியிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கட்டுரைக்கும் அதன் முதல் பதிப்பிற்காக மட்டும் ரூபா 1,000/=
சன்மானம் வழங்கப்படும்.
- கட்டுரையில் மூலப்பிரதிகளை வைத்துக் கொண்டு பிரதிகளை மட்டும் எமக்கு அனுப்புங்கள். உங்கள் கட்டுரை கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் அது வெளியீட் டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் உங்களுக்கு அறிவிப்போம்.
- இன்றைய இளைஞர்களின் எதிர்கால நலன்கருதி– ஒரு நல்ல சேவையாகக் கருதி இக்கட்டுரைகளை எழுதுங்கள்.

வரதர் வெளியீடு
226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 222 2820) அல்லது
84/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
(தொ.பே: 222 6164)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூல் : *இமயம்*
ஆக்கம்: *கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை*
வெளியீடு: *கடையியற்சுவாமி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம்.*
விலை : ரூ 150/=

**வா**னொலி நாடகம் கேட்கும் பழக்கம் உள்ளவர்கள் எல்லோரும் அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங் களைக் கேட்டிருப்பர். கடைசி ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நாடகத்தையாவது கேட்டிருப்பர்.

சுந்தரம்பிள்ளை இப்பொழுது பதினொரு மண்வாசனை நாடகங்கள் கொண்ட 'இமயம்' என்ற நாடக நூலை வெளியிட்டுள்ளார். அவரது வானொலி நாடகங்கள் சில இந்த நூலுக்காகவே அவர் எழுதியவை.

இலங்கையில் முதல் முதலாக மண்வாசனை நாடகங்களை எழுதியவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த க. கணபதிப்பிள்ளை தான் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நாடகங்களைத் தயாரித்து இலங்கை முழுவதிலும் மேடையேற்றியவர் கலாநிதி வித்தியானந்தன். சுந்தரம்பிள்ளை அந்த நாடகங்களில் நடித்தவர். எனவே அவர் இலங்கை மண்வாசனை நாடகங்களின் தொடக்கத்துடன் தொடர்பு கொண்ட வராகிறார்.

அதன் பிறகு அவர் இருபது ஆண்டுகளில் 25 நாடகங்களை எழுதி மேடையேற்றினார். 1980 ஆம் ஆண்டி லிருந்து இலங்கை வானொலிக்கு நாடகம் எழுதி வருகிறார். "புலிகளின் குரல்" வானொலிக்கும் நாடகங்கள் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய நாடகங்கள் மொத்தம் 400. அவை எல்லாமே இந்த நாட்டு மக்களினதும் சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற மண்வாசனை நாடகங்கள் என்று அழைக்கப்படும் நவீன நாடகங்களாகும்.

இதுவரை அவர் வெளியிட்ட நாடகநூல்கள் பதினொன்று. மேலும் அந்தவகை நாடகங்களை எழுதும் கலையை மற்றவர்களும் கற்றுக் கொள்ளட்டும் என்ற பெருநோக்குக் காரணமாக 'நாடகம் எழுதுவது எப்படி?' 'வானொலி நாடகம் எழுதுவது எப்படி' என்ற இரு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

பாட நூல்களில் போடப்பட்டுள்ள நாடகங்கள் மாணவர்கள் நாடகம் கற்பதற்குப் பொருத்தமற்றவை. பல்கலைக்கழகத்திலும் அத்தகைய நாடகங்களையே கற்பிக்கின்றனர். எனவே மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான நாடகங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காகவே நவீன நாடகங்கள் கொண்ட இமயம் நூலை வெளியிட்டுள்ளதாக ஆசிரியர் கூறுகிறார்.

நூலில் உள்ள நாடகங்கள் வருமாறு:

1) நல்ல குடும்பம்
2) கொழும்புக்குப் போவம்
3) தொழில் 4) நகை
5) ஒலிபெருக்கி 6) நொண்டிகள்
7) உயிர்காக்கும் பணி
8) கடிதங்கள் 9) ஓட்டம்
10) ஒருவாத்தியார் பென்ஷன் எடுக்கிறார்
11) இமயம் எல்லாமே இலங்கை வாழ் மக்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற யாழ்ப்பாணத்து மண்வாசனை வீசுகின்ற நாடகங்கள். கல்வியோடு ஏதோ ஒரு வகையில் தொடர்புள்ளவை. பெரும்பாலான நாடகங்களில் மாணவர்களே பிரதான பாத்திரங்களாக வருகின்றனர். எனவே எல்லாமே மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான நாடகங்களே!

இவற்றுடன் நவீன நாடகம் என்றால் என்ன? இலங்கை மண்வாசனை நாடகத்தின் வரலாறு, ஆகிய இரு கட்டுரைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன. இவ்வளவு அறிவும் அனுபவமும் உள்ள சுந்தரம்பிள்ளை இந்த நூலை வெளியிட முன்வந்தது இலங்கை தமிழ்பேசும் மக்கள் செய்த பெரும்பேறே என்றுதான் சொல்ல வேண்டும்! மாணவர்களும் ஆசிரியர்களும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக. இந்த நூலை வாங்கி ஆதரவு நல்கினால், சுந்தரம்பிள்ளையைக் கொண்டு இது போன்ற இன்னும் பல நூல்களை எழுதுவிக்கலாம்.

**- எஸ். பத்மராஜா *B.A***

★★★




நூல் : நந்திக்கொடி
ஆக்கம் : வாகரைவாணன்
வெளியீடு : 'ஆரணியகம்' நாவற்குடா, மட்டக்களப்பு'
பதிப்பு : வணசிங்கா பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு
விலை : ரூ 100/=

"மட்டக்களப்பு மண்ணிலிருந்து வெளிவரும் முதல் வரலாற்று நாவல் இது" என்று இந் நூலாசிரியர் வாகரை வாணன் தெளிவாகக் கூறிய கூற்று உண்மை என ஏற்றுக் கொள்ள வைத்து... தமிழர் போற்றுகின்ற நந்திக்கொடியை தனது வரலாற்று நூலுக்கு பெயராகக் கொண்டு ஈழத்து வரலாற்றைப் புதிய கோணத்தில் நின்றுகொண்டு நோக்குகின்றார் ஆசிரியர்.

இலங்கை வரலாற்றைத் திரிவுபடுத்தி தமிழ் மன்னர்களையும் தமிழர் வாழ்ந்த பூமியையும் சிங்களமயமாக்கி எழுதப்பட்ட மகாவம்சம், சூலவம்சம் கூறும் பொய்யான தகவல்கள் தமிழ் மாணவர்களின் பாடநூல்களில் திணித்து அவைதான் இலங்கையின் உண்மையான வரலாறு என்று பாடவிதானக் குழுவினர் பெரிய காரியங்களை சாதித்துவிட்டோம் என்று தம்பட்டமடித்துக் கொண்டு இதைத் தட்டிக்கேட்க திராணியற்று நிற்கின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் மிகத்துணிவுடன் நந்திக்கொடி ஏற்றி பெருமையுடன் உயர்ந்து நின்ற தமிழ் மன்னர்களை கதாநாயகர்களாகக் கொண்டு வரலாற்று நாவலைப் படைத்த வாகரை வாணனைப் போற்றாமலிருக்க முடியாது. சிங்கள வரலாற்று நூல்களில் தாழ்த்தி எழுதப்பட்ட எம் தமிழ் மன்னர்களை எம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தி அவர்களின் உண்மையான வீரச் செயல்களை இந்நூலாசிரியர் எடுத்தியம் பியுள்ளார். இருந்தபோதிலும் சில இடங்களில் சில சம்பவங்களை மிகைப்படுத்திக் கூறுவதாகவே தெரிகின்றது. அதை நூலாசிரியரே "கதை நன்கு கமகமக்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே எனது கற்பனைப் பூக்களையும் மலர விட்டிருக்கிறேன்" என்பதிலிருந்து புலனாகின்றது. இந்தியாவின் கலிங்கத்தைச் சேர்ந்த மாகன் என்னும் மாவீரன் 13 ஆம் நூற்றாண்டின் (1215–1259) ஆரம்பத்தில் இந்நாட்டைக் கைப்பற்றி ஜனநாதமங்கலம் என்று பெயர் சூட்டப்பட்ட பொலன்நறுவையில் அரியணை ஏறி ஆட்சி நடத்தினான். ஜனநாதமங்கலத்தில் மாகனின் ஆட்சி கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கையில் தமிழரின் பரம்பரைத் தாயகமான இன்றைய வடக்குக் கிழக்குப் பெருநிலம் முழுவதையும் தனது நந்திக்கொடியின் கீழ் ஒன்றிணைத்து ஆண்ட அவனது ஆட்சியில் கலிங்கரும், தமிழரும் கைகோத்து நின்றனர்.

ஜனநாதமங்கலத்தில் மாகனால் ஏற்றப்பட்ட நந்திக்கொடி நல்லூர் (யாழ்ப்பாணம்), கோகர்ணம் (திருகோண மலை), மண்முனை (மட்டக்களப்பு), சிங்கைநகர் (வன்னி) ஆகிய பிரதேசங்களிலும் பெருமிதத்துடன் உயரப்பறந்துகொண்டிருந்தது என்பது வரலாற்று உண்மை. அதனால்தான் என்னவோ நந்திக்கொடி தமிழர் கொடியாயிற்று. நளவெண்பாவில் காணப் படுகின்ற இயற்கை வர்ணனைகளுக்கு ஒத்தவிதமாக ஆசிரியரின் இயற்கை வர்ணனை அமைந்திருப்பது நோக்கற் பாலது.

'ஒளியின் மறைவினால் கலங்கிய உலகம் கரிய இருட்போர்வையால் தன்னை இழுத்துப் போர்த்துக் கொள்கிறது. இதனால் வழி தெரியாத பறவைகளும், கறவைகளும் புலம்புகின்றன. சமுத் திரமும் தன்னை அடக்க முடியாது பொங்கி எழுகின்றது'

'அந்தச் சமயத்தில் சேவல்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கூவுகின்றன. அதைத் தொடர்ந்து நாய்கள் ஊளை யிடுகின்றன'. (நரிகள் ஊளை யிடுகின்றன என்று கூறியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்)

மாகனின் வெற்றியைத் தொடர்ந்து ..... நகரம் எங்கும் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுக்கின்றது. இள நங்கை யர்கள் நடனமாடுகின்றனர். புலவர்கள் வாழ்த்துப்பா புனைகின்றனர். மங்கள நாதம் எங்கும் முழங்குகின்றது.

'காற்று இங்கு கவரிவீசும், ஆறும் கடலும் ஆலாபனை செய்யும், அலையில் படகுகள் அரபிக் குதிரைகள் ஆகும். நீரின் கீழே நின்று மீன்கள் நெஞ்சுருகப்பாடும். நண்டு கடற்கரையில் நடை பழகும்'.

'தாமரைப் பெண்கள் காலையிலேயே தடாகங்களில் நீராடும் இந்த இனிய காட்சியைக் காணச் சூரியன் எங்கிரு ந்தோ ஓடிவருவான். கொக்குகளும் குளக்கரையில் வந்து குந்தும். வண்டுகளும் வரிசையிலே வரும்'

போன்ற இயற்கை வர்ணனைகள் இந்நாவலுக்கு மெருகூட்டி நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைமட்டுமன்றி... "அவர் எவ்வளவு பலமுள்ளவராக இருந்தாலும் நாட்டின் நிலைமை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கான மூலகாரணம் இன்று நிலவும் அதிகாரப் போட்டிதான். இந்தப் போட்டியால் தேசம், பல்வேறு துண்டுகளாகச் சிதறிவிட்டது. குடிமக்களைப் பற்றி யாருமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சுக்கான் இல்லாத படகுபோல் நாடு தத்தளிக்கிறது. பஞ்சம், பசி, நோய் மற்றும் இடம்பெயர்வுகளால் தினமும் நாடு அழுது புலம்புகிறது" என்று அக்காலத்தில் இருந்த நிலைமைகளை தனது வரலாற்று நாவலில் குறிப்பிடும் ஆசிரியர் இன்றைய நிலையையும் சிந்திக்கத் தவறவில்லை போல் தெரிகின்றது.


வரலாற்று உண்மைத் தன்மையும், தமிழ் மன்னர்களின் வீரதீரச் செயல்களைப் புகழ்ந்தும் தனது மனத்திலுள்ள ஆதங்கங்களையும் எழுத முனைந்த ஆசிரியர் தன் நாவல் மூலம் முழுமையைத் தராவிட்டாலும், தற்காலத்திற்கு வேண்டப்படுவதை வெளிக் கொணர்ந்துள்ளார் என்று கூறலாம். நம் வருங்காலச் சந்ததியினர் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் வாகரை வாணன் எழுதிய 'நந்திக் கொடி'

**- தேடலோன்**

★★★

நூல் : வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி (வானொலி நாடகங்கள்)
ஆக்கம் : சோ. பரமசாமி
வெளியீடு : தாவடியூர் பரமு வைத்தியர் நினைவு வெளியீடு
பதிப்பு : திருமகள் அழுத்தம், சுன்னாகம்
விலை : ரூ 150/=

இணுவிலைப் பிறப்பிடமாகக்




கொண்ட திரு. சோ. பரமசாமி அவர்கள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. ஓய்வுபெற்ற அரச மொழிபெயர்ப்பாளர். 1969 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட நாடகங்களின் தொகுப்பே "வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி" என்ற இந்த நூலாகும். பொய்யா மொழிப்புலவரின் உழவு என்ற அதிகாரத்தில் உள்ள பத்து குறளையும் தனது கருப் பொருளாகக் கொண்டு அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவகையில் கிராமியப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக இருக்கும் உழவுத் தொழிலையும், அதன் வளர்ச்சிக்குக் கையாளவேண்டிய நடை முறைகளையும் தன் கதாபாத்திரப் படைப்புக்கள் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார்.

உயர்கல்வி பெற்ற இளைஞர்கள் அரச தொழில் கிடைக்கவில்லையே என்று துவண்டிருந்த காலப்பகுதி. படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வீட்டுக்கும், நாட்டுக்கும் பெருமைதேடிக் கொடுக்கவேண்டும் என்ற கொள்கையில் பற்றுறுதி கொண்ட நூல் ஆசிரியர் திருக்குறளை உசாத்துணையாகக் கொண்டு தமது செழுமையான கருத்துக்களை மக்கள் மனதில் விதைத்துள்ளார். வானொலி கிராமிய நிகழ்ச்சியில் இவருடைய நாடகங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்பப்பட்டபோது வானொலி இரசிகர்களாலும், கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாலும் பெரிதும் விரும்பி வரவேற்கப்பட்டன.

கதாபாத்திரங்களின் உரையாடல்கள் மூலம் செவிப்புலனாகவே கேட்கும் வாய்ப்பு வாசகர்களுக்கு ஏற்பட்டு, நாடகத்தை இரசித்து மகிழ்வதற்காக உருவாக்குவது என்பது சுலபமான காரியமல்ல. நாடக ஆசிரியரின் எழுத்துவல்லமையும் தயாரிப்பாளர்களின் முயற்சியும், நடிகர்களின் செயற்பாடும் வானொலி நாடகங்களின் வெற்றிக்குக் காரணமாக அமையும். அந்த வகையில் நாடக ஆசிரியர் தனது பணியை செம்மையாகச் செய்துள்ளார்.

வானொலி நாடகங்கள் பத்தையும் நூலுருப் பெறவைத்து இன்றைய சமுதாயம் அறிந்துகொள்ளும் வகையில் செயற்பட்டமை பாராட்டுக்குரியது. "தொன்மை மறவாமல், எமது பண்பாட்டின் விழுமியங்களை மதித்து அதன் வழிநின்று... குறள் காட்டிய வாழ்வியலை நவீன உலகுக்குச் சிறப்பாகக் காட்ட வேண்டும் எனக் கருதியதின் வெளிப்பாடே இந்த நாடகங்களாகும்.

கிராமிய வாழ்வுடன் ஒன்றறக்கலந்த நூலாசிரியர் கிராமத்து வாழ்வியலைத் தனது நாடகங்களூடாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றார். யாழ்ப்பாண மக்களின் பேச்சுவழக்கை கிராமிய மனம் கமழும் வகையில் கையாண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. பேச்சு வழக்கே நவீன இலக்கியங்களின் அடிநாதம். நற்றமிழ் வல்லமை கொண்ட நூலாசிரியர், இலகுமொழி நடையை, கிராமத்து மண்வாசனையை தான் படைத்த கதாபாத்திரங்கள் வாயிலாக உருவாக்கியமை போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

உழவே தலை, உழுவார் உலகத்தார்க்கு அணி, உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், உழவர் – அரசர் முதல் பலரையும் தம்கீழ் ஆக்குவர், இரப்பார்க்கு ஈவர், உழவோர் இல்லையாயின் துறவோர்க்கும் வாழ்வு இல்லை, புழுதியாக உழுத நிலத்துக்கு ஒரு பிடி எருவும் தேவையில்லை. நட்டதைப் பேண், நிலம் புலர்ந்து ஊடிவிடும், நிலம் எனும் நல்லாள் ஆகிய பத்து தலைப்புகளில் திருக்குறள் தழுவிய நாடகங்கள்" வானில் மிதந்த வாய்மொழியாக வெளிவந்துள்ளது.

**"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம் என்னும் நல்லாள் நகும்"**

தோண்டத் தோண்ட சுவையான நீரைச் சுரக்கும் திருக்குறள் என்னும் அமுதம், முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்தை எழுதி உருவாக்கவும் வழிசமைத்துள்ளமை மனங்கொள்ளத்தக்கதாகும். திரு.சோ. பரமசாமியையும் அவரது சேவையையும் ஈழத்து தமிழ் இலக்கியம் நினைவுகூரும்.


**– த. சிவா**

★★★

நூல் : குறள்வழி வாழ்வு
(இலகு தமிழில் 50 கட்டுரைகள்)
ஆக்கம் : வ. இராசையா
வெளியீடு : அரவிந்தம் வெளியீட்டகம்
விலை : ரூ 200/=

தமிழ்மொழிக்கும், தமிழர்தம் வாழ்வுக்கும் பெருமை சேர்க்கும் வகையில், திரு. வ. இராசையா என்னும் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் "குறள் வழி வாழ்வு" என்ற இந்நூலை எமக்குத் தந்துள்ளார். இந்நூலில் பொய்யா மொழிப்புலவரின் திருக்குறளில் பொதிந்திருக்கும் வாழ்வியல் கருத்துக் களைக் கருப்பொருளாகக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலகு தமிழில்50 கட்டுரைகளை இடம் பெறச் செய்துள்ளார். இக்கட்டுரைகள் கனடா நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற "சைவ சித்தாந்த மன்றம்" வெளியிடும் "அன்பு நெறி" என்ற சிறப்புமிகு சஞ்சிகைக்காக எழுதப்பட்டவை. அன்பு நெறியில் பிரசுரமான இக்கட்டுரைகள் நம் மண்ணில் நூலுருப்பெற்று வெளி வந்துள்ளது.

"இந்நூல் நமது சிந்தனையை நெறிப்படுத்தி வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி. ஆதலால், இந்த அரியநூலை நாங்கள் நுணுகி நோக்கி முழுமையாகப் படித்தல் வேண்டும்" என்ற ஆசிரியரின் கூற்று மனங்கொள்ளத்தக்கது.

*"இராசையன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான் புகழ்கொண்ட ஈழநாடு"*

என்று போற்றுகின்ற அளவுக்குப் பெருமை சேர்த்த ஆசான். சான்றோர்கள் பலரை உருவாக்கிய நல்லாசிரியன். அன்பும், கனிவும், இரக்க சிந்தனையும் கொண்ட சான்றோன்.

ஒலிபரப்புத்துறையில் நீண்டகால அனுபவமும், ஆற்றலும் மிக்க ஒருவராகத் திகழ்ந்தார். 'வானொலி அண்ணா'வாக இளைஞர் மன்ற நிகழ்ச்சிகளையும், 'வானொலி மாமா'வாக சிறுவர் மலர் நிகழ்ச்சியையும் தொடர்ந்து தயாரித்து வழங்கியவர். அதுமட்டுமல்லாமல் சிறுவர் இலக்கிய கர்த்தாவாகவும் இருந்து "சண்டியன் ஓநாய்", "சந்தணக் கிண்ணம்", "புதிய பூக்கள்" ஆகிய நூல்களை ஆக்கித் தந்துள்ளார்.

வாழ்வியல் அறம்பேணி நிற்கும் முற்போக்குச் சிந்தனையாளராகிய ஆசிரியர் வ. இராசையா அவர்கள் இனிய தமிழ் நடையில், ஆழ்ந்த வாழ்வியல் கருத்துக்களைத் தனது பல்துறை அனுபவ முதிர்ச்சியில் தெளிந்து நின்று 'குறள்வழி வாழ்வு' என்ற இந்த அருமையான நூலை சமுதாய நலன்கருதி வெளியிட்டுள்ளமை போற்றப்பட வேண்டிய பயன்தரும் விடயமாகும்.

உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகின்ற திருக்குறள் எல்லாவற்றையும் கடந்து காலத்தால் மறையாமல், எக்காலத்தில் வாழ்பவர்களும் ஏற்றுக் கொள்ளும் அறக்கருத்துகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இத்தகைய பெருமைமிக்க திருக்குறளின் ஐம்பது திருக்குறள்களை தெரிந்தெடுத்து சமூக வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி கட்டுரைகளாக எழுதியுள்ளமை பாராட்டுக்குரியது. இக்கட்டுரைகள் அத்தனையுமே முத்துக்கள். இந்நூலில் உள்ள "நாவுக்கு ஒரு காவல்" என்ற கட்டுரையை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

பண்டைய இலக்கிய நூலின் வாழ்வியற் பண்புகளை வருங்கால சந்ததியினரும் படித்து பயன் பெறும் வகையில் நூலாக ஆக்கி தந்த திரு. வ. இராசையாவை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறவாது. வாழ்க குறள்வழி வாழ்வு.

**-சிவசுப்பிரமணியம்**

❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

மதிப்பிற்குரிய 'ஞானம்' ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம்.

எழுத்தாளர் எஸ். பொ. குறிப்பிட்டுள்ள மலிவு எனும் சொல் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பிலும் வழக்கில் உண்டு. இதுபோல்தான் பம்பல் எனும் சொல்லும். ஆனால் இவ்விரண்டு சொற்களினதும் அர்த்தங்கள் வேறுவேறானவை. மலிவு ஒரு பொருளின் மதிப்பைக் குறைத்துக் காட்ட, பம்பல் ஒரு பொருளின் நிறைவை அல்லது அதிகரிப்பைச் சுட்டுகின்றது. இதிலிருந்து மலிவு (cheap) என்னும் சொல்லின் ஒத்த கருத்துள்ள சொல்லாக பம்பல் (plenty) எனும் சொல் மட்டக்களப்பில் பயன்படுத்தப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது.

வேண்டாம் எனும் சொல் பேச்சு வழக்கில் வேணும், வேணாம் (பாரதியும் காணி நிலம் வேணும் என்றே கேட்டான்) என்றே மட்டக்களப்பில் கையாளப்படுகின்றது. ஒண்ணும், ஒண்ணாது என்ற சொற்களுக்கு மட்டக்களப்புத் தமிழில் முடியும், முடியாது என்றே அர்த்தம்.

மாலை மயங்கி இருள் பரவும் நேரம் மட்டக்களப்பில் கருக்கல் என்றே வழங்கும். மகரி எனும் சொல்லை முஸ்லிம்கள் பயன்படுத்தக் கூடும்.

படலை, கடப்பு எனும் சொற்கள், மட்டக்களப்புக் கிராமங்களில் இன்றும் வழக்கில் உள்ளன. படலை என்பது வாசலின் அடைப்பு. இதனை gate என்று சொல்லலாம். கடப்பு என்பது வாசல். (கடப்பது, கடப்பு) இதற்குப் படலை இல்லாமலும் இருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பிலும் கத்தரிக்காய் என்ற சொல்லுக்குப் பஞ்சமில்லை. வழுதுணங்காய் (வழுதளங்காய் அன்று) வழக்கிழந்த சொல். யாழ்ப்பாணத்தில் கொச்சிக்காயை மிளகாய் (மிளகு போல காரமாய் இருப்பதால்) என்று குறிப்பிடுதல் பெருவழக்கு. ஆனால் மட்டக்களப்பு அதனை கொச்சிக்காய் என்றே குறிப்பிடுகின்றார்கள்.

கந்தல் (கந்தை அன்று) எனும் சொல்லுக்குக் கெட்டது குற்றம் என்று பொருள். எனவே கந்தல் பார்த்தல் என்பது நல்லதில் இருந்து கெட்டதைப் பிரித்து எடுத்தல் ஆகும்.

மட்டக்களப்பிற்கும் கேரளத்திற்கும் (மலையாளம்) நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டு. கேரளம் என்றால் தென்னை என்று பொருள். மட்டக்களப்பும் தென்னை மரத்தேசம்தான்.

இதுபோன்று, யாழ்ப்பாணத்திற்கும் பாண்டிய நாட்டிற்கும் இறுக்கமான வரலாற்று உறவு இருக்கிறது. பாண்டிய நாடு போல யாழ்ப்பாணமும் பனைமரத்தேசம் அல்லவா?

மேலும், முல்லைமணி அவர்கள் தமது கட்டுரையில் (ஞானம் மே இதழ்) நவீனம் எனும் சொல் புதுமையைக் குறிக்கும் என்கிறார். இது எப்படி? நவீனம் எனும் சொல் 'நவ' எனும் சமஸ்கிருதச் சொல்லின் அடியாகப் பிறந்தது. இதற்குப் புதிது, புதியது என்றே அர்த்தம்.

'நவ' எனும் சமஸ்கிருதச் சொல் போல் Novus எனும் லத்தீன் சொல்லும் (இந்த மொழி இரண்டும் இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை) புதிது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Newness) என்னும் அர்த்தத்தையே கொண்டுள்ளது. இச் சொல்லின்(Novus) அடியாகவே Novel (நாவல்) எனும் ஆங்கிலச் சொல் உருவானது. நாவல், புதினம் என்று அழைக்கப்படுவதும் இக் காரணம் பற்றியே.

புதுமை எனும் சொல் ஆங்கிலத்தில் Miracle (mirus லத்தீன்) என்று பொருள் தரும். இதனை (புதுமை) அற்புதம் என்றும் சொல்வர்.

கல்விமான்கள் இருவரும் (எஸ்.பொ, முல்லைமணி) நான் மேலே தந்துள்ள கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வார்களாக. தவறு எனில் தக்க ஆதாரங்கள் தருவார்களாக!

**- வாகரைவாணன்**

❊ ❊ ❊

---

*எஸ். பொவின் 'வலை' நாடகம்*

பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை ஞானம் நேர்காணலில் (ஜனவரி 2005) தான் எழுதித் தயாரித்த 'வலை' நாடகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

"வலை என்றொரு நாடகத்தை மாணவர்களுக்காக எழுதித் தயாரித்திருந்தேன். இந்த நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்புவதற்காக அனுப்பப்பட்டது. அந்தப் பிரதியைப் பார்த்த சானா நிச்சயமாக இதனை மேடையேற்ற வேண்டும் என்று தீர்மானித்து அந்த நாடகத்தை மேடைக்கு ஏற்றதாக அமைக்கும் பணியில் என்னுடன் சேர்ந்து... திருத்தியமைத்தார். வலை நாடகம் மூன்று தடவைகள் சானாவின் மேற்பார்வையில் மேடையேற்றப்பட்டது. அந்த வலை நாடகந்தான் பின்னர் நிர்மலா தயாரித்து ஏ. ரகுநாதன் அவர்களால் தத்தெடுக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு பல்வேறு கல்லூரி மண்டபங்களில் நிகழ்த்தப்பட்ட நாடகம் 'வலை' தான் " என்கிறார் எஸ். பொ.

இந்த நாடகத்தின் கையெழுத்துப்பிரதி 1964 ஆம் ஆண்டு இலங்கைக் கலைக்கழக நாடகப்பிரதிப் போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அது மாணவருக்கென எழுதிய மூலப்பிரதியா அல்லது சானாவால் திருத்தப்பட்ட பிரதியா என்பது தெரியவில்லை. நாடகப் பிரதிப் போட்டியில் முத்துசிவஞானத்தின் 'சேரன் சமாதி' முதலாம் பரிசையும் எனது பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் இரண்டாம் பரிசையும் எஸ். பொவின் 'வலை' மூன்றாம் பரிசையும் பெற்றன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பரிசளிப்பின்போது எஸ். பொ வெகு அலட்சியமாக அப்பரிசைப் பெற்றதை நான் அவதானித்தேன். பிரபல எழுத்தாளரான தனக்கு மூன்றாம் பரிசா என்று அவர் எண்ணியது போல் எனக்குப்பட்டது.

இவற்றையெல்லாம் எஸ். பொ தனது பேட்டியில் ஏனோ குறிப்பிடவில்லை.

நான் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலப்பகுதியில் (1977 – 1986) கலாசாலையில் ஆண்டுதோறும் நடைபெறும் முத்தமிழ் விழாவிற்கு முதலில் சொக்கனும் பின்னர் நானும் வித்துவான் சி. குமாரசாமியும் பொறுப்பாக இருந்தோம். சொக்கன் ஆசிரியகலாசாலையை விட்டு விலகிய பின் நானே முத்தமிழ் விழா நாடகத் தயாரிப்புக்குப் பொறுப்பாக இருந்தேன். பொருத்தமான நாடகப்பிரதியைத் தேடிச் சென்றபோது (சிதையாத செல்வம், வெற்றித் திருநகர், வாசகத்தை நாடகப் பிரதிகளை ஏற்கனவே நானே எழுதித் தயாரித்துள்ளேன்) எஸ். பொவின் 'வலை' நாடகம் நூலுருவில் கிடைத்தது. நாடகம் எனக்குப் பிடித்திருந்தபடியால் நானே இந்த நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றினேன். நாடகம் ஒரு வெற்றிப்படைப்பு எனப் பலராலும் பாராட்டப்பட்டது. இந்த நாடகத்தில் சாணக்கியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்தை ஏற்றுச் சிறப்பாக நடித்த கே. செல்லத்துரை இன்றும் என் கண்முன் நிற்கிறார். இவர் தற்போது டென்மார்க்கில் வாழ்கிறார். கே. எஸ். துரை என்னும் பெயரில் இரண்டு நாவல்களையும் ஒரு சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார்.

நான் கோப்பாயில் 'வலை' நாடகத்தை மேடையேற்றியது எஸ். பொவுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஈழத்து நாடக வரலாறு எழுதுபவர்கள் பல நாடகப்பிரதி எழுத்தாளர்களையும், தயாரிப்பாளர்களையும் பற்றித் தெரியாமலேயே எழுதிவிடுகிறார்கள். ஈழத்தின் பல பாகங்களிலும் இடம்பெறும் நாடக முயற்சிகளை தேடிப் பதிவு செய்ய வேண்டும் என்ற அக்கறை வரலாறு எழுதுபவர்களுக்கு இல்லை என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

**- முல்லைமணி**

❊ ❊ ❊

---

ஞானம் இதழ் 61 கிடைத்தது. மூத்த எழுத்தாளரும் கலைஞருமான முல்லை மணி அவர்களது கடிதம் இந்தக் கருத்தை எழுதத் தூண்டியது.

ஒரு படைப்பாளியானவன் தனியே படைப்பாளியாக, எழுத்தாளனாக இருக்க வேண்டும். அதற்குரிய மனநிலையில் வாழும்போதுதான் அவனால் ஆக்கபூர்வமான, காத்திரமான படைப்புகளைத் தர முடியும். அவன் வெளியீட்டாளனாகுவதில் தவறு இல்லை. ஆனால் தான் வெளியிட்ட நூல்களை விற்க முற்பட்டு அல்லலுறும் வேதனைகள்தான் படைப்புத் தொழிலில் இருந்து அவனைத் தூர எறிந்து விடுகின்றன. அதனையே முல்லை மணி அவர்களின் சில குறிப்புகளாகக் காண முடிந்தது. அவை யதார்த்தமானவை.

இதனை மாற்றி அமைக்க வேண்டும். மாற்றுவதானால் என்ன செய்யலாம்? வாசகர்களை மட்டும் நம்புகின்ற ஒரு நூல் விநியோக வலையமைப்பைச் செயற்படுத்த வேண்டும். அது எப்படி?

தமிழகத்தில் வேண்டுமானால் அரச சார்பு நிறுவனங்கள், நூலகங்கள் தமிழ் நூல்களைத் தவறாது கொள்வனவு செய்யலாம். ஆனால் எமது நாட்டில் அது எதிர்பார்க்க முடியாத ஒன்று. தமிழக நிறுவனங்களும் இங்கிருந்து நூல்களைக் கொள்வனவு செய்யும் ஏற்பாடு இல்லை.

ஆனால் இங்கிருக்கின்ற நூலகங்கள், கல்வி நிறுவனங்கள் வியாபார, இலாப நோக்கு நிலைகளுக்கு உட்படுவதால் எமது எழுத்தாளர்களின் நூல்களை வாங்க அக்கறை காட்டுவதில்லை.

ஆனால் எமது நாட்டில் போதிய வாசகர்கள், தேடல் உள்ளவர்கள் இருக்கின்றனர். அவர்களிடம் நூல்களைக் கொண்டு செல்வதுதான் இன்று எம் முன்னால் உள்ள பணி ஆகும்.

இன்று இலத்திரனியல் ஊடகங்களின் ஆதிக்கத்துள் அமிழ்ந்து போய்க் கிடக்கும் எம்மவருக்கு நூல்களை வாங்கி வாசிக்க எங்கே நேரம் இருக்கப் போகின்றது? என்ற கேள்வி எழுகின்றது.

சின்னத் திரைத் தொடர்களின் ஆதிக்கம் என்பது உண்மைதான். அந்தப் பார்வையாளர்களுக்கு தாம் ஆட்கொள்ளப்பட்டுள்ள 'போதை' பற்றிய அறிவு தெளிகிறது. இந்த இடத்தில் அதற்கு ஒரு 'மாற்று' தேவைப்படுகின்றது.

அந்த 'மாற்றை' நூல்களே தர முடியும். நல்ல நூல்கள் போதை தருவன அல்ல. விதம் விதமான சுவையுடைய அறிவுத் தேடல்களை வளர்ப்பன. வக்கிரங்களை வளர்ப்பன அல்ல. நல்ல மானுட ஆன்மீகத்தை மேம்படுத்துவன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகு நூல்களை தரம் கண்டு தெரிவு செய்து, மாதம் ஒரு நூல் என்ற அடிப்படையில் வாசகர்களைச் தேடிச் சென்று கொடுக்க இருக்கிறது தேசிய கலை இலக்கியப் பேரவையின் புத்தகப் பண்பாட்டிற்கான பயணம். நூலைக் கொடுப்பது மட்டுமல்ல படிக்க அவகாசமும் கொடுத்து, கூடிக் கலந்து பேசி நூல் பற்றிய கருத்துரைகளையும் வெளிக் கொணரவுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் 10 பேர் கொண்ட புத்தகப் பண்பாட்டுக் குழு அமையும். அவர்கள் ஒவ்வொருவரும் தமது தொடர்பாடலுக்கு உரியவர்களாக தலா 10 பேரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

வெளியீட்டாளருடனிருந்தோ, எழுத்தாளருடனிருந்தோ நூல்கள் பெறப்பட்டு இந்த குழுக்களின் ஊடாக விநியோகிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் இந்த 10 பேர் அடங்கிய குழு கூடி, முன்னரே தாம் பெற்று வாசித்த குறித்த நூல் பற்றிய கருத்தாடலை நிகழ்த்த வேண்டும்.

இங்கே மாதம் ஒரு நூல் சிறிய தொகை கொடுத்து வாங்குவது யாருக்கும் சிரமமாக இருக்கப் போவதில்லை. மாதத்தில் இரண்டு மணித்தியாலங்கள் தாம் படித்த நூல் பற்றிப் பேசுவதில் சிரமம் இருக்கப் போவதில்லை.

மொத்தத்தில் எழுத்தாளன் தான் எழுதிய நூலை, பதிப்பித்து கடை கடையாக எடுத்துச் சென்று அவமானப்பட வேண்டியதில்லை. நூல் விநியோகம் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமலே அவன் எழுத்துப் பணியில் இறங்க முடியும்.

ஆனால் ஒன்று வெளியீட்டாளர்கள் நூலாசிரியரிடம் அவருக்குரிய உரிமைப் பணத்தைக் கொடுத்து பிரதியைப் பெற்று நூலை வெளியிடும் பண்பாடு இதனூடாக மலர வேண்டும். இதனை தேசிய கலை இலக்கியப் பேரவை இதுவரை செய்து வருகின்றது.

நூல் வெளியீட்டுத் துறை போலவே நூல் விநியோகத்திலும் புத்தகப் பண்பாட்டை முன்னெடுத்துச் செல்ல நூலாசிரியர்கள், வெளியீட்டாளர்கள், வாசகர்கள் எம்முடன் இணைய வேண்டும்.

**- மாவை வரோதயன்**

❋ ❋ ❋

---

செம்பியன் செல்வன் அவர்கள் எனது நூலிற்கான விலையை தான் சுகவீனமுற்று வைத்தியசாலையிலிருந்த சமயத்திலும் தங்களிடம் செலுத்தியமை பற்றி தங்கள் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தமை எனது கண்ணீரை வரவழைப்பதாக இருந்தது! அதே போன்று 'நந்தி' அவர்களும் தான் சுகவீனமுற்றிருந்த வேளையிலும் எனது நாவலுக்கு அன்பளிப்பாக நூலின் விலையின் இரண்டு மடங்கினை காசோலையாக எனக்கு அனுப்பி வைத்தமை இலக்கியத் துறை சார்ந்த அவர்கள் இருவரினதும் பேரார்வத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இருவருமே இன்று எம்முடன் இல்லை என்பது இரட்டிப்பு கவலையாக அமைந்துள்ளது. சாஹித்திய விருதினைப் பெற்ற இவ்விருவருமே உயர் பதவிகளை வகித்தபடியே இலக்கிய சேவையை ஆற்றியவர்கள். ஆனாலும் அவர்கள் பலராலும் அறியப்படும் நிலைக்கு காரணமாக அமைந்தது அவர்தம் இலக்கிய பணியே என துணிந்து கூறலாம்.

'நந்தி' அவர்களின் மரணச் செய்தி பற்றி வானொலியில் செய்தி வெளியாகிய போது பிரபல சிறுகதை நாவலாசிரியர் என குறிப்பிடப்பட்டமையை எனது கருத்துக்கு ஆதாரமாக கூறலாம்.

ஈழத்து இலக்கிய உலகில் மிக ஆழத் தடம் பதித்த இருவருக்கும் எனது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறேன்.

**- வீ. என் . சந்திரகாந்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANAM

*With Best Compliments From*

# Luckyland Biscuit Manufacturers

## Kundasale.


| | | |
|---|---|---|
| **Phone** | **:** | **081 - 2420217** |
| | | **081 - 2420574** |
| | | **081 - 2227041** |
| **Fax** | **:** | **081 - 2420740** |
| **E-Mail** | **:** | **Luckyland@shnet.ik.** |



இச் சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களால் இல. 48 பீ. புளூமெண்டால் வீதி, கொழும்பு 13
யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org